**சு.து.ந.க.எண்.சி1/1329/1997**
**ஆணையாளர் அவர்களின் 22.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :58/2010 பொருள் எண்.1

**பணிவரன்முறைப்படுத்த அனுமதி**

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறையில் 1999-ம் ஆண்டில் உதவி சுகாதார அலுவலர் பதவி காலியாக இருந்ததால் தினசரி பத்திரிகை விளம்பர மூலம் செயல்முறை ஆணை எண்.சு.து.ந.க.எண்.சி1/1329/1997, நாள் 03.07.1999-ன்படி திருவாளர்கள் (1) டாக்டர். ஜி. சீனிவாஸ் (2) டாக்டர். எம். ஜெகதீசன் (3) டாக்டர். ராஜசேகரன் மற்றும் (4) டாக்டர். ஜி. ராஜ்குமார் ஆகிய 4 நபர்கள் உதவி சுகாதார அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டனர். இவர்களில் டாக்டர். ஜி. சீனிவாஸ் என்பவர் பணியில் சேரவில்லை.

அரசாணை (ப) எண்.375 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை நாள் 09.08.2007-ல் மேற்படி 3 உதவி சுகாதார அலுவலர்களின் பணி நியமனத்திற்கு அரசு உறுதியாக்கம் வழங்கி அரசாணை வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, மன்றத் தீர்மான எண்.254/2008, நாள் 19.06.2008-ன்படி டாக்டர். ஜி. ராஜ்குமார் என்பவருக்கு மட்டும் உதவி சுகாதார அலுவலர் பதவியில் 16.07.1999 முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டது. மற்றொரு நபரான டாக்டர் எஸ். ராஜசேகரன், என்பவர் 31.12.2001ல் பணிதுறப்பு செய்ததால் இவருக்கு பணிவரன்முறை படுத்தப்படவில்லை. மற்றொரு உதவி சுகாதார அலுவலரான டாக்டர். எம். ஜெகதீசன் என்பவருக்கு பணிவரன்முறைப்படுத்தவில்லை.

எனவே, சென்னை மாநகராட்சி பொது சுகாதார துறையில் உதவி சுகாதார அலுவலராக 11.08.1999 முதல் பணி நியமனம் செய்யப்பட்ட டாக்டர். எம். ஜெகதீசன் என்பவருக்கு இவர் பணியில் சேர்ந்த நாளான 11.08.1999 முதல் பணிவரன்முறைப்படுத்த நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/2802/2009**
**ஆணையாளர் அவர்களின் 09.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :59/2010 பொருள் எண்.2

**பணிவரன்முறைப்படுத்தல்**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் காலியாக உள்ள 35 மருத்துவ அலுவலர் காலிப்பணியிடங்களை நிரப்ப ஆணையாளர் அவர்களின் உத்தரவுக்கு இனங்க வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் மருத்துவ அலுவலர்கள் பெயர் பட்டியல் பெறப்பட்டு பின்பு நேர்காணல் நடத்தப்பட்டு 5 மருத்துவ அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட கீழ்கண்ட 5 மருத்துவ அலுவலர்களுக்கு ரூ.8000-275-13500 என்ற காலமுறை ஊதியம் மற்ற இதர படிகளுடன் அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு, மன்றத்தின் ஒப்புதலுடன் (மன்றத் தீர்மானம் எண்.552/07, நாள் 29.10.2007) பணியமர்வு செய்து 13.11.2007 நாளிட்ட மா.கு.ந.எண்.எப்4/2808/2007ல் செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

| வ.எண். | பெயர் மற்றும் வேலை வாய்ப்பு பதிவு |
|---|---|
| 1. | டாக்டர். எஸ். கீதா 1996 F 06808 SF 18.09.1996 |
| 2. | டாக்டர். சி.எச். விஜயா 1997 F 01076 SF 24,02,1997 |
| 3. | டாக்டர். பி.ஜி. மணிமேகலை 1999 F 14221 SF 02.12.1999 |
| 4. | டாக்டர். இ. பிரேமலதா 2000 F 3265/2000 06.04.2000 |
| 5. | டாக்டர். எ. சமீரா தபாசம் 1999 F 0176 SF 17.02.2009 |

மேற்கூறிய 5 மருத்துவ அலுவலர்களுள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள 3 மருத்துவர்கள் மட்டும் பணியில் சேர்ந்தனர்.

| வ.எண். | மருத்துவ அலுவலரின் பெயர் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 01 | டாக்டர். சி.எச். விஜயா | 14.11.2007 |
| 02 | டாக்டர். பி.ஜி. மணிமேகலை | 14.11.2007 |
| 03 | டாக்டர். எ. சமீரா தபாசம் | 15.11.2007 |

இம்மூன்று அலுவலர்களுக்கும் தற்காலிகமாக அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டதற்கு சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 பிரிவு 85(3) (பி)ன்படி அரசின் உறுதியாக்கம் பெறப்பட வேண்டும்.

அரசு ஆணை (நிலை) எண் 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள் 06.10.2009ல் சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகைப்படுத்தப்பட்டுள்ள வகுப்பு-II பதவிகளை பணிநியமனம் செய்தபின்பு அரசின் உறுதியாக்கம் வழங்கும் அதிகாரத்தினை சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அதிகார பங்களிப்பு அளித்துள்ளது. இவ்வதிகார பங்களிப்பினை தொடர்ந்து மேற்படி 3 அலுவலர்களுக்கும்

1. மருத்துவ அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டதற்கு உறுதியாக்கம் வழங்கவும்,
2. அவரவர் முறையே மருத்துவ அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்தவும்,

நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**மி.து.ந.க.எண்.அ4/3092/09**

**ஆணையாளர் அவர்களின் 22.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :60/2010 பொருள் எண்.3

**பணிக்கு வராத காலம் வரன்முறைப்படுத்தல்**

திரு. என். சுப்பிரமணியன், உதவி கோட்ட பொறியாளர் / தொழில்நுட்பம் அவர்கள் 10.12.1997 முதல் மின்துறையில் உதவி கோட்ட பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். இவர் 01.07.2007 முதல் எவ்வித முன்னறிவிப்பு இன்றி பணிக்கு வராமல் இருந்துள்ளார்.

சென்னை மாநகராட்சி பணிவிதியின் 10(b) of Chennai Corporation service (Classification, Control and Appeal) Rule 1968 படி தனியருக்கு குறிப்பாணை 29.04.2008 அன்று வழங்கப்பட்டது. தனியர் 09.05.2008 அன்று விளக்கக் கடிதம் சமர்பித்துள்ளார்.

ஆணையர் அவர்களின் 15.07.2000 நாளிட்ட ஆணைப்படி, நகரப் பொறியாளர் அவர்கள் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

மேலும் ஆணையர் அவர்களின் ஆணைப்படி தனியர் மீதுள்ள ஒழுங்கு நடவடிக்கையை நிலுவையில் வைத்து, மீண்டும் பணியில் சேர ஆணை வழங்கப்பட்டு தனியர் 21.07.2008 அன்று பணியில் சேர்ந்துள்ளார்.

நகரப் பொறியாளர், விசாரணை அதிகாரியின் அறிக்கை 01.07.2009 அன்று பெறப்பட்டது. ஆணையர் அவர்களின் 17.07.2009 தேதியிட்ட இறுதி ஆணைப்படி, ஒரு வருட காலத்திற்கு ஒரு ஊதிய உயர்வு நிறுத்தம் திரண்ட பயனின்றி அளிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

தனியர் பணிக்கு வராத காலமான 01.07.2007 முதல் 20.07.2008 வரை உள்ள காலம் ஓராண்டுக்கு மேல் உள்ளதால் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்ய மன்றத்தின் மூலமாக அரசின் அனுமதி பெற்று வரன்முறைப்படுத்திட வேண்டும்.

எனவே, திரு. என். சுப்பிரமணியன், உதவி கோட்ட மின்பொறியாளர்/ தொழில்நுட்பம் அவர்கள் முன் அறிவிப்பின்றி பணிக்கு வராத காலமான 01.07.2007 முதல் 20.07.2008 வரையிலான காலத்திற்கு பணிவரன்முறைப்படுத்திடவும் அடிப்படை விதி 18(2)ஐ தளர்வு செய்யவும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.2.ந.க.எண்.இ3/1090/2010**
**ஆணையாளர் அவர்களின் 28.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :61/2010 பொருள் எண்.4

**ஊக்க ஊதிய உயர்வு வழங்க அனுமதி**

திரு. பி.கே. ஆண்டவன், உதவி கால்நடை மருத்துவர், மண்டலம்-2 அவர்கள் 30 ஆண்டுகள் உதவி கால்நடை மருத்துவராக பணிபுரிந்து வருவதால் போனஸ் ஊதிய உயர்வு வழங்கிட வேண்டி 06.07.2009 நாளிட்ட கடிதத்தில் விண்ணப்பித்துள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சி பணியில் உதவி கால்நடை மருத்துவராக 19.10.1978 நாள் முதல் பணிபுரிந்து வந்துள்ள நிலையில் 30 ஆண்டுகள் பணி 29.06.2009 நாளன்று நிறைவு செய்துள்ளார்.

தனியர் தகுதிகாண் பருவம் முடித்தவராக 26.10.1980 நாள் முதல் அறிவிக்கப்பட்டும் தனியரின் பணி பொ.து.ந.க.எண்.எ4/75465/1980 நாள் 22.12.1980-ன்படி உதவி கால்நடை மருத்துவர் பதவியில் வரன்முறைப்படுத்தியும் ஆணைபிறப்பிக்கப்பட்டுள்ளது. அன்னாருக்கு 19.10.1988 நாள் முதல் தேர்வுநிலை விகிதம் வழங்கியும் மற்றும் 30.06.1999 நாள் முதல் சிறப்புநிலை ஊதிய விகிதமும் மன்ற தீர்மான எண்.720/99, நாள் 29.10.1999-ன்படி வழங்கப்பட்டுள்ளது.

தனியர் மீது துறை வழி ஒழுங்கு நடவடிக்கை அல்லது விழிப்பு குழுமத்தின் குற்றச்சாட்டுகள் எதுவும் விசாரணையில் இல்லை.

தனியருக்கு 30 ஆண்டுகள் பணி முடித்தமைக்காக போனஸ் ஊதிய உயர்வாக ஒரு ஊதிய உயர்வு தற்போது பெற்று வரும் மாற்றியமைக்கப்பட்ட ஊதியக்குழு பரிந்துரையின்படி ரூ.15600-39100+கிரேடு சம்பளம் ரூ.6600/-ல் தற்போது பெற்று வரும் அடிப்படை சம்பளமான ரூ.25870+GP 6600 சேர்த்து ரூ.32470/- உடன் போனஸ் ஊதிய உயர்வாக ஒரு ஊதிய உயர்வு 3% ரூ.980/- அடிப்படை சம்பளம் ரூ.26850+GP 6600 சேர்த்து ரூ.33,450/-ஐ அடிப்படை ஊதியம் 30 ஆண்டுகள் பணி முடித்தமைக்காக 30.06.2009 நாள் முதல் வழங்கிடப்பட வேண்டும் என கணக்கு அலுவலர்-2 அவர்களின் கருத்துரு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு-2ன் கீழ் வருவதால் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் பெற்ற பிறகு போனஸ் ஊதிய உயர்வு வழங்கிடப்பட வேண்டும்.

எனவே, டாக்டர். பி.கே. ஆண்டவன், உதவி கால்நடை மருத்துவர், மண்டலம்-2 அவர்களுக்கு 30 ஆண்டுகள் பணி ஒரே பதவியில் வகித்தமைக்காக ஒரு போனஸ் ஊதிய உயர்வு ரூ.980/- வழங்கி அடிப்படை சம்பள ரூ.15,600-39100+GP ரூ.6600/-ல் 30.06.2009 நாள் முதல் அடிப்படை சம்பளம் ரூ.26850+GP 6600 வழங்கிட நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.4.ந.க.எண்.அ9/0010/2010**
**ஆணையாளர் அவர்களின் 28.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :62/2010 பொருள் எண்.5

**ஊக்க ஊதிய உயர்வு வழங்க அனுமதி**

டாக்டர். P. தயாளன், கால்டை உதவி மருத்துவர், "G" கால்நடை மாட்டுத் தொழுவம், பெரம்பூர், அவர்கள் 14.12.2009 நாளிட்ட கடிதத்தில் 30 ஆண்டுகள் தொடர்ந்து கால்நடை உதவி மருத்துவர் பதவியில் பணி முடித்தமையால் ஊக்க உயர்வு நிலைக்கு செல்ல அனுமதி வேண்டியுள்ளார்.

டாக்டர். P. தயாளன், கால்டை உதவி மருத்துவர், "G" கால்நடை மாட்டுத் தொழுவம், பெரம்பூர், அவர்கள் 12.12.2009 அன்று கால்நடை உதவி மருத்துவர் பதவியில் 30 ஆண்டுகள் பணிமுடித்துள்ளார். இவருக்கு சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களது செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.அ4/61635/81, நாள் 28.03.1982ன்படி பணிவரன்முறைப்படுத்தப் பட்டுள்ளது. இவருக்கு இப்பதவியில் 12.12.1999 முதல் சிறப்புநிலை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தற்போது 12.12.2009 அன்று ஊக்க ஊதிய உயர்வு நிலை செல்ல தகுதி பெற்றுள்ளார்.

இவர் மீது துறை சார்ந்த (ம) விழிப்புக்குழு சார்ந்த குற்றச்சாட்டுகள் / விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை. தண்டனை ஏதும் இல்லை. பணிக்காலத்தில் ஊதியமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை.

போனஸ் ஊதிய உயர்வு வழங்க பணி விவரம் கணக்கீட்டுத்தாள் துறைத் தலைவரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இம்மருத்துவ அலுவலருக்கு ஊக்க ஊதியம் வழங்குவதால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடம் கூடவோ, குறையவோ நேரிடாது. இப்பதவி சென்னை மாநகராட்சி பிரிவு-2ன் கீழ் வருகிறது. எனவே மன்றத்தின் அனுமதி பெற்று ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

டாக்டர். P. தயாளன், கால்டை உதவி மருத்துவர், "G" கால்நடை மாட்டுத் தொழுவம், பெரம்பூர், அவர்கள் 11.12.2009 பிற்பகல் அன்று 30 ஆண்டுகள் பணிமுடித்தமையால் 12.12.2009 அன்று தனியர் பெற்று வரும் அடிப்படை ஊதியம் ரூ.32,470/- உடன் ஒரு ஊக்க உயர்வு 3% ரூ.980/- சேர்த்து ரூ.33,450/- என்ற ஊதியம் ரூ.15600-39100 + GP 6600 என்ற ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**சு.து.ந.க.எண்.கா.பி.அ1/120/2009**
**ஆணையாளர் அவர்களின் 28.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :63/2010 பொருள் எண்.6

**ஊக்க ஊதிய உயர்வு வழங்க அனுமதி**

டாக்டர். என். ஜெயராமன், கண்காணிப்பாளர், பெரம்பூர் இறைச்சிக்கூடம் அவர்களின் 28.09.2009 நாளிட்ட கடிதத்தில் 30 ஆண்டுகள் தொடர்ந்து கால்நடை உதவி மருத்துவர் பதவியில் பணி முடித்தமையால் ஊக்க உயர்வு நிலைக்கு செல்ல அனுமதி வேண்டியுள்ளார்.

டாக்டர். என். ஜெயராமன், கண்காணிப்பாளர், பெரம்பூர் இறைச்சிக்கூடம் அவர்கள் 20.08.2009 அன்று கால்நடை உதவி மருத்துவர் பதவியில் 30 ஆண்டுகள் பணிமுடித்துள்ளார். இவருக்கு சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களது செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.அ4/61635/81, நாள் 28.03.1982ன்படி பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் 21.08.2009 அன்று ஊக்க ஊதிய உயர்வு நிலை செல்ல தகுதி பெற்றுள்ளார். இவருக்கு இப்பதவியில் 21.08.1999 முதல் சிறப்புநிலை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

20.11.2009 நாளிட்ட கணக்கு அலுவலர் (சு) அவர்களின் குறிப்பில் டாக்டர். என். ஜெயராமன், கண்காணிப்பாளர், பெரம்பூர் இறைச்சிக்கூடம் அவர்கள் 21.08.2009 முதல் ரூ.15600-39100 என்ற ஊதிய விகிதத்தில் அடிப்படை ஊதியம் ரூ.33450/- நிர்ணயம் செய்யும் பொருட்டு மன்றத்தின் அனுமதி பெற வேண்டும் எனவும் கருத்துரைக்கப்பட்டுள்ளது.

இவர் மீது துறை சார்ந்த (ம) விழிப்புக்குழு சார்ந்த (ம) குற்றச்சாட்டுகள் / விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை. தண்டனை ஏதும் இல்லை. பணிக்காலத்தில் ஊதியமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை.

போனஸ் ஊதிய உயர்வு வழங்க பணி விவரம் கணக்கீட்டுத்தாள் துறைத் தலைவரால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இம்மருத்துவ அலுவலருக்கு ஊக்க ஊதியம் வழங்குவதால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடம் கூடவோ, குறையவோ நேரிடாது. இப்பதவி சென்னை மாநகராட்சி பிரிவு-2ன் கீழ் வருகிறது. எனவே மன்றத்தின் அனுமதி பெற்று ஊக்க ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

டாக்டர். என். ஜெயராமன், கண்காணிப்பாளர், பெரம்பூர் இறைச்சிக்கூடம் அவர்கள் 20.08.2009 பிற்பகல் அன்று 30 ஆண்டுகள் பணிமுடித்தமையால் 21.08.2009 அன்று தனியர் பெற்று வரும் அடிப்படை ஊதியம் ரூ.32470/– உடன் ஒரு ஊக்க உயர்வு 3% ரூ.980/– சேர்த்து ரூ.33450/– என்ற ஊதியம் ரூ.15600-39100 + 6600 G.P. என்ற ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.6.ந.எண்.அ1/6039/2009**

**ஆணையாளர் அவர்களின் 20.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :64/2010 பொருள் எண்.7

**தேர்வுநிலை வழங்க அனுமதி**

மருத்துவர் திரு. ஜெ. கமால் உசேன் என்பவர் சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/2884/98, நாள்:02.11.1999 ன்படி கால்நடை உதவி மருத்துவராக 04.11.1999 முதல் சென்னை மாநகராட்சிப் பணியில் சேர்ந்தார்.

இதன் தொடர்பாக சமர்ப்பிக்கப்படுவது என்னவெனில், அன்னாரது பணி அரசாணை எண்.1894, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, நாள்:13.10.1981 ன்படி உறுதியாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.கா.பி. அ1/186/2002, நாள்:25.10.2002 ன்படி 04.11.2001 முதல் அன்னார் தகுதிகாண் பருவம் முடித்தவராக அங்கீகரிக்கப்பட்டு, ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மருத்துவர் திரு. ஜெ. கமால் உசேன், கால்நடை உதவி மருத்துவர், மண்டலம்–6 அவர்கள் தற்போது பணிமாற்று அடிப்படையில் மண்டலம்–03, புளியந்தோப்பு கால்நடை இறைச்சி கூடத்தில் கால்நடை உதவி மருத்துவராக பணி செய்து வருகிறார். மருத்துவர் திரு. ஜெ. கமால் உசேன், கால்நடை உதவி மருத்துவர் பதவியில் பத்தாண்டு கால பணியை முடித்துள்ளமைக்கு கால்நடை உதவி மருத்துவர் பதவியில் தேர்வு நிலை அனுமதிக்கப்பட வேண்டும். இவர் 10 ஆண்டு கால பணி முடித்த விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ எ ண் | மருத்துவ அலுவலரின் பெயர் | முதன் முதலில் நியமனமான நாள் | தகுதிகாண் பருவம் பூர்த்தியான நாள் | சம்பளமில்லா விடுப்பு துய்த்த விவரம் |
|---|---|---|---|---|
| 01. | மருத்துவர் திரு.ஜெ.கமால் உசேன் | 04.11.1999 | 04.11.2001 | ஏதும் இல்லை |

| 10 ஆண்டுகால பணி முடித்த நாள் | முந்தைய ஆண்டுகளில் வழங்கப்பட்ட தண்டனை விவரம் | தண்டனை முடிவுற்றதா | தேர்வு நிலை வழங்கப்பட்ட வேண்டிய நாள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 03.11.2009 | ஏதும் இல்லை | –– | 04.11.2009 | –– |

கணக்கு அலுவலர்/மண்டலம்–6 அவர்களின் 19.11.2009 நாளிட்ட குறிப்புரையில், திரு. ஜெ. கமால் உசேன், கால்நடை உதவி மருத்துவர், மண்டலம்–6 என்பவர் ஒரே பதவியில் 10 ஆண்டுகள் பணி முடித்தமைக்கு, 04.11.2009 அன்று கால்நடை உதவி மருத்துவர் பதவியில் தேர்வு நிலையில் அடிப்படை ஊதியம் ரூ.21,970/–யை ரூ.9300 – 34800 + 4600 என்ற ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்யலாம் என தெரிவித்துள்ளார்.

மருத்துவர் திரு. ஜெ. கமால் உசேன், கால்நடை உதவி மருத்துவர், மண்டலம்–6 அவர்கள் பத்தாண்டு பணிக்காலத்தில் ஊதியமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை. மேலும் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லையென்றும், தண்டனை ஏதும் நிலுவையில் இல்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. அன்னாருக்கு தேர்வு நிலை காலமுறை ஊதியம் வழங்குவதால் கால்நடை உதவி மருத்துவர் பதவியில் கூடுதலாக பணியிடங்கள் ஏதும் ஏற்படுத்தப்படவில்லை.

கால்நடை உதவி மருத்துவர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு–2ன் கீழ் வருகின்றது. இப்பதவி வகிப்பவர்களுக்கு தேர்வு நிலை அனுமதிக்க மன்றம் அரசாணை (நிலை) எண்.1381, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை, நாள் : 03.09.1982 ன்படி அதிகாரம் பெற்றுள்ளது.

எனவே, மருத்துவர் திரு. ஜெ. கமால் உசேன், கால்நடை உதவி மருத்துவர் (பணியிடம் : மண்டலம்–03, புளியந்தோப்பு கால்நடை இறைச்சி கூடத்தில்), மண்டலம்–6 அவர்களுக்கு 04.11.2009 முதல் கால்நடை உதவி மருத்துவர் பதவியில் தேர்வு நிலை அனுமதித்து, அவரது ஊதியத்தை கால்நடை உதவி மருத்துவர் பதவியின் தேர்வு நிலையில் அடிப்படை ஊதியம் ரூ.21,970/–யை ரூ.9300 – 34800 + 4600 என்ற ஊதிய விகிதத்தில் நிர்ணயிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக் குழு மூலமாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பா.து.ந.க.எண்.பி2/1608/2009**
**ஆணையாளர் அவர்களின் 22.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :65/2010 பொருள் எண்.8

**தேர்வு நிலை வழங்க அனுமதி**

சென்னை மாநகராட்சி, பாலங்கள் துறை, திரு. எஸ். தாமரைச்செல்வன், செயற்பொறியாளர் அவர்கள் தான் 8.7.79ல் உதவி பொறியாளராக பணியில் அமர்த்தப்பட்டதாகவும் 8.7.89 முதல் தேர்வுநிலை உதவி பொறியாளர் ஊதிய விகிதம் வாங்கியதாகவும் 29.11.93 முதல் உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வு பெற்று தொடர்ந்து உதவி செயற்பொறியாளராக கடந்த 10 ஆண்டுகளாக பணிபுரிந்து வருவதாகவும் அரசாணை நிலை எண்.210 ப.நி.சீ.துறை, நாள் 11.03.1987 மற்றும் அரசு கடித எண்.168 ப.நி.சீ.துறை, நாள் 28.09.1999ன்படி தான் தேர்வுநிலை உதவிபொறியாளர் பதவியில் 8.7.89 முதல் 28.11.93 வரை பணியாற்றிய காலத்தை, உதவி செயற்பொறியாளர் பதவியில் 29.11.93 முதல் 7.7.99 வரை பணியாற்றிய காலத்துடன் சேர்த்து 10 ஆண்டுகளுக்கான தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர்க்கான ஊதிய விகிதத்தை 8.7.99 முதல் வழங்கவும் மற்றும் தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் 8.7.99 முதல் ஊதிய நிர்ணயம் செய்து அதற்குண்டான நிலுவைத் தொகையை வழங்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

இது சம்மந்தமாக சமர்ப்பித்துக் கொள்வது யாதெனில், திரு.எஸ்.தாமரைச்செல்வன், அவர்கள் உதவி பொறியாளராக 8.7.79 முதல் சென்னை மாநகராட்சி பணியில் நியமனம் செய்யப்பட்டார். இவருக்கு உதவி பொறியாளர் பதவி 10 ஆண்டுகள் பணி முடிந்தவுடன் 8.7.89 முதல் தேர்வுநிலை உதவி பொறியாளர் ஊதிய விகிதம் ரூ.2200–75–2800–100–4000யை வழங்கப்பட்டு இவ்வூதிய விகிதத்தில் ஊதியமும் நிர்ணயம் செய்யப்பட்டது. பிறகு தனியர் உதவி செயற்பொறியாளராக சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/14931/93 நாள்.25.11.93ன்படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு தற்காலிகமாக ரூ.2200–75–2800–100–4000 என்ற ஊதிய விகிதத்தில் பதவி உயர்வு அளிக்கப்பட்டது. இவர் 29.11.93 முற்பகல் முதல் உதவி செயற்பொறியாளராக பணியில் சேர்ந்தார். தனியரின் தற்காலிக உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வை அரசாணை (நிலை) எண்.71, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.3.2001ல் 29.11.93 முதல் உறுதியாக்கம் செய்து ஆணையிட்டது. இவ்வரசாணையின் அடிப்படையில் தனியரின் தற்காலிக பணிஉயர்வினை 29.11.93 முதல் உதவி செயற்பொறியாளர் பதவியில் வரன்முறை செய்து சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/36102/98 நாள்.17.8.2002 மூலம் ஆணை வழங்கப்பட்டது.

மேற்காணும் அரசாணை மற்றும் அரசு கடிதத்தில் தேர்வுநிலை கீழ்நிலை பதவியின் ஊதிய விகிதமும் உயர்பதவியின் சாதாரண நிலையின் ஊதிய விகிதமும் ஒரே விகித நிலையின் இருந்தால் தேர்வுநிலை கீழ்நிலை பதவியில் பணியாற்றிய காலத்தை உயர் பதவியில் பணியாற்றிய காலத்தோடு சேர்த்து 10 ஆண்டுகள் கணக்கிட்டு உயர் பதவியில் தேர்வுநிலை ஊதிய விகிதம் தனியரின் பணிக்காலத்தில் ஒருமுறை வழங்கலாம் என அரசு ஆணை வழங்கியுள்ளது. இவ்வரசாணை மற்றும் அரசு கடிதத்தின்படி ஐந்தாவது ஊதியக்குழு மற்றும் தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதம் 1998ன்படி தேர்வுநிலை உதவி பொறியாளர் ஊதிய விகிதமும் சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர் ஊதிய விகிதமும் (அதாவது) ரூ.2200 -75–2800–100–4000 மற்றும் ரூ.8000 -275–13500என்ற ஒரே விகித நிலையில் இருப்பதால் திரு.எஸ்.தாமரைச்செல்வன், அவர்கள் கீழ்நிலை பதவியான தேர்வுநிலை உதவிப்பொறியாளர் பதவியில் 8.7.89 முதல் 28.11.93 வரை பணியாற்றிய 4 வருடம் 04 மாதம் 20 நாட்களை, உயர் பதவியான சாதாரண நிலை உதவி செயற் பொறியாளர் பதவியில் 5 வருடம் 7 மாதம் 10 நாட்களுடன் சேர்த்து 10 வருடங்கள் கணக்கிட்டு தனியருக்கு 8.7.99 முதல் தேர்வுநிலை உதவி செயற்பெறியாளர் ஊதிய விகிதம் வழங்கவேண்டும். மேற்கண்ட காலத்தில் தனியர் எந்தவிதமான சம்பளமில்லாத விடுப்பும்

துய்க்கவில்லை. ஆகையால், இவருக்கு 8.7.99 முதல் உதவி செயற்பொறியாளர் பதவியில் தேர்வுநிலை ஊதிய விகிதம் ரூ.9100-275–14050யை வழங்கலாம்.

மேலும், உதவி செயற் பொறியாளர் பதவி சென்னை மாநகராட்சி பொறியியல் பணி விதிகளின்படி இரண்டாம் நிலை (வகுப்பு II)ன் கீழ் வருவதால் திரு.எஸ்.தாமரைச்செல்வன், அவர்களுக்கு மன்றத்தின் ஒப்புதலுடன் தேர்வுநிலை உதவி செயற் பொறியாளர் ஊதிய விகிதம் வழங்கப்பட வேண்டும்.

திரு.எஸ்.தாமரைச்செல்வன், அவர்கள் சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.8000 -275–13500யில் 08.07.1999 அன்று ரூ.10,200/-ஐ அடிப்படை ஊதியமாக பெற்றுள்ளார். இவருக்கு நடைமுறையில் உள்ள அரசு ஆணைகளின்படி சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர் ஊதிய விகிதத்தில் ஒரு ஊதிய உயர்வு அளித்து இவருடைய அடிப்படை ஊதியத்தை ரூ.10,475/- என தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் ஊதிய விகிதம் ரூ.9100 – 275 – 14050ல் 08.07.1999 முதல் நிர்ணயம் செய்யவேண்டும்.

ஆகையால், பாலங்கள் துறை, செயற்பொறியாளர், திரு.எஸ்.தாமரைச்செல்வன் அவர்களுக்கு மன்றத்தின் ஒப்புதலுடன் தேர்வுநிலை உதவி பொறியாளர் பதவியில் பணியாற்றிய காலத்துடன் சாதாரண நிலை உதவி செயற்பொறியாளர் பதவியில் பணியாற்றிய காலத்தை சேர்த்து 8.7.99 முதல் உதவி செயற்பொறியாளர் பதவியில் தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவியில் தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் ஊதிய விகிதம் ரூ.9100-275–14050-ஐ மேற்காணும் அரசாணை மற்றும் அரசு கடிதத்தின்படி வழங்கவும் மற்றும் இவருடைய அடிப்படை ஊதியம் ரூ.10,475/-என்று தேர்வுநிலை உதவி செயற்பொறியாளர் பதவி ஊதிய விகிதம் ரூ.9100-275–14050-ல் நிர்ணயம் செய்து அதற்குண்டான நிலுவைத்தொகையை வழங்கவும் மன்றத்தின் (நியமனக்குழு மூலமாக) அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>தொ.நோ.ம.மனை.ந.க.எண்.அ1/717/2009</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 22.01.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :66/2010 பொருள் எண்.9

**<u>தேர்வுநிலை வழங்க அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, தொற்றுநோய் மருத்துவமனை, டாக்டர். எ. கல்யாணி, மருத்துவ அலுவலர் அவர்கள் தன்னுடைய 31.03.2009 தேதியிட்ட மனுவில் தான் 10 ஆண்டுகள் பணிநிறைவு செய்துள்ளதாகவும், தமக்கு தேர்வுநிலை ஊதிய விகிதத்தில், ஊதியம் நிர்ணயம் செய்ய ஆவன செய்யுமாறும் கோரியுள்ளார்.

டாக்டர். எ. கல்யாணி, மருத்துவ அலுவலர், தொற்றுநோய் மருத்துவமனை அவர்கள் 12.12.1997 அன்று சென்னை மாநகராட்சி, தொற்றுநோய் மருத்துவமனையில் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டார். டாக்டர். எ. கல்யாணி, மருத்துவ அலுவலர் 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்து தேர்வு நிலை ஊதிய விகிதத்தில் ஊதியம் பெற தகுதியுள்ளவராகிறார்.

தனியர் மீது சுகாதாரத்துறை மற்றும் சென்னை மாநகராட்சி விழிப்பு பணி குழுமத்தில் எந்த வித ஒழுங்கு நடவடிக்கையோ அல்லது முற்றுப்பெறாத விசாரணைகளோ இல்லை.

தனியரின் ஊதியத்தை தேர்வுநிலை ஊதிய விகிதத்தில் நிர்ணயிக்க, கணக்கு அலுவலர் (சுகாதாரம்) அவர்கள் கருத்துரு கோரப்பட்டதில், கணக்கு அலுவலர் (சுகாதாரம்) அவர்களுடைய 13.03.2009 நாளிட்ட குறிப்பில் டாக்டர். எ. கல்யாணி, மருத்துவ அலுவலர், அவர்களின் ஊதியத்தை தேர்வு நிலை ஊதிய விகிதத்தில் நிர்ணயம் செய்யலாம் என்றும், அன்னாரின் ஊதியத்தினை தேர்வுநிலை ஊதிய விகிதமாகிய ரூ.15600-39100+5400 GPல் என்ற முறையில் ரூ.26660/-ல் ஊதிய நிர்ணயம் செய்யலாம் என பரிந்துரைத்துள்ளார்கள்.

டாக்டர். எ. கல்யாணி, மருத்துவ அலுவலர் அவர்களின் பணியமர்த்தப்பட்ட நாள் 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்த நாள் தேர்வுநிலை ஊதிய விகிதத்திற்கு அனுமதிக்கப்பட வேண்டிய நாள் தேர்வுநிலை ஊதிய விகிதம் ஆகியவை கீழ் கண்டுள்ளவாறு பட்டியலிடப்பட்டுள்ளது. மேலும் சென்னை மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் 23.12.2001 நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலம் தனியரின் மருத்துவ அலுவலர் பதவியில் 13.12.97 முதல் பணிவரன்முறை படுத்தப்பட்டுள்ளது.

| பெயர் மற்றும் பதவி | பணியமர்த்தப் பட்ட நாள் | 10 ஆண்டுகள் பணி நிறைவு செய்த நாள் | தேர்வுநிலை உயர்த்தப் படும் நாள் | தேர்வுநிலை ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|
| டாக்டர். எ. கல்யாணி, மருத்துவ அலுவலர், தொற்றுநோய் மருத்துவமனை | 13.12.1997 | 12.12.2007 | 13.12.2007 | ரூ.15600-39100+5400 GP |

ஆகவே டாக்டர். எ. கல்யாணி, மருத்துவ அலுவலர் அவர்களின் ஊதியத்தினை தேர்வு நிலை ஊதிய விகிதம் ரூ.15600-39100+5400 GPல் 13.12.2007 முதல் அடிப்படை ஊதியம் ரூ.26660/- என நிர்ணயம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்4/0127/2009**
**ஆணையாளர் அவர்களின் 22.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :67/2010 பொருள் எண்.10

**சிறப்புநிலை வழங்க அனுமதி**

டாக்டர். திருமதி. எம். அவ்வையார், மருத்துவ அலுவலர், புளியந்தோப்பு மண்டலம் அவர்கள் மருத்துவ அலுவலராக 28.11.1988 அன்று தஞ்சாவூர் நகராட்சியில் பணியமர்த்தபட்டு சென்னை மாநகராட்சியில் ஒரு வழிப்பாதை பணியிடமாற்றம் செய்யப்பட்டு 31.07.1989 அன்று பணியமர்த்தப்பட்டார். இவரது பணியை அரசாணை (ப) எண்.410 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 05.07.1989ன்படி 28.11.1988 முதல் பணிவரன்முறைபடுத்தியும் 28.11.1990 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டு மன்ற தீர்மான எண்.564/2003 நாள் 20.10.2003ன்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆணையர் சென்னை மாநகராட்சி அவர்களின் 29.10.2003 நாளிட்ட செயல்முறை ஆணையும் வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர். திருமதி. எம். அவ்வையார், மருத்துவ அலுவலர், புளியந்தோப்பு மண்டலம் அவர்கள் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவும் இல்லை. எனவே, கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம், மாவட்ட குடும்ப நலம் அவர்கள் இவருக்கு மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்புநிலை காலமுறை சம்பள விகிதம் திருத்திய சம்பள ஊதிய குழு 2009 கணக்கின்படி தனியர் ஏற்கனவே பெற்றுவரும் அடிப்படை ஊதியத்தில் 3 விழுக்காடு ஊதிய உயர்வு ஒன்று வழங்கப்பட வேண்டும். டாக்டர். திருமதி. எம். அவ்வையார், அவர்கள் சிறப்பு நிலை கால சம்பளம் அனுமதிக்கும் முன்பெற்று வந்த காலமுறை ஊதிய விகிதம் 15600-39100 + G.P. 5700 ஆகும். சிறப்பு ஊதியம் 300 வழங்க கருத்திசைவு அளித்துள்ளார். இவரின் பணி பற்றிய விவரம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பெயர் | பணிவரன் முறை செய்த நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | LLP | தேர்வுநிலை வழங்கிய நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| டாக்டர். திருமதி. எம். அவ்வையார் | 28.11.1988 | 28.11.1990 | இல்லை | 28.11.1998 |

| 20 ஆண்டு முடித்த நாள் | இதற்கு முந்தைய ஆண்டுகளில் தண்டனை | சிறப்பு நிலைக்கு தகுதி உடையவரா | சிறப்புநிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| (6) | (7) | (8) | (9) |
| 27.11.2008 | ஏதுமில்லை | ஆம் | 28.11.2008 |

டாக்டர். திருமதி. எம். அவ்வையார், மருத்துவ அலுவலர், சைதாப்பேட்டை மண்டலம் அவர்களுக்கு சிறப்புநிலை காலமுறை சம்பளம் வழங்கவேண்டும். மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 27.11.2008ல் முடித்துள்ளதால் அடிப்படை ஊதியம் ரூ.29770/-ல் 3 விழுக்காடு ஊதிய உயர்வு அளித்து அடிப்படை சம்பளம் ரூ.30670+300 சிறப்பு ஊதியம் என காலமுறை சம்பள விகிதம் ரூ.15600-39100 + G.P. 5700ல் 28.11.2008 முதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மா.கு.ந.(ம)ம.கு.ந.க.எண்.எப்4/4177/2009**
**ஆணையாளர் அவர்களின் 08.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :68/2010 பொருள் எண்.11

**சிறப்புநிலை வழங்க அனுமதி**

டாக்டர். திருமதி. ஆர். அருண்மொழி, மருத்துவ அலுவலர், வடபழனி மண்டலம் அவர்கள் மருத்துவ அலுவலராக 12.10.1988 அன்று திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் பணியமர்த்தப்பட்டார். பின்பு ஒருவழிப் பாதையாக தனியர் அவர்கள் 31.07.1989ல் சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்து தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இவரது பணிவரன்முறைப்படுத்தப்பட்ட 15.11.1990 முதல் தகுதி காண் பருவம் முடித்தவராக மன்ற தீர்மானம் எண்.4175/93, நாள் 13.10.1993ன்படி ஏற்றுக் கொள்ளப்பட்டு துணை ஆணையர் (சு) அவர்களின் 28.10.1993 நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

தனியர் மீது துறை ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை. இவருக்கு தண்டனை ஏதும் வழங்கப்படவும் இல்லை.

கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம், மாவட்ட குடும்ப நலம் அவர்கள் இவருக்கு மருத்துவ அலுவலர் பதவியின் சிறப்பு நிலை காலமுறை சம்பள விகிதத்தில் தமிழ்நாடு ஊதிய குழு 2009ன்படி தனியர் ஏற்கனவே பெற்றுவரும் அடிப்படை ஊதியத்தில் 3 விழுக்காடு ஊதிய உயர்வு ஒன்று வழங்கவும், டாக்டர் திருமதி. ஆர். அருண்மொழி அவர்கள் சிறப்பு நிலை காலமுறை சம்பளம் அனுமதிக்கும் முன்பெற்று வந்த காலமுறை ஊதிய விகிதம் 15600-39100 + GP 5700ல் ரூ.30670/- என ஊதியம் நிர்ணயம் செய்து, சிறப்பு ஊதியம் ரூ.300 வழங்க கருத்திசைவு அளித்துள்ளார். இவரின் பணி பற்றிய விவரம் கீழே தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பெயர் | பணிவரன் முறை செய்த நாள் | தகுதி காண் பருவம் பூர்த்தி அடைந்த நாள் | LLP | தேர்வுநிலை வழங்கிய நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| டாக்டர். திருமதி. ஆர். அருண்மொழி | 12.10.1988 | 15.11.1990 | 29 நாட்கள் | 09.11.1998 |

| 20 ஆண்டு முடித்த நாள் | இதற்கு முந்தைய ஆண்டுகளில் தண்டனை | சிறப்பு நிலைக்கு தகுதி உடையவரா | சிறப்புநிலை வழங்கப்பட வேண்டிய நாள் |
|---|---|---|---|
| (6) | (7) | (8) | (9) |
| 08.11.2008 | ஏதுமில்லை | ஆம் | 09.11.2008 |

டாக்டர். திருமதி. ஆர். அருண்மொழி, மருத்துவ அலுவலர், வடபழனி மண்டலம் அவர்களுக்கு சிறப்பு நிலை காலமுறை சம்பளம் வழங்க வேண்டும். மருத்துவ அலுவலர் பதவியில் 20 ஆண்டு பணியை 09.11.2008 பிற்பகலில் முடித்துள்ளதால் அடிப்படை சம்பளம் ரூ.30670 + 300 சிறப்பு ஊதியம் என காலமுறை சம்பள விகிதம் ரூ.15600-39100 + GP 5700ல் 09.11.2008 முதல் வழங்க மாமன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.4.ந.க.எண்.அ1/9360/09**

**ஆணையாளர் அவர்களின் 11.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :69/2010 பொருள் எண்.12

**தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்**

திரு. சவுத் அகமது, உதவியாளர், மண்டலம்-4, சென்னை மாநகராட்சியில் உதவியாளராக பணியில் உள்ளதாகவும், தான் இஸ்லாம் மதத்தை (உருது) சார்ந்தவர் என்றும், தமிழை பேசவும், பேசுவதை புரிந்து கொள்ளவும் முடியும் என்றும் தெரிவித்துள்ளார். அரசு ஆணையின்படி தமிழ்மொழி 5 முறை எழுதியும் தேர்ச்சி பெறமுடியவில்லை என்றும், தனக்கு 55 வயது ஆகிறது என்றும் தெரிவித்துள்ளார். இனியும் தமிழ்மொழி தேர்வு எழுதி தேர்ச்சி பெறுவது கடினம் என்றும் தெரிவித்துள்ளார். எனவே, அன்னாருக்கு தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதில் இருந்து விலக்களித்து ஊதிய உயர்வு, பதவி உயர்வு கிடைத்திட தக்க மேல்நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அவரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## பணியாளரின் பணி விவரங்கள்

| | |
|---|---|
| பெயர் | சவுத் அகமது |
| பிறந்த தேதி | 30.11.1954 (55 வயது) |
| பணியில் சேர்ந்த நாள் | 31.05.1979 முதல் 21.01.1986 களப்பணியாளர்<br>22.01.1986 முதல் 01.01.1995 இளநிலை உதவியாளர்<br>02.01.1995 இன்று வரை உதவியாளர் |
| படிப்பு | பி.எஸ்.சி., |
| துறை தேர்வு | 1. சார்நிலை கணக்கு அலுவலர் தேர்வு பாகம்-1 தேர்ச்சி<br>2. மாவட்ட அலுவலக நடைமுறைத் தேர்வு தேர்ச்சி |
| தமிழ்மொழித் தேர்வு | தேர்ச்சி பெறப்படவில்லை (5 முறையும்) |

| ROLL No. | TEST | Year |
|---|---|---|
| 11061 | II Language Test – Part-1 | May 1996 |
| 10217 | II Language Test – Part-1 | Nov 1996 |
| 1795 | II Language Test – Part-1 | Dec 2006 |
| 2252 | II Language Test – Part-1 | Dec 2007 |
| 2758 | II Language Test – Part-1 | May 2009 |

இது குறித்து செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சென்னை-2 அவர்களுக்கு குறிப்புரை கேட்டு 26.10.2009 அன்று கடிதம் அனுப்பி வைக்கப்பட்டது.

அதன் பேரில் சார்வு செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் அவர்கள் அனுப்பிய கடிதம் எண்.3923/DTD/B07, நாள் 23.11.2009ல் திரு. சவுத்அகமது, உதவியாளர், மண்டலம்-4 தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட இரண்டாம் நிலை மொழித் தேர்வில் ஐந்து முறை எழுதியும் தேர்ச்சி பெறவில்லை என்று சான்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அரசு ஆணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை நாள் 06.10.2009 அரசாணையில் அரசிடமுள்ள கூடுதல் நிர்வாக அதிகாரங்களை மன்றம் / ஆணையருக்கு பகிர்ந்தளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதில் வரிசை எண்.5ல் உதவியாளர் பதவியில் அதிகார பகிர்ந்தளிப்பு செய்ய பரிந்துரைக்கப்பட்ட பொருள்களில் ஒன்றான தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து தளர்வாணை தற்போது அரசிடம் இருந்து அதிகாரத்தினை சென்னை மாநகராட்சி மன்றம் இனிவருங்காலங்களில் தளர்வாணை வழங்கலாம் என்று தெரிவித்துள்ளது.

எனவே, ஆணையாளர் அவர்கள், திரு. சவுத்அகமது, உதவியாளர், மண்டலம்-4 என்பவர் தமிழ்மொழி தேர்வு எழுதிய விவரம், தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதில் இருந்து விலக்களித்து அன்னாருக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு வழங்குதல் போன்றவற்றில் தகுந்த மேல்நடவடிக்கை தொடர வேண்டியுள்ளதால், அன்னார் உடல் ஊனமுற்றவர் என்பதாலும், பணியாளரது நலனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் வழங்கிய சான்றின் அடிப்படையிலும், அரசு சென்னை மாநகராட்சி மன்றத்திற்கு அதிகாரப் பகிர்ந்தளிப்பு செய்துள்ளதாலும் பணியாளருக்கு தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதில் இருந்து விலக்களிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தளர்வாணை வேண்டி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.2.ந.க.எண்.சி3/2957/2007</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 01.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :70/2010 பொருள் எண்.13

**<u>தமிழ்மொழி தேர்ச்சி மற்றும் கல்வித் தகுதியிலிருந்து விலக்களிக்க அனுமதி</u>**

திரு. கோவிந்தன், ஓட்டுநர், மண்டலம்-2 அவர்கள் 30.06.2007 முதல் வயதுமுதிர்வு அடிப்படையில் ஓய்வு பெற்றார்.

உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் கடிதத்தில் தனியர் (1) ஓட்டுநர்களுக்குரிய குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்றுள்ளாரா என்ற விவரம் அளிக்கப்பட வேண்டும் என்றும் (2) கல்வி தகுதி குறித்து பணிப்பதிவேட்டில் விபரம் பதியப்பட வேண்டும் என்றும் (3) தாய்மொழி தெலுங்கு என்பதனால், இவர் தமிழ்மொழி தேர்ச்சி பெறாததற்கு அரசின் தளர்வாணை பெறப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்பொறியாளர் (இ) அவர்களின் 13.04.2009 அன்று நாளிட்ட குறிப்பில் ஓட்டுநர்களுக்கு கல்வி தகுதி விலக்களிப்பது குறித்து பொதுவான தளர்வாணை ஏதும் பெறப்படவில்லை என தெரிய வருகிறது எனவும் குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் தமிழ்மொழி தேர்ச்சி குறித்து உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையினரால் தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலை விதி 12(பி)ல் 8-ஆம் வகுப்பிற்கு கீழ் நிர்ணயிக்கப்பட்ட பதவிகளுக்கு தமிழ்நாடு அரசு தேர்வாணயத்தால் நடத்தப்படும் தமிழ்மொழித் தேர்வில் பெறத் தேவையில்லை என்ற நிலையிலும் ஓட்டுநர் பணியிடம் களப்பணியிடம் என்பதாலும் அலுவலக இருக்கை கோப்புகளை கையாள வேண்டிய அவசியம் எழவில்லை என்பதாலும் அப்பணியாளருக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் 02.08.1973 முதல் ஓட்டுநராக பணி நியமனம் செய்யப்பட்டு 30.06.2007 வரை ஓட்டுநராக பணிபுரிந்து மூன்றாம் நிலை பணியாளராக நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்துள்ளார்.

தனியர் பணிநியமனம் செய்யும்பொழுது கல்வி தகுதி ஏதும் இல்லை. மேலும் அன்னாரின் தாய்மொழி தெலுங்கு, பணிக்காலத்தில் அன்னாருக்கு தமிழ்மொழியில் தேர்ச்சி பெற அறிவுறுத்தப்படவில்லை என தெரிய வருகின்றது.

ஓய்வூதியரின் ஓட்டுநர் பதவி சென்னை மாநகராட்சி வகுப்பு-3ன் கீழ் வருகின்றபடியால் ஓய்வு பெறும் வயது 58 ஆகும். ஓய்வு பெறும்போது ஓட்டுநராக ரூ.5000-150-8000 ஊதிய விகிதம் மற்றும் மாற்றியமைக்கப்பட்ட ஊதியக் குழு பரிந்துரைப்படி ரூ.9300-34800 + 4400 G.P. ஆகும். ஓய்வூதியர் தற்காலிக ஓய்வூதியம் அளிக்க வேண்டி விருப்பம் தெரிவிக்காததால் தற்காலிக ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. அன்னாருக்கு முழு ஓய்வூதியம் வழங்க தணிக்கை துறையின் கருத்துருபடி தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தும், கல்வி தகுதி குறித்து சான்றளித்தும் அரசாணை பெறப்பட வேண்டும் என்பதால் அரசிற்கு பிரேரணைகள் அனுப்புவதற்கு நியமனக்குழுவின் மூலம் மன்றத்தின் தீர்மானம் எண்.258/2009, நாள் 28.08.2009 அன்று பெறப்பட்டது.

அரசாணை (நிலை) எண்.81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை, நாள் 06.10.2009ன்படி அரசிடம் அனுமதி மற்றும் ஆணை பெற வேண்டிய இனங்கள் இனி மன்றம் மற்றும் ஆணையர் அவர்களிடமே அனுமதி பெற்றுக்கொள்ளும் அதிகார பகிர்ந்தளிப்பு குறித்த அரசாணை மற்றும் மன்றத் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் அரசிற்கு முன்மொழிவு அனுப்பிட மன்றத் தீர்மானம் பெறப்பட்டுள்ள காரணத்தினால் வழிகாட்டுதல் குறித்து பொதுத் துறைக்கு குறிப்பு அனுப்பப்பட்டதில் நியமனக்குழு மூலமாக மன்றத்திற்கு விரிவான குறிப்பு சமர்ப்பித்திட கேட்டுக்கொள்ளப்பட்டது.

எனவே, திரு. கே. கோவிந்தன், ஒட்டுநர், மண்டலம்-2 ஒய்வு **30.06.2007** என்பவருக்கு தணிக்கைத் துறை தடையின்படி ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை வழங்குவதற்காக அன்னாரை கல்வித் தகுதி இல்லாமல் ஒட்டுநராக நியமனம் செய்தமைக்காக கல்வித் தகுதியிலிருந்து விலக்களிக்கவும் ஒட்டுநர் பதவி மூன்றாம் நிலையினை சார்ந்துள்ளபடியால் தமிழ்மொழி தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களிக்கவும் அரசின் அதிகார பகிர்ந்தளிப்பு ஆணைப்படி நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டியும், ஏற்கனவே அரசின் பிரேரணைக்கு அனுப்ப பெறப்பட்ட மன்றத்தீர்மானத்தினை திரும்ப பெறவும் ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.4.வ.து.ந.க.எண்.ஆர்3/072/09</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 11.01.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :71/2010 பொருள் எண்.14

**<u>துறைத் தேர்வுகளில் தேர்ச்சி பெறுவதிலிருந்து விலக்களித்தல்</u>**

மண்டலம்-4, வருவாய்த்துறையில் பணியாற்றி வந்த திருமதி. வி. வசந்தகுமாரி, பிரிவு மேலாளர், வயது முதிர்வு காரணமாக 31.12.2006 அன்று ஓய்வு பெற்றார். இவருக்கு தற்காலிக ஓய்வூதியம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது.

துணை இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை அவர்களின் கடிதத்தில் மாவட்ட நடைமுறை நூல் தேர்ச்சி, சார்நிலை கணக்கு தேர்வு பாகம்-1 மற்றும் பாகம்-2 ஆகிய தேர்வுகள் தேர்ச்சி பெறாமல் பிரிவு மேலாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்டதற்கு அரசின் பின்னேற்பு ஆணை பெறப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

இது சம்மந்தமாக தெரிவிப்பது யாதெனில், மன்ற தீர்மான எண்.376/2001, நாள் 20.07.2001ன்படி அங்கீகரிக்கப்பட்ட துணை விதிகளை பின்பற்றலாம் என்ற அடிப்படையில் துறைத் தேர்வுகள் தேர்ச்சி பெற வேண்டுமென 2000ம் ஆண்டு முதல் தான் வலியுறுத்தப்பட்டு வருகிறது. 2000ம் ஆண்டுக்கு முன்னர் துறை தேர்வுகளை வலியுறுத்தாமல் முற்றிலும் பணி மூப்பு அடிப்படையிலேயே பதவி உயர்வுகள் அளிக்கப்பட்டு வந்துள்ளன. மாவட்ட அலுவலக நடைமுறை நூல், சார்நிலை கணக்கு தேர்வு பாகம்–1 மற்றும் 2 ஆகிய தேர்வுகள் தேர்ச்சி பெறுவதை வலியுறுத்தாமல் முற்றிலும் பணிமூப்பு அடிப்படையிலேயே இப்பணியாளருக்கு பிரிவு மேலாளர் பதவி உயர்வு 27.07.1998ல் அளிக்கப்பட்டு இவர் 30.07.1998 முதல் பணியாற்றி வந்துள்ளார். இதன் பொருட்டு 2000ம் ஆண்டுக்கு முன்பே பணிமூப்பு அடிப்படையில் பிரிவு மேலாளராக பதவி உயர்வு அளிக்கப்பட்ட இவருக்கு அரசின் பின்னேற்பு ஆணை பெறுவது அவசியமில்லை என தெரியவருகிறது.

இதுபோன்ற நிகழ்வுகளுக்கு தளர்வாணை பெற அரசாணை நிலை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 06.10.2009ல் சென்னை மாநகராட்சி மன்றம், நியமனக்குழு மற்றும் ஆணையருக்கு அதிகாரப் பகிர்ந்தளிப்பு செய்து பரிந்துரைக்கப்பட்டதின் அடிப்படையில் திருமதி. வசந்தகுமாரி, பிரிவு மேலாளர், அவர்களுக்கு துறைத் தேர்வுகளான சார்நிலை கணக்கு தேர்வு பாகம்–1, பாகம்–2 மற்றும் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் ஆகியவற்றில் தேர்ச்சி பெறாமல் உள்ளதற்கு விலக்களித்து தனியருக்கு முழு ஓய்வூதியம் வழங்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தளர்வாணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**சு.து.ந.க.எண்.சி1/10830/2003**

**ஆணையாளர் அவர்களின் 25.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :72/2010 பொருள் எண்.15

**அயற்பணி பின்னேற்பு அனுமதி**

அரசு ஆணை எண்.570, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறை நாள் 01.12.2005ல் சென்னை மாநகராட்சி சுகாதார துறையில் உதவி சுகாதார அலுவலராக பணிபுரியும் டாக்டர். எம். ஜெகதீசன், என்பவருக்கு தரமணியில் உள்ள எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு திட்டத்தில் திட்ட அலுவலராக பணிபுரிய 15.03.2004 முதல் இரண்டு ஆண்டுகளுக்கு அயற்பணி மூலம் பணிபுரிய அனுமதி அளித்தமைக்கு அரசு பின்னேற்பு ஆணை வழங்கியது.

அயற்பணி காலம் முடியும் முன்பே டாக்டர். எம். ஜெகதீசன், என்பவர் உரிய அனுமதியின்றி வேறொரு அரசு நிறுவனமான எழும்பூரில் உள்ள தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தில் துறை வல்லுநராக பணியில் சேர்ந்துள்ளார்.

இவரது தன்னிச்சை செயலின் நடவடிக்கைக்கு துறை சம்பந்தமாக ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு கடும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது. இவ்வொழுங்கு நடவடிக்கையில் குற்றச் சாட்டுகளிலிருந்து விடுவித்து 17.11.2009 தேதியிட்டு இறுதி ஆணை வழங்கப்பட்டது.

இவரை தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்திலிருந்து விடுவிக்கக் கோரி பல கடிதங்கள் அனுப்பப்பட்டு அந்நிறுவனத்தின் பதிலில் இவரது அயற்பணி காலத்தினை 3 ஆண்டு காலத்திற்கு தேவைப்படுவதால் பணிபுரிய அனுமதி கோரப்பட்டிருந்தது.

சென்னை மாநகராட்சியில் உதவி சுகாதார அலுவலர் பணி இடங்கள் காலியாக இருந்ததாலும் பருவ மழை காலத்தில் நிவாரண பணிகளுக்கு இப்பதவி முக்கியத்துவமாக கருதப்பட்டதாலும் மேற்படி நிறுவனத்திலிருந்து இவரை விடுவிக்கக் கோரப்பட்டதை தொடர்ந்து இவர் 26.12.2008 பிற்பகல் முதல் விடுவிக்கப்பட்டு 27.12.2008 முற்பகல் முதல் சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்துள்ளார்.

எனவே, சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையின் உதவி சுகாதார அலுவலர் டாக்டர். எம். ஜெகதீசன், என்பவர் 17.12.2004 முதல் எழும்பூரில் உள்ள தமிழ்நாடு மாநில எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கத்தில் 26.12.2008 வரை அயற்பணியில் பணிபுரிந்தமைக்கு அரசின் பின்னேற்பு அனுமதி கோருவதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

## மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/3611/09
## ஆணையாளர் அவர்களின் 02.02.2010 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண் :73/2010 பொருள் எண்.16

**வெளிநாடு செல்ல தடையின்மை சான்று பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறை, சாந்தோம் மண்டலத்தில் மருத்துவ அலுவலராக பணிசெய்து வரும் டாக்டர் திருமதி. டி.ஆர். அபிராமி என்பவர் தாய்லாந்து நாட்டிற்கு சுற்றுலா செல்ல வேண்டி 10.12.2009 முதல் 24.12.2009 வரை 15 நாட்களுக்கு ஈட்டிய விடுப்பில் செல்ல தடையின்மை சான்றிதழ் வழங்குமாறு 07.10.2009 நாளிட்ட கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

டாக்டர் திருமதி. டி.ஆர். அபிராமி என்பவர் சென்னை மாநகராட்சியில் தொகுப்பூதியத்தில் 24.01.1994 அன்றும், 08.02.1996 முதல் நிரந்தரப்பணியிலும் பணி அமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு 08.02.1996 முதல் மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. 07.02.1998 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தனியரின் பயணச் செலவினங்களை ஏற்றுக்கொள்வதாக இவரின் தகப்பனார் அளித்துள்ள 15.10.2009 நாளிட்ட கடிதம் பெறப்பட்டுள்ளது.

இத்துறையில் தனியர் மீது எந்தவித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. விழிப்பு அலுவலரின் 02.11.2009 நாளிட்ட அறிக்கையின்படி, விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று அறிக்கை பெறப்பட்டுள்ளது. இவர் வெளிநாடு செல்லும் பொருட்டு பாதுகாப்பு குற்ற புலனாய்வு துறையிலிருந்து தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது. விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்குநரின் 03.11.2009 நாளிட்ட கடிதத்தில், அன்றைய தேதியில் தனியர் மீது எவ்வித விசாரணையும் நிலுவையில் இல்லை என சான்றளிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண்.259, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 17.12.2007ல் குறிப்பிட்டுள்ள கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தாய்லாந்து நாட்டிற்கு சுற்றுலாச் செல்லும் பொருட்டு அனுமதி அளிக்கப்படவேண்டும்.

நிபந்தனைகள் பின்வருமாறு:-

01. வெளிநாடு செல்லவிருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும்போது வேலைவாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்துக் கொள்ளக்கூடாது.
02. வெளிநாடு செல்லும் பயணச் செலவு உள்பட எவ்வித தொகையையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
03. அவர் வெளிநாட்டில் இருக்கும் போது அவர் சென்னை மாநகராட்சி பணியினை துறக்க விண்ணப்பிக்க கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கையினை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டது.
04. வெளிநாட்டில் தங்கும் போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இது போன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக் கூடாது.

05. தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளிலிருந்து தனியர் அவர்கள் தெரிவித்துள்ள நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

06. வழங்கப்படும் இத்தடையின்மை சான்றிதழ் மூலம் பெற்ற கடவுச்சீட்டை பயன்படுத்தி ஆணையரின் முன்னனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணத்திற்கு பயன்படுத்தக் கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளுடன் இவ்வலுவலருக்கு வழங்கப்பட்டுள்ள தடையின்மை சான்றிதழ் வழங்கப்பட்ட நாளிலிருந்து 6 மாத காலத்திற்கு மட்டுமே பொருந்தும் என தெரிவித்து டாக்டர் திருமதி. டி.ஆர். அபிராமி, மருத்துவ அலுவலர் என்பவருக்கு 10.12.2009 முதல் 24.12.2009 வரையிலான காலத்திற்கு தாய்லாந்து நாட்டிற்கு பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்றிதழ் வழங்கியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்4/3597/2009</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 20.01.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :74/2010 பொருள் எண்.17

**<u>வெளிநாடு செல்ல தடையின்மை சான்று பின்னேற்பு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக பணி செய்து வரும் டாக்டர். திருமதி. பி. சாருமதி, என்பவர் அமெரிக்கா நாட்டில் வசிக்கும் தன்னுடைய குழந்தைகளை காண்பதற்கு 2009 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் செல்ல தடையின்மை சான்றிதழ் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும் தனியர் 14.12.2009 முதல் 01.02.2010 வரை 50 நாட்கள் மட்டுமே ஈட்டிய விடுப்பில் செல்ல 07.10.2009 நாளிட்ட கடிதத்தில் அனுமதி கோரியுள்ளார்.

தனியர் 31.05.1979 அன்று சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்தார். தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தி தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். இவர் 16.12.2004 முதல் மண்டல அலுவலர் பதவி உயர்வு பெற்றுள்ளார் இதற்கான அரசின் உறுதியாக்கம் பெறப்பட்டது. மன்றத் தீர்மானம் எண்.376/2006 நாள் 31.08.2006 அன்று பெறப்பட்டுள்ளது. 05.08.2009 முதல் மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலராக பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார்.

இவர் மீது இத்துறையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை. சென்னை மாநகராட்சி, விழிப்புத் துறையிலிருந்தும் மற்றும் காவல் துறை, கண்காணிப்பாளர் பாதுகாப்பு பிரிவு குற்றப் புலனாய்வு அலுவலகத்திலிருந்தும் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. டாக்டர். திருமதி. பி. சாருமதி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் என்பவர் தனது கடிதத்தில், பயணச் செலவு முழுவதும் தனது மகன் ஏற்பதாக தெரிவித்து அதற்கான ஒப்புதல் கடிதம் பெற்று சமர்ப்பித்துள்ளார்.

டாக்டர். திருமதி. பி. சாருமதி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் அவர்கள் மீது விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்கத்திலிருந்து விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

இவர் பதவி வகுப்பு 2ன் கீழ் வருவதால், அயல்நாடு பயணத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும். அரசாணை எண்.259 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 17.12.2007ல் குறிப்பிட்டுள்ள கீழ்காணும் நிபந்தனைக்குட்பட்டு அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

<u>நிபந்தனைகள் பின்வருமாறு:-</u>

01. வெளிநாடு செல்லவிருக்கும் இவர் வெளிநாட்டில் தங்கும்போது வேலைவாய்ப்பை ஏற்கவோ அல்லது பயிற்சியிலோ மற்றும் படிப்பிலோ கலந்துக் கொள்ளக்கூடாது.
02. வெளிநாடு செல்லும் பயணச் செலவு உள்பட எவ்வித தொகையையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.
03. அவர் வெளிநாட்டில் இருக்கும் போது அவர் சென்னை மாநகராட்சி பணியினை துறக்க விண்ணப்பிக்க கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கையினை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டது.
04. வெளிநாட்டில் தங்கும் போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இது போன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக் கூடாது.
05. தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளிலிருந்து தனியர் அவர்கள் தெரிவித்துள்ள நாட்டிற்கு பயணம் செல்ல 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.
06. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் மூலம் பெற்ற கடவுச்சீட்டை பயன்படுத்தி ஆணையர் அவர்களின் முன்னனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணத்திற்கு பயன்படுத்தக் கூடாது.

மேற்கண்டுள்ள நிபந்தனைகளுடன் இவ்வலுவலருக்கு வழங்கப்படும் தடையின்மை சான்றிதழ் வழங்கப்படும் நாளிலிருந்து 6 மாத காலத்திற்கு தனியரால் தெரிவிக்கப்பட்டுள்ள அமெரிக்க நாட்டிற்கு செல்ல மட்டுமே பொருந்தும் என தெரிவித்து, டாக்டர். திருமதி. பி. சாருமதி, மாவட்ட குடும்ப நல மருத்துவ அலுவலர் என்பவர் 50 நாட்கள் ஈட்டிய விடுப்பு (14.12.2009 முதல் 01.02.2010 வரை) அமெரிக்க நாட்டிற்கும் பயணம் மேற்கொள்ள தடையின்மை சான்றிதழ் வழங்கியதற்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>சு.து.ந.க.எண்.சி1/2429/2009</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 25.01.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :75/2010 பொருள் எண்.18

**<u>கடவுச் சீட்டை புதுப்பிக்க தடையின்மை சான்று</u>**

டாக்டர். கே.எம். மனோகரன், மருத்துவ அலுவலர், சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை என்பவர் வெளிநாடு (கனடா) பயணம் மேற்கொள்ள 23.10.2004 அன்று காலாவதியான தனது கடவுச்சீட்டினை புதுப்பிக்க தடையின்மை சான்றிதழ் வழங்கக் கோரி 22.04.2009 தேதியிட்ட கடிதம் சமர்ப்பித்துள்ளார்.

டாக்டர். கே.எம். மனோகரன், என்பவர் சென்னை மாநகராட்சியில் 23.03.1984 முதல் மருத்துவ அலுவலராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் 23.03.1984 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இவருக்கு 30.03.1986 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளார். காவல்துறை கண்காணிப்பாளர் மத்திய புலனாய்வுத்துறை, சென்னை 2 அவர்களின் 20.06.2009 நாளிட்ட கடிதத்தில் தனியரது கடவுச்சீட்டு புதுப்பிக்க தடையேதும் இல்லை என தெரிவித்துள்ளார். விழிப்பு அலுவலர் சென்னை மாநகராட்சி அவர்களின் 04.03.2009 நாளிட்ட கடிதத்தில் விழிப்புத் துறையில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார். விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்பு துறையின் இயக்குநர் அவர்களின் 09.12.2009 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் இல்லை என தெரிவித்துள்ளார்.

சென்னை மாநகராட்சி, பணியமைப்பில் தனியர் வகிக்கும் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு 2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் கடவுச் சீட்டினை புதுப்பிக்க மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும். எனவே, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரது கடவுச்சீட்டினை புதுப்பிக்க தடையின்மை சான்றிதழ் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

01. வெளிநாடு செல்ல கடவுச்சீட்டு புதுப்பித்திட தடையின்மை சான்று கோரும் இவர் வெளிநாட்டில் தங்கும்போது வேலைவாய்ப்பை ஏற்கவோ அல்லது படிக்கவோ மற்றும் பயிற்சியிலோ கலந்துக் கொள்ளக்கூடாது.

02. வெளிநாட்டில் தங்கும் போது வியாபாரத்திலோ அல்லது பணி நியமனத்திற்காகவோ இது போன்ற சம்பந்தப்பட்ட வேலைகளில் ஈடுபடக் கூடாது.

03. வெளிநாடு செல்லும் பயணச் செலவு உட்பட எவ்வித தொகையையும் சென்னை மாநகராட்சி ஏற்காது.

04. அவர் வெளிநாட்டில் இருக்கும் போது அவர் சென்னை மாநகராட்சி பணியினை துறக்க விண்ணப்பிக்க கூடாது. மீறி அவர் பணி துறக்க விண்ணப்பித்தால் எக்காரணம் கொண்டும் அக்கோரிக்கையினை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டது.

05. வழங்கப்படும் தடையின்மை சான்றிதழை பயன்படுத்தி ஆணையரது முன் அனுமதியின்றி அடுத்த வெளிநாடு பயணம் ஏதும் மேற்கொள்ளக்கூடாது.

06. இவ்வாணை வழங்கப்பட்ட நாளிலிருந்து ஆறுமாத காலத்திற்கு மட்டுமே செல்லக் தக்கது.

07. வெளிநாடு செல்லும் முன் உரிய விடுப்பு அனுமதி பெற்று வெளிநாடு செல்ல வேண்டும். அவ்விடுப்பு ஆறுமாதத்திற்கு மிகையாகக் கூடாது.

08. இத்தடையின்மை சான்று தனியர் குறிப்பட்டுள்ளவாறு கனடா நாட்டிற்கு மட்டுமே செல்ல தக்கது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பே.சா.து.ந.க.எண்.பி5/2990/2009**

**ஆணையாளர் அவர்களின் 22.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :76/2010 பொருள் எண்.19

**கடவுச்சீட்டு பெற தடையில்லா சான்று**

சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறை, உதவி செயற் பொறியாளர், திரு.ஆர்.சீனிவாசலு அவர்கள் தனது மகனை பார்க்க U.A.E., Fujairah சென்று வர கடவு சீட்டு பெறுவதற்கு தடையில்லா சான்றிதழ் வழங்கும்படி 05.11.2009 நாளிட்ட கடிதம் மூலம் கோரியுள்ளார். மேலும், U.A.E., Fujairah சென்று வர ஆகும் செலவு அனைத்தையும் தனது மகன் ஏற்றுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

திரு.ஆர்.சீனிவாசலு அவர்கள் சென்னை மாநகராட்சியில் ஒவர்சீயராக 05.03.1977 முதல் பணியில் சேர்ந்தார். பிறகு 28.2.2000 முதல் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று, இந்நாள் வரை தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இவர் இதுவரை 32 வருடங்களுக்கு மேல் பணியாற்றியுள்ளார். இவர் 31.03.2013 அன்று பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். பொ.து.ந.க.எண்.அ3/53600/77 நாள்.20.03.1978–ன் ஒவர்சீயர் பதவியில் 05.03.1977 முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்பட்டது மற்றும் D.O.S.G.A3/5295/79 நாள். 30.03.1979ன் படி இப்பதவியில் 06.03.1979 முதல் தகுதி காண் பருவம் முடித்தமைக்காக ஆணை வழங்கப்பட்டது.

தனியர் மீது விழிப்புக் குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை எனவும் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர், சி.ஐ.டி. பாதுகாப்பு பிரிவு தனியர் மீது எவ்வித விசாரணையும் நிலுவையில் இல்லை என தெரிவித்துள்ளார்கள்.

மேலும், விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநரிடமிருந்து தனியர் மீது விசாரணையோ அல்லது புலன் விசாரணையோ நிலுவையில் இல்லை என கடிதம் பெறப்பட்டுள்ளது.

மேலும், சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறையில் திரு.ஆர்.சீனிவாசலு, உதவி செயற்பொறியாளர் அவர்கள் மீது இந்நாள் வரையில் எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் மற்றும் விசாரணைகளும் நிலுவையில் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

ஆகையால், சென்னை மாநகராட்சி, பேருந்து சாலைகள் துறை, உதவி செயற்பொறியாளர் திரு.ஆர்.சீனிவாசலு, அவர்கள் தனது மகனை பார்க்க U.A.E., Fujairah சென்று வர கடவுசீட்டு (passport) பெற கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தடையில்லா சான்றிதழ் (No objection certificate) வழங்குவதற்கு நியமனக் குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(1) ஆணையரின் முன் அனுமதி இன்றி தனியர் வெளிநாட்டில் தங்கியிருக்கும்போது அந்நாட்டில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தி கொள்வதோ, பயிற்சியில் கலந்து கொள்வதோ மற்றும் மேற்படிப்பு மேற்கொள்ளவோ கூடாது.

(2) வெளிநாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் வியாபார சம்பந்தமாக ஆதரவு திரட்டுவதோ மற்றும் அது சம்பந்தமாக பணிபுரிவதோ கூடாது.

(3) தனியர் வெளிநாடு சென்று வருவதற்கான செலவினங்களை சென்னை மாநகராட்சி ஏற்காது.

(4) வெளிநாடு புறப்படுவதற்கு முன் உரிய முறையில் விண்ணப்பம் அளித்து தகுதிவாய்ந்த விடுப்புக்கான அனுமதி பெற வேண்டும் என்றும்; அவ்வாறு பெறும் விடுப்பு 6 மாதங்களுக்கு மிகையாகக் கூடாது.

**(5)** வெளிநாட்டில் தங்கியிருக்கும்போது தனியர் தான் சென்னை மாநகராட்சியில் வகித்துவரும் பதவியிலிருந்து விலகல் கடிதம் (Resignation letter) அளிக்கும் பட்சத்தில் அதனை ஏற்க இயலாது.

**(6)** தனியருக்கு இப்பயணத்திற்காக வழங்கிய தடையில்லா சான்றிதழின் பேரில் பெறப்பட்ட கடவுச் சீட்டினை அடுத்தடுத்த வெளிநாடு பயணங்களுக்கு ஆணையரின் முன்அனுமதி இன்றி பயன்படுத்தக்கூடாது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>மா.கு.ந.(ம)ம.கு.ந.க.எண்.எப்4/3772/2009</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 25.01.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :77/2010 பொருள் எண்.20

**<u>பணிவிலகல்</u>**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் டாக்டர் திருமதி. ஆர். செந்தாமரைச்செல்வி, மருத்துவ அலுவலர் அவர்கள் 21.09.2004 முதல் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து 06.10.2007 அன்று நிரந்தர பணியில் சேர்ந்து வடபழனி மண்டலத்தில் பணிபுரிந்து வருகிறார்.

தனியர் 26.11.2009 அன்று, தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் பணியிலிருந்து விலக அனுமதி வேண்டி நியமன அதிகாரிக்கு கடிதம் அளித்துள்ளார்.

டாக்டர். திருமதி. ஆர். செந்தாமரைசெல்வி, மருத்துவ அலுவலர் மீது எந்தவிதமான குற்றச்சாட்டுகள் இல்லை என்றும், இவர் மீது துறை சார்பாக எந்த விதமான ஒழுங்கு நடவடிக்கையும் இல்லை என விழிப்பு துறை மூலம் சான்று பெறப்பட்டுள்ளது.

டாக்டர் திருமதி. ஆர். செந்தாமரைசெல்வி, மருத்துவ அலுவலர் அவர்கள் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பணி விலக கோரியுள்ளதை ஏற்க தமிழ்நாடு சார்நிலை அலுவலர் பணி விதி 41A(a)ன்படி பணி விலகல் கடிதம் அளித்து 3 மாத இறுதியில் பணியிலிருந்து விடுவிக்கப்படவேண்டும். நியமன அதிகாரிக்கு 26.11.2009 அன்று கடிதம் சமர்ப்பித்துள்ளதால் மூன்று மாதம் கணக்கிட்டு, தனியரை 26.02.2010 அன்று பணிவிலக அனுமதித்து பணியிலிருந்து விடுவிக்க மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

எனவே, டாக்டர் திருமதி. ஆர். செந்தாமரைசெல்வி, மருத்துவ அலுவலர், வடபழனி மண்டலம் என்பவரின் பணி விலகலை (Resignation) ஏற்று பணியாளரை 26.02.2010 அன்று பணியிலிருந்து விடுவிக்க நியமனக்குழு மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/2136/09</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 28.01.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :78/2010 பொருள் எண்.21

**<u>பணிவிலகல்</u>**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறை, டாக்டர். திருமதி. எ. கேத்தரின் ஜொனிட்டா, மருத்துவ அலுவலர் அவர்கள் சைதாப்பேட்டை மண்டலம் அவர்கள் 17.12.2008 அன்று முதல் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வந்தார்.

தனியர் 15.09.2009 அன்று தனக்கு உடல்நிலை சரியில்லை என்றும் தன்னை பணிவிலகல் அளிக்க வேண்டி முறையாக மனு அளித்து பணிக்கு வராமல் இருந்துள்ளார்.

டாக்டர். திருமதி. எ. கேத்தரின்ஜொனிட்டா, மருத்துவ அலுவலர் மீது எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது. இவர் மீது துறை சார்பாக எந்த விதமான ஒழுங்கு நடவடிக்கையும் இல்லை என விழிப்பு துறை மூலம் சான்று பெறப்பட்டுள்ளது.

டாக்டர். திருமதி. எ. கேத்தரின்ஜொனிட்டா, மருத்துவ அலுவலர் அவர்கள் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பணி விலக கோரியுள்ளதை ஏற்க தமிழ்நாடு சார்நிலை அலுவலரின் பணி விதி 41A(a)ன்படி இவரது பணி விலகலை ஏற்கலாம்.

டாக்டர். திருமதி. எ. கேத்தரின்ஜொனிட்டா, மருத்துவ அலுவலர், சைதாப்பேட்டை மண்டலம் என்பவர் பணி விலகல் கடிதம் வழங்கியுள்ளதால் இவரது பணி விலகலை ஏற்க மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக வேண்டடப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**மி.து.ந.க.எண்.மே1/1632/2008**
**ஆணையாளர் அவர்களின் 18.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :79/2010 பொருள் எண்.22

**பணியமைப்பு**

சென்னை மாநகராட்சி, மின்துறையில் தெரு விளக்கு பராமரிப்பு பணிகளுக்கான பிரிவு பொறுப்பு அலுவலர் நிலையில் கீழ்கண்ட பதவிகள் உள்ளன.

1. உதவி பொறியாளர்
2. இளநிலை உதவிபொறியாளர்
3. மின் ஆய்வாளர்

இப்பதவிகளில் அனுமதிக்கப்பட்ட இடங்கள், தற்போது பணியில் உள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் காலியாக உள்ள இடங்களின் எண்ணிக்கை வருமாறு:-

| வ.எண். | பதவியின் பெயர் | அனுமதிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை | தற்போது பணிபுரிபவர்களின் எண்ணிக்கை | காலியாக உள்ள இடங்கள் |
|---|---|---|---|---|
| 1. | உதவி பொறியாளர் | 68 | 38 | 30 |
| 2. | இளநிலை பொறியாளர் | | | |
| 3. | மின் ஆய்வாளர் | 33 | 6 | 27 |

மேற்கண்ட வகையில் கூட்டாக 57 இடங்கள் நிரப்பப்படாமல் உள்ளது. எனவே அதிகப் பணிச்சுமை மற்றும் மேற்பார்வை பணியில் தொய்வு ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளது.

எனவே, மின்துறையில் பணிபுரியும் தேவையான தொழில்நுட்பக் கல்வியான பட்டயப் படிப்பு அல்லது பட்டப் படிப்பு பெற்றுள்ள அனைத்து வகை கீழ்நிலைப் பதவிகளில் உள்ளவர்களை இளநிலை பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்க கருத்துரு சமர்ப்பிக்கப்படுகிறது. தற்போது ஊட்டப்பதவியில் தகுதிவாய்ந்த பதவி உயர்வு பெறக்கூடிய நபர்கள் மின்துறையில் இல்லை (From Feeder Category)

இது குறித்து சமர்ப்பிப்பது யாதெனில், நேரடி நியமனம் செய்வதை விட சென்னை மாநகராட்சியில் கீழ்நிலை பதவிகளில் உள்ள, இளநிலை பொறியாளர் பதவிக்குத் தேவையான தொழில் நுட்பக் கல்வித் தகுதி பெற்ற தகுதி வாய்ந்த நபர்களை இளநிலை பொறியாளர்களாக நியமனம் செய்யலாம் என பரிந்துரைக்கப்படுகிறது.

எனவே, இளநிலை பொறியாளர் பதவியில் காலியாக உள்ள பணியிடங்களில் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அனைத்து நிரந்தர கீழ்நிலை பணியாளர்களில் பட்டயப்படிப்பு அல்லது பட்டப்படிப்பு கல்வி தகுதி பெற்றுள்ள நபர்களுக்கு தற்போதுள்ள விதிகளைத் தளர்த்தி இளநிலை பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்க நியமனக்குழுவின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது "

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.3.ந.க.எண்.பி1/117/2009**

**ஆணையர் அவர்களின் 05.02.2010 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண் :80/2010 பொருள் எண்.23

**பழுதடைந்த பொதுக் கழிப்பிடம் இடிக்க அனுமதி.**

| வார்டு எண்.40 | மண்டலம்–3 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | பவுடர் மில்ஸ் சாலை மற்றும் புளியந்தோப்பு நெடுஞ்சாலை சந்திப்பில் உள்ள 12 இருக்கைகள் கொண்ட பொதுக் கழிப்பிடம் |
| கட்டடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சென்னை மாநகராட்சி பணித்துறை 1980ஆம் ஆண்டு கட்டப்பட்டது. |
| கட்டடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | மறு மதிப்பீட்டிற்கு பின் தற்போதைய புத்தக மதிப்பு ரூ.2220/– |
| கட்டடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது. |
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் பரப்பளவு | மனையின் பரப்பளவு 500 சதுர அடி அதில் கட்டிடத்தின் பரப்பளவும் 500 சதுர அடி அமைந்துள்ளது. |
| திட்ட முன் மொழிதல் | சாலை விரிவாக்கும் பணி. |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 3வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 447 நாள்: 08/12/2009 |

எனவே, மேற்கண்ட பழுதடைந்த பொதுக்கழிப்பிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு(சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"08.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.06, நாள்: 08.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.13/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.9.ந.க.எண்.பி2/5799/2009**
**ஆணையர் அவர்களின் 19.01.2010 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண் :81/2010 பொருள் எண்.24

**பழுதடைந்த பொதுக் கழிப்பிடம் இடிக்க அனுமதி.**

| வார்டு எண்.133 | மண்டலம்–9 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | பால்மோர் தெருவில் இடிந்துவிழும் நிலையில் உள்ள மிகவும் பழுதடைந்த பொதுக் கழிப்பிடம் |
| கட்டடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1985ஆம் ஆண்டு கட்டடத்துறையால் கட்டப்பட்டது. |
| கட்டடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.67,323/– |
| கட்டடம் இடிப்பதற்கான காரணம் | பொதுக்கழிப்பிடம் பொது மக்களால் பயன்படுத்தபடாமல் இடிந்து விழும் நிலையில் உள்ளது. |
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் பரப்பளவு | 60 சதுர மீட்டர் (645 ச.அடி) |
| திட்ட முன் மொழிதல் | பொதுக்கழிப்பிடம் பொது மக்களால் பயன்படுத்தபடாமல் இடிந்து விழும் நிலையில் உள்ளதால் அதனை இடித்துவிட்டு அவ்விடத்தில் மன்ற உறுப்பினர் 133 அவர்களின் வார்டு மேம்பாட்டு திட்ட நிதியிலிருந்து புதிதாக பல்நோக்கு மையக் கட்டிடம் கட்டப்படவுள்ளது. |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 9வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 225 நாள்: 24/09/2009 |

எனவே, மேற்குறிப்பிட்ட கட்டடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு(சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"08.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.4, நாள்: 08.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.11/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.10.ந.க.எண்.Á2/6192/2009**

**ஆணையர் அவர்களின் 19.02.2010 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண் :82/2010 பொருள் எண்.25

**பல நோய் சிகிச்சை மருத்துவமனை கட்டுவதற்காக சிமெண்ட் கிடங்கு இடிக்க அனுமதி**

| வார்டு எண்.142 | மண்டலம்–10 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | சி.பி.ராமசாமி சாலையில் உள்ள சிமெண்ட் கிடங்கு |
| கட்டடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1976ஆம் ஆண்டு கட்டப்பட்டது. |
| கட்டடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.1,25,670/– |
| கட்டடம் இடிப்பதற்கான காரணம் | பல நோய் சிகிச்சை மருத்துவமனை கட்டுவதற்காக |
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் பரப்பளவு | 7363 சதுர அடி |
| திட்ட முன் மொழிதல் | தென் சென்னையில் பலநோய் சிகிச்சை மருத்துவமனை கட்டுவதற்காக |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 10வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 454 நாள்: 21.10.2009 |

எனவே, தென் சென்னையில் பல நோய் சிகிச்சை மருத்துவமனை கட்டுவதற்காக சி.பி. ராமசாமி சாலையில் உள்ள சிமெண்ட் கிடங்கினை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.35/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.3.ந.க.எண்.பி1/838/2009**

**ஆணையர் அவர்களின் 05.02.2010 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண் :83/2010 பொருள் எண்.26

**பழுதடைந்துள்ள நாய் இனகட்டுப்பாடு மையம் இடிக்க அனுமதி.**

| வார்டு எண்.42 | மண்டலம்–3 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் விவரம் | பேசின் பாலச்சாலையில் உள்ள நாய் இனகட்டுப்பாடு மையத்தில் அமைந்துள்ள<br>Pre - Operatial Care Room<br>Post - Operatial Care Room<br>துப்புரவு ஆய்வாளர் அலுவலகம் |
| கட்டடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | சென்னை மாநகராட்சி பணித்துறை<br>1984ஆம் ஆண்டு கட்டப்பட்டது. |
| கட்டடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ. 20,100/– |
| கட்டடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் பழுதடைந்து இடியும் நிலையில் உள்ளது. |
| இடிக்கப்பட வேண்டிய கட்டடத்தின் பரப்பளவு | மனையின் பரப்பளவு 10716 சதுர அடி அதில் கட்டிடத்தின் பரப்பளவு 3356 சதுர அடி அமைந்துள்ளது. |
| திட்ட முன் மொழிதல் | துப்புரவு ஆய்வாளர் அலுவலகம்<br>Pre - Operatial Care Room<br>Post - Operatial Care Room<br>கட்டப்படவுள்ளது. |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 3வது மண்டல வார்டு குழு தீர்மான எண். 09 நாள்: 04/02/2010 |

எனவே, மேற்கண்ட பழுதடைந்த நாய் இனகட்டுப்பாடு மையத்தை இடிப்பதற்கு நிலைக்குழு(சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"08.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.07, நாள்: 08.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.14/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.8.ந.க.எண்.அ1/9228/2009**

**ஆணையர் அவர்களின் 13.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :84/2010 பொருள் எண்.27

**பழுதடைந்த சத்துணவுக்கூடம் இடிக்க அனமதி.**

| வார்டு எண்.–116 | மண்டலம்–8 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | ஜோகித்தோட்டம் சத்துணவுக்கூடம் மைய எண்.743 |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1981ஆம் ஆண்டு |
| கட்டித்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ஏதுமில்லை |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | சத்துணவுக்கூடம் மிகவும் மோசமான நிலையில் உள்ளதால் இதனை இடித்துவிட்டு புதிதாக கட்டப்பட வேண்டும். |
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 860 சதுரஅடி |
| திட்ட முன்மொழிதல் | மீண்டும் அதே இடித்தில் சத்துணவுக்கூடம் கட்டப்பட உள்ளது. |
| வார்டு குழு தீர்மான(பரிந்துரை) எண் மற்றும் நாள் | 8வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.250, நாள்:13.07.2009 |

எனவே, மேற்குறிப்பிட்ட கட்டித்தை இடிப்பதற்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

08.2.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.6/2010 நாள் 08.2.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.15/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.10.ந.க.எண்.சி1/7609/2009**
**ஆணையர் அவர்களின் 12.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :85/2010 பொருள் எண்.28

**பழுதடைந்த நிலையில் உள்ள பள்ளி கட்டிடம் இடிக்க அனுமதி.**

| வ.எண். | வார்டு – 144 | மண்டலம்–10 |
|---|---|---|
| 1. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | சண்முகம் பிள்ளை தெருவில் உள்ள மாநகராட்சி ஆரம்ப பள்ளியில் அபாயகரமான நிலையில் உள்ள பள்ளிக்கட்டிடம் |
| 2. | கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 1983ஆம் ஆண்டு கட்டப்பட்டது. |
| 3. | கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.20,285/– |
| 4. | கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | சமீபத்தில் பெய்த மழையின் காரணமாக அபாயகரமான நிலையில் உள்ளதால் |
| 5. | இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 1474.12 சதுரஅடி |
| 6. | திட்ட முன் மொழிதல் | அபாயகரமான நிலையில் உள்ளதால் இடித்துவிட்டு அவ்விடத்தினை பள்ளியின் விளையாட்டு மைதானத்தின் பரப்பளவை அகலப்படுத்தப்படவுள்ளது. |
| 7. | வார்டுகுழு தீர்மான எண். மற்றும் நாள் | 10வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.520, நாள்:23.11.2009 |

எனவே, மேற்கண்ட சண்முகம் பிள்ளை தெருவில் உள்ள மாநகராட்சி ஆரம்ப பள்ளியில் அபாயகரமான நிலையில் உள்ள பள்ளிக்கட்டிடம் இடிப்பதற்கு நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு(பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

08.2.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.7/2010 நாள் 08.2.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.16/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.7.ந.க.எண்.இ1/8602/2009**
**ஆணையர் அவர்களின் 10.12.2009 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண் :**86/2010** பொருள் எண்.**29**

**சாலை விரிவாக்க பணிக்காக கழிவறை இடித்தமைக்கு பின்னேற்பு அனுமதி**

| வார்டு எண்.104 | மண்டலம்–7 |
|---|---|
| இடிக்கப்பட்ட கட்டடத்தின் விவரம் | மேயர் இராமநாதன் சாலையில் கூவம் கரையோரம் உள்ள கழிவறை கட்டடம். |
| கட்டடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | **1941**ஆம் ஆண்டு கட்டப்பட்டது. |
| கட்டடத்தின் புத்தக மதிப்பு | ரூ.17,456/– |
| கட்டடம் இடித்ததற்கான காரணம் | விரைவு சாலை பணியின் அவசரத் தன்மையை கருத்தில் கொண்டு தேசிய நெடுஞ்சாலைத் துறைக்கு பொதுப்பணித் துறையினரால் ஒப்படைக்க வேண்டி உள்ளதால் இடிக்கப்பட்டது. |
| இடிக்கப்பட்ட கட்டடத்தின் பரப்பளவு | **82.55** சதுர மீட்டர் (**888.24** ச.அடி) |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | 7வது மண்டல வார்டு குழு தீர்மான எண். **703** நாள்: **10.11.2009** |

எனவே, மேற்குறிப்பிட்ட கட்டடத்தை இடித்தமைக்கு நிலைக்குழு(சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"08.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.**05**, நாள்: 08.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.**12/2010** நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது"

*******

**இ.பொ.து.பொ.தொ.ந.க.எண்.w5/374/2009**
**ஆணையாளரின் 18.02.2010 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண் :87/2010 பொருள் எண். 30

**பயனற்ற இரும்பு கழிவுகள் – விற்பனை செய்தல்**

சென்னை மாநகராட்சியின் பல்வேறு நிர்வாக பிரிவுகளிலிருந்து பயனற்றது என பெறப்பட்ட இரும்பு கழிவுகள் 60 மெட்ரிக் டன் எடை அளவு விற்பனை செய்யும் பொருட்டு மதிப்பாய்வு செய்வதற்கு செயற் பொறியாளர்.(இ)–1, சென்னை மாநகராட்சி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில் நுட்பக்குழு 22.7.2009 அன்று நேரடி ஆய்வு செய்து பயனற்றது என கழிவு செய்யப்பட்ட நிலையில் திறந்த வெளியில் துருப்பிடித்து காணப்படும் இரும்பு கழிவுகள் 60 மெட்ரிக் டன்னுக்கு மொத்த மதிப்பு ரூ.5,10,000/– என நிர்ணயிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பம் – ஏலம் கோரி முடிவு செய்த 10.9.2009 நாளன்று ஏலத்தில் மேற்கண்ட இரும்பு கழிவுகளை வாங்குவதற்கு கோரிய மொத்த விலை ரூ.6,06,000/–யானது தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பைவிட கூடுதலாக இருந்தபோதிலும், சந்தை நிலவர விலைக்கு குறைவாக காணப்பட்டதால் ரத்து செய்து விட்டு மறு ஒப்பம்–ஏலம் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறும் இறுதி நாள் 20.01.2010 அன்று ஒரு ஒப்பந்தப்புள்ளி நமூனா மட்டும் பெறப்பட்டது. 21.01.2010 ஏலம் நாளன்று 39 ஏலதாரர்கள் கலந்து கொண்டனர். ஏலத்தில் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நமூனாவில் பெறப்பட்ட விலைகளை ஒப்பாய்வு செய்யப்பட்டதில் ஒப்பந்தப்புள்ளி நமூனாவில் 60 மெட்ரிக் டன் எடைக்கு மொத்தம் ரூ.9,96,600/– என அளித்துள்ள விலையானது தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மொத்த மதிப்பு ரூ.5,10,000/– ஐ விட அதிகமாக இருப்பதால் விற்பனை செய்ய பின்வருவனவற்றின் மீது அனுமதி வேண்டப்படுகிறது.

1. பொது தொழிற்சாலையில் பல்வேறு நிர்வாகப் பிரிவுகளிலிருந்து பயனற்றது என பெறப்பட்ட இரும்பு கழிவுகள் 60 மெட்ரிக் டன் (60,000 கிலோ) எடை அளவு பயனற்றவை என கழிவு செய்யவும், மற்றும்
2. 60 மெட்ரிக் டன் எடை அளவு பயனற்ற இரும்பு கழிவுகளுக்கு தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மொத்த மதிப்பு ரூ.5,10,000/–க்கும் அதிகமாக ஒப்பந்தப்புள்ளி நமூனாவில் உயர்ந்த விலையாக ரூ.9,96,600/– கோரிய திருவாளர்கள். மதார் ஸ்டீல் டிரேடர்ஸ், சென்னை–81, அவர்களுக்கு உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யவும்,
3. 60 மெட்ரிக் டன் எடை இரும்பு கழிவுகளை விற்பனை தீர்வு செய்வதற்கு முன்பாக ஏற்கனவே செலுத்தப்பட்ட ஒப்பவைப்பு தொகை ( 20%) ரூ.2,00,000/– ஐ சரி செய்து செலுத்த வேண்டிய விலையின் மீதி தொகை ரூ.7,96,600/– மற்றும் ( கோரிய மொத்த விலைக்கு ) விற்பனை வரி, வருமான வரி, தனித்தனியாக செலுத்துச் சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்த கோருவதற்கும்,

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.25/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.7.ந.க.எண்.இ4/0139/2010</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 16.02.2010நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :88/2010 பொருள் எண்.31

**<u>சாலை விரிவாக்கம்</u>**

திருவாளர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் இன்பிராட்ஸட்சர் அவர்கள் வார்டு–110ல் கதவு இலக்கம் 49 & 50 வொய்ட்ஸ் சாலையில் ஒரு வியாபார ஸ்தல கட்டிடம் (Multiplax Complex) கட்டுவதற்காக சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் கடித எண்.C3/2118/06 நாள்.30.06.2006ன் படி திட்ட அனுமதி மற்றும் சென்னை மாநகராட்சி CWD/WDC 07/00202/07 படி கட்டிட அனுமதியும் பெற்று, மேற்படி கட்டுமான பணி நடைபெறும் போதே மேற்படி அனுமதிக்கு திருத்திய அனுமதி வேண்டி சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் கடித எண்.C3/1868/09 நாள்.30.10.2009ன்படி திட்ட அனுமதியும் சென்னை மாநகராட்சியில் CWD/WDC 07/00264/09 நாள்.04.11.2009ன் படி கட்டிட அனுமதியும் பெற்று கட்டுமான பணி முடிவுறும் தறுவாயில் உள்ளது.

இது குறித்து தெரிவிப்பது யாதெனில், வார்டு–110ல் உள்ள ஓய்ட்ஸ் சாலை மற்றும் வுட்ஸ் சாலையில், சென்னை பெருநகர் வளர்ச்சி குழு விரிவான விரிவாக்கம் வரைபடத்தின்படி (Detailed Development Plan) 24.00 மீ அகலத்திற்கு அகலப்படுத்தும் உத்தேசம் உள்ளது. (Street Alignment). எனவே, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் திட்ட அனுமதி வழங்கும் போது கடித எண்.C3/2118/06, நாள்.30.06.2006ன்படி வொய்டஸ் சாலை மற்றும் உட்ஸ் சாலையினை 24.00 மீட்டர் அகல விரிவாக்கத்திற்காக தேவையான நிலத்தினை சென்னை மாநகராட்சியிடம் கட்டிட முடிவு சான்றிதழ் (Completion Report) பெறுவதற்கு முன் ஒப்படைக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வழங்கியுள்ளது. அவ்வாறே மனுதாரரும் தனது 21.04.2007 தேதியிட்ட கடிதத்தில் தனக்கு சொந்தமான ச.எண்.315/1ல் உள்ள பட்டா நிலத்தில் 24.00 மீட்டர் அகலத்திற்கு விரிவுபடுத்த குறைந்த பட்சமாக 0.21 மீட்டர் அகலத்தில் இருந்து அதிகபட்சமாக 1.17 மீ அகலம் வரையிலான 179.13 ச.மீ. பரப்பளவு இடத்தினையும் வுட்ஸ் சாலையில் குறைந்த பட்சமாக 3.47 மீட்டர் அகலத்தில் இருந்து அதிகபட்சமாக 5.16 மீ அகலம் வரையிலான 575.24 ச.மீ பரப்பளவு இடத்தினையும் தனது பட்டா நிலத்திலிருந்து மாநகராட்சிக்கு ஒப்படைக்க உத்திரவாதம் அளித்துள்ளார்.

தற்போது மேற்படி சாலை விரிவாக்கத்திற்கு உரிய இடத்தினை சென்னை மாநகராட்சியில் ஒப்படைக்க மனுதாரர் தனது 04.12.2009 தேதியிட்ட கடித்தில் தெரிவித்துள்ளார். இது குறித்து வார்டுகுழு 7ன் தீர்மான எண்.6ன் படி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

எனவே, கீழ்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மாமன்றத்தின் ஒப்பதல் கோரப்படுகிறது.

(1) ஓயிட்ஸ் சாலை மற்றும் வுட்ஸ் சாலையினை 24 மீட்டர் அகலத்திற்கு விரிவு படுத்த தேவையான நிலப்பரப்பான (1) ஓயிட் சாலையில் 176.13 ச.மீ பரப்பு மற்றும் (2) வுட்ஸ் சாலையில் 575.24 ச.மீ. பரப்புள்ள இடத்தினை மனுதாரர் மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலமாக வழங்கவும்,

(2) மேற்படி ஏற்கப்படும் இடத்தில் சாலை விரிவாக்கப் பணிக்காக செலவாகும் தொகை ரூ.9,00,000/– (ரூபாய் ஒன்பது லட்சம் மட்டும்) மனுதாரரிடம் இருந்து வசூல் செய்யவும்,

(3) மேற்படி சாலை விரிவாக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட இடத்தினை தவிர்த்து மற்ற இடங்களில் மனுதாரர் சொந்த செலவில் சுற்று சுவர் அமைத்து கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதல் பெற சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘18.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.3/2010, நாள்.18.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.7.ந.க.எண்.இ4/7528/2009.**
**ஆணையாளர் அவர்களின் 12.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :89/2010 பொருள் எண்.32

**தானப்பத்திரம்**

மண்டலம்–7, வார்டு–110, சர்வே எண்.43/1, பிளாக் எண்.8, எழும்பூர்–நுங்கம்பாக்கம் தாலுகாவில், கதவு எண்.129 முதல் 140 வரை, கிரீம்ஸ் சாலையில் இரட்டை அடித்தளம் + தரைத்தளம் + 12 தளத்துடன் கூடிய அலுவலக கட்டிடங்கள் கட்டுவதற்கு திரு.இர்பான்ரசாக் (பேயன்பைஸ் வக்ப்பின் பொது அதிகாரம் பெற்றவர்), சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திடன் திட்ட அனுமதி பெற்றுள்ளார். அவ்வாறு திட்ட அனுமதி வழங்கும்போது அதில் சாலை விரிவாக்கத்திற்கு குறிப்பிட்டுள்ள நிலத்தை சென்னை மாநகராட்சியிடம் தானப்பத்திரம் மூலமாக ஒப்படைக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு ஒப்படைத்த பின்னரே சென்னை மாநகராட்சி கட்டிட அனுமதி வழங்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு சாலை விரிவாக்கத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலத்தினை சாலை அமைக்க மனுதாரரிடமிருந்து ரூ.1,80,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) கேட்பு வரைவு காசோலையாக மாநகராட்சி வசூல் செய்துள்ளது. மேற்படி நிலத்தினை மாநகராட்சி எடுத்துக்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக 29.10.2009 அன்று நடைபெற்ற மன்ற கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. மன்றம் கீழ்கண்ட விளக்கங்களை க்கேட்டு தீர்மானத்தை ஒத்தி வைத்தது.

1. வார்டு குழு ஒப்புதல் பெறவில்லை.
2. மனை இருக்கும் குறிப்பிட்ட இடத்தில் மட்டும் சாலை விரிவாக்கத்திற்காக நிலம் எடுக்கப்பட்டால் மற்ற இடங்களில் சாலை குறுகலானதாக இருக்கும். எனவே, நிலத்தின் உரிமையாளர் விரிவாக்க இடத்தினை மீண்டும் தன் சொந்த உபயோகத்திற்குதான் உபயோகப்படுத்துவார்.

இதுகுறித்து தெரிவிப்பது யாதெனில், மேற்படி நிலத்தினை மாநகராட்சி எடுத்து கொள்வதற்கு 10.11.2009ல் நடைபெற்ற வார்டுகுழுவில் பின்னேற்பு ஒப்புதல் வேண்டி தீர்மான எண்.683ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், சென்னை பெருநகர் குழும கட்டிட விதிப்படி அடுக்குமாடி கட்டிடம் கட்ட சாலையில் பொதுவான அகலம் 18மீ இருந்தால் போதுமானதாகும். இருப்பினும் அம்மனை அமையும் இடத்தில் 18 மீட்டர் குறைவாக இருக்கும் பட்சத்தில் 18 மீட்டர் அகலத்திற்கு தேவையான நிலத்தினை உரிமையாளர் மாநகராட்சியிடம் ஒப்படைக்கும் பட்சத்தில் மேற்படி கட்டிடத்திற்கு அனுமதி அளிக்கலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மனை அமைந்துள்ள கிரீம்ஸ் சாலையின் பொதுவான அகலம் 18 மீட்டருக்கும் கூடுதலாக உள்ளது. ஆனால், மேற்படி மனை அமைந்துள்ள இடத்தில் மட்டும் சாலையின் அகலம் 16 மீட்டரில் இருந்து 24 மீட்டர் வரை உள்ளது. எனவே, 18 மீட்டருக்கு குறைவாக உள்ள இடத்தின் சாலை 18 மீட்டர் அகலம் இருக்குமாறு தேவையான 117.28ச.மீ. இடத்தினை மனையின் உரிமையாளர் மாநகராட்சிக்கு தானமாக வழங்குவதன் மூலமாக சாலை ஒரே சீராக 18 மீட்டர் அகலத்திற்கு (சராசரி) இருக்கும். எனவே, மேற்படி இடத்தினை சாலை விரிவாக்கத்திற்கு மட்டுமே உபயோகப்படுத்தப்படும் இன்றி, மனையின் உரிமையாளர் அவ்விடத்தினை வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்த இயலாது. மேலும், அவ்வாறு மாநகராட்சி மேற்படி இடத்தினை கையகப்படுத்தியவுடன் சாலை விரிவாக்கப் பணியும் மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்படுகிறது. மேற்கூறிய விளக்கங்களின்

அடிப்படையில் கீழ்கண்ட இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. சாலை விரிவாக்கத்திற்கு எடுக்கப்படும் நிலத்தை தானப்பத்திரம் மூலமாக ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களுக்கு விண்ணப்பதாரரின் செலவில் பதிவு செய்வதற்கும்,

2. விண்ணப்பதாரரிடமிருந்து தோராய அபிவிருத்தி கட்டணம் ரூ.1,80,000/– (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) வசூலித்தமைக்கு பின்னேற்பு வழங்கவும்,

3. சாலை விரிவாக்கத்திற்கு வழங்கப்பட்ட நிலத்தினை குறியிட்டு, அதிலுள்ள மதில் சுவர் மற்றும் கட்டிடங்களை விண்ணப்பதாரரின் செலவில் இடிக்கவும், மாநகராட்சிக்கு ஒப்படைத்த இடம் தவிர்த்து மீதமுள்ள இடத்தில் மனுதாரர் செலவில் சுற்று சுவர் அமைப்பதற்கும் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

19.01.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண். 1/2010, நாள் 19.01.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.க.கு.ந.க.எண்.அ8/ 033/2010**
**ஆணையாளரின் 22.01.2010 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண் :90/2010 பொருள் எண்.33

**அரசாணை அமலாக்கத்திற்கு பின்னேற்பு அனுமதி வேண்டி**

அரசாணை பல்வகை எண்.1, நிதி (படிகள்) துறை, நாள் 02.01.2010ல், முறையான காலமுறைச் சம்பளம் பெறும் அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக அரசுப்பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசின் மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில் 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகையை 2008–2009ஆம் ஆண்டிற்கு மிகை ஊதியமாக வழங்க அரசு முடிவெடுத்துள்ளது .

மேலும், 2007–2008ஆம் ஆண்டு வரை 'இ' மற்றும் 'ஈ' தொகுதியைச் (C & D Group) சார்ந்த பணியாளர்களுக்கு, திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகை மிகை ஊதியமாக கணக்கிட்டு, உச்ச வரம்பினை ரூ.2,500/– என்பதாகக்கொண்டு, மிகை ஊதியத்தொகை வழங்கப்பட்டு வந்துள்ளது. இந்த உச்சவரம்பினை தற்போது ரூ.3,000/– ஆக உயர்த்தி அரசு முடிவு செய்து அதற்கிணங்க, தற்போது முறையான காலமுறைச் சம்பளம் பெறும் 'இ' மற்றும் 'ஈ' தொகுதியைச் (C & D Group) சார்ந்த அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட்ட பணியாளர்கள் ஆகியோருக்கு 2008–2009ஆம் நிதியாண்டுக்காக, திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகை மிகை ஊதியமாக வழங்கப்படவேண்டும் என அரசு உத்திரவிட்டுள்ளது. மிகை ஊதியம் 31.03.2009ஆம் நாளன்றுள்ளவாறான ஊதியத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட வேண்டும். மாதாந்திர ஊதியம் ரூ.3,000/– (ரூபாய் மூவாயிரம் மட்டும்) என்பதாகக்கொண்டு, மிகை ஊதியத்தொகை கணக்கிடப்படவேண்டும். திருத்திய சம்பள வீதத்திற்கு முந்தைய சம்பள வீதங்களில்/திருத்திய சம்பள வீதங்களில் சம்பளம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில், திங்களொன்றுக்கு ரூ.3,000/– என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு அவர்கள் பெற்ற ஊதியத்தின் அடிப்படையில் மிகை ஊதியம் கணக்கிடப்படவேண்டும். இந்த உச்சவரம்பு திருத்திய சம்பள வீதங்களுக்கு முந்தைய சம்பள வீதங்களில் பெற்ற ஊதியங்கள் அல்லது திருத்திய சம்பள வீதங்களில் பெற்ற ஊதியங்கள் இவற்றில் எந்த ஊதியமாக இருப்பினும் இரண்டிற்குமே பொருந்தும்.

''அ மற்றும் ஆ'' வகுப்பு பிரிவுகளில் பணிபுரியும் அலுவலர்கள், பல்கலைகழக மானியக்குழு அலுவலர்கள், அனைத்து இந்திய தொழிற்கல்வி மன்ற அலுவலர்கள் ஆகியோர் மிகைச்சம்பளம் பெற தகுதியில்லாத காரணத்தினால், அரசு அவ்வலுவலர்களுக்கு குறிப்பிட்ட மிகைச் சம்பள ரூ.1000/–மட்டும் வழங்க முடிவு செய்துள்ளது.

2008–2009ஆம் ஆண்டில் 240 நாட்களுக்கு குறையாமல் பணியாற்றிய தினக்கூலி மற்றும் ஒப்பந்தப் பணியாளர்கள், கிராம பணியமைப்பில் நிலையில்லா ஊதியம் பெறுவோர்/ மத்திய சத்துணவு திட்ட பணியாளர்கள், மாதாந்திர உழைப்பூதியம் மற்றும் தொகுப்பு ஊதியம் பெறும் பணியாளர்கள் சில்லரை செலவீனங்கள் மூலம் அளிக்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட மாத விகித ஊதியம் பெறும் பகுதி நேர மற்றும் முழு நேர பணியாளர்களுக்கும் சிறப்பு குறிப்பிட்ட மிகைச் சம்பளம் ரூ.1000/– அனுமதிக்கத்தக்கதாகும்.

மாநகராட்சிகள், வாரியங்கள்/கழகங்கள் மற்றும் கூட்டுறவுத்துறை நிறுவனங்களில் மிகைச்சம்பளம் மற்றும் கருணை ஊதியம் பெறாத நிறுவனங்களில் அயற்பணி அடிப்படையில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கும் மிகைச்சம்பளம் வழங்கப்பட வேண்டும் எனவும் அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் ‘‘முதல், இரண்டு மூன்று மற்றும் நான்காம் நிலை ‘‘பணியாளர்களுக்கும் அரசு அறிவித்த மிகைச் சம்பளம் / குறிப்பிட்ட மிகைச் சம்பளம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு வழங்கப்படும் மிகைச் சம்பளம் /குறிப்பிட்ட மிகை சம்பளத்தினால் சென்னை மாநகராட்சியில் **2009–2010**ஆம் நிதியாண்டில் ஏற்படும் கூடுதல் செலவீனம் ரூ. **5.75** கோடி ஆகும் என தெரிவிக்கப்படுகிறது .

எனவே, மேற்கண்ட அரசாணை பல்வகை எண்.**1**, நிதி (படிகள்) துறை, நாள் **02.01.2010**யினை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தியதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**34/2010**நாள் **22.02.2010**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>பொ.து.ந.க.எண்.பி3/45377/2009</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 05.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :91/2010 பொருள் எண்.34

**<u>அரசாணை அமலாக்கம்</u>**

அரசாணை (நிலை) எண்.2, நிதி (ஓய்வூதியம்) துறை நாள் : 02.01.2010ன் மூலம் இந்திய ஆட்சிப்பணி மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், ஆகியவற்றில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற அனைத்து பிரிவு ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு பொங்கல் பரிசாக ரூ.500/– வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணை ஏற்கனவே ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதியம் பெற்று வருபவர்களுக்கு பொருந்தும் என்றும், 02.01.2010 அன்று அல்லது அதற்கு பிறகு பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் மற்றும் பணியிலிருக்கும் போது காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்க பொங்கல் பரிசு வழங்க இயலாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் 01.10.2008 முதல் 01.01.2010க்கு இடைப்பட்ட காலங்களில் பணியிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் / பணிக்காலத்தில் காலமானவர்களுக்கு ஊக்கத்தொகை / சிறப்பு ஊக்கத் தொகை (Adhoc Bonus) வழங்கப்பட்டு இருப்பின் அவர்களுக்கு மீண்டும் பொங்கல் பரிசு வழங்க இயலாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆணை பின்வரும் வகையிலான ஓய்வூதியதாரர்களுக்கு பொருந்தாது.

01. உலேமா உதவித்தொகைகள், மாநில சுதந்திர போராட்ட வீரர்களுக்கான உதவித்தொகை பெறுபவர்கள், புகழ்பெற்ற அறிஞர்கள் மற்றும் சிறந்த மனிதர்களுக்கான சமூக உதவித் தொகைகள் போன்ற சிறப்பு ஓய்வூதியதாரர்கள்.
02. பணியில் இருக்கும் பணியாளர்களுக்கு பொருந்தக்கூடியவாறான மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் பெறுகின்ற கருணை அடிப்படையில் நியமனம் பெற்றுள்ள குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசு வழங்க இயலாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சென்னை மாநகராட்சியில் சுமார் 14,444 ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்கள் உள்ளனர். மேற்படி அரசாணையை நடைமுறைப்படுத்தி ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகை வழங்க சுமார் ரூ.72,22,000/– (ரூபாய். எழுபத்து இரண்டு இலட்சத்து இருபத்து இரண்டாயிரம் மட்டும்) செலவாகும்.

மேற்படி அரசாணையினை, இவ்வலுவலக சுற்றறிக்கை பொ.து.ந.க.எண்.பி3/45377/2010 நாள்: 02.01.2010ன் வாயிலாக சென்னை மாநகராட்சியில் ஓய்வூதியர்கள் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு அமலாக்கம் செய்யப்பட்டது.

எனவே, அரசாணை எண்.2, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் : 02.01.2010ன் படி 2010ஆம் ஆண்டு பொங்கல் பரிசாக ரூ.500/– (ரூபாய். ஐநூறு மட்டும்) சென்னை மாநகராட்சி ஓய்வூதியர் / குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்கியமைக்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''22.02.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.35/2010நாள் 22.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.பி9/2045/2009**
**ஆணையர் அவர்களின் 19.12.2009 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :92/2010 பொருள் எண் :35

**மதிப்பீடு மற்றும் பழைய கட்டடத்தை இடிக்க அனுமதி**

வார்டு எண் : 139 மண்டலம் : 9

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | கட்டடத்துறை–வார்டு–139, மண்டலம்–9, சைதாப்பேட்டை ரிச்சட்ஸ் பூங்காவில் புதியதாக தரைதளம் மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய மண்டல அலுவலகம் – 9 கட்டும் பணி |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை ...../ மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.966.00 இலட்சம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2009–2010 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி – கட்டடத்துறை 2009–2010 |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | பெறப்படவுள்ளது. |

சென்னை மாநகராட்சியின் 2009–2010ஆம் ஆண்டின் நிதி நிலை அறிக்கையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அறிவிப்பின்படி மண்டலம்–9 வார்டு–139, சைதாப்பேட்டை, ரிச்சட்ஸ் பூங்காவில் புதியதாக தரைத்தளம் (Stilt Floor) மற்றும் மூன்று தளங்களுடன் கூடிய 9வது மண்டல அலுவலகம் கட்டடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியிடம் அண்ணா சாலையைவிட சுமார் 6.00 முதல் 7.00 அடிகள் வரை தாழ்வாக அமைந்துள்ளது. இப்பணியிடத்தின் வளாகத்தில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் 1999–2000ல் கட்டப்பட்ட ஒரு பகுப்பாய்வு கூடம் (தரைத்தளம்) கட்டடம் மற்றும் 9வது மண்டல அலுவலக கட்டடம் ஆகியவைகள் அமைந்துள்ளன. மண்டல அலுவலக கட்டடம் இடித்துவிட்டு உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய 9வது மண்டல அலுவலகம் கட்டப்பட வேண்டுமானால் அண்ணா சாலையிலிருந்து சுமார் 60.00 மீட்டர் நீளமுள்ள அணுகுப்பாதை பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டும். இதற்கு சுமார் ரூ.5.00 கோடி செலவினம் ஏற்படக்கூடும். ஆனால் பழைய அலுவலக கட்டடம் இடிக்கப்படாமல் பகுப்பாய்வுகூட கட்டடம் மட்டும் இடிக்கப்பட்டு உத்தேசிக்கப்பட்டுள்ள மண்டல அலுவலக கட்டடம் அண்ணா சாலைக்கு அருகாமையில் கட்டப்பட்டால், அணுகு பாதை பாலம் கட்டுவதற்கான செலவினத்தை தவிர்க்கலாம் மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள மண்டல அலுவலக கட்டடத்தில் பொது மக்கள் வரப் போக மிகவும் வசதியாக இருக்கும் மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள மண்டல அலுவலக கட்டடத்தின் முன் முகப்பு தோற்றமும் நன்றாக அமையும் என கருதப்படுகிறது. மேலும், இவ்வளாகத்தில் இயங்கி வரும் மாநகராட்சி லாரி பணி மனைக்கு கூடுதல் இடவசதியும் வாகனங்கள் உள்ளே சென்று வெளியேவர வசதியாகவும் இருக்கும்.

இடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள பகுப்பாய்வுகூட கட்டடத்தின் பரப்பளவு 4540 சதுர அடிகளாகும். இதன் தற்போதைய அலுவலக புத்தக மதிப்பு ரூ.21,17,500/–ஆகும். தற்போது இயங்கி வரும் பகுப்பாய்வு கூடத்தை கட்டப்படவுள்ள புதிய மண்டல அலுவலக கட்டடத்தின் தரைத்தளத்திலோ அல்லது தற்போது 9வது மண்டல அலுவலகம் இயங்கி வரும் பழைய கட்டடத்திலோ அமைக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இதனை கருத்தில் கொண்டு பழைய பகுப்பாய்வுகூட கட்டடத்தை இடித்துவிட்டு புதிய 9வது மண்டல அலுவலக கட்டடம் கட்ட

உத்தேசிக்கப்பட்டு **2009–10**ம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி திட்ட மதிப்பீடு **ரூ.9,66,00,000/–** க்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே,

**1)** மேற்கண்ட **9**வது மண்டல அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள பகுப்பாய்வுக்கூட கட்டடம் **9**வது மண்டல அலுவலகம் மூலம் இடிக்க அனுமதியும் மற்றும்

2) Bkw;Fwpg;gpl;Ls;s gzpf;F 2009-2010 Mk; Mz;od; mYtyf tpiytptug;go jahhpf;fg;gl;Ls;s **ரூ.9,66,00,000/- (**ரூபாய் ஒன்பது கோடியே அறுபத்தாறு இலட்சம் மட்டும்**)** kjpg;gPl;ow;F தற்போது தமிழ்நாடு அரசு சிறப்பிதழ் எண்**.6/2008,** நாள்**.26.08.2008**ல் வெளியிடப்பட்டுள்ள TLjy; mjpfhuA;fspd;go brd;id khefu Kdprpgy; rl;lk; tpjp 1919-y; tpjp 78d;go epiyf;FGf;fs; (gzpfs;) kw;Wk; (thptpjpg;g[ (k) epjp) K}ykhf kd;wj;jpd; mDkjp Btz;o rkh;g;gpf;fg;gLfpwJ.

"19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.34/2010 நாள்:19.02.2010-ன்படி **9**வது மண்டல வார்டு குழுவின் பரிந்துரை பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்**49/2010**நாள் **22.02.2010–**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது**".**

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**க.து.ந.க.எண். பி3/1926/2009**

**ஆணையர் அவர்களின் 19.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :93/2010 பொருள் எண் : 36

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

வார்டு எண் : 47 மண்டலம் : 3

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | வார்டு–47ல் விக்டோரியா பப்ளிக் ஹால் புதுப்பிக்கும் gzp |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை/ மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை | **ரூ. 3,06,00,000/-** |
| மதிப்பீடு ஒப்புதல் பெறப்பட்ட விவரம் | மன்றத்தீர்மானம் எண்.478/2009, நாள். 31.12.09 |
| விலைப்பட்டி ஆண்டு | 2009–2010 |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| வ. எண | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2009–2010 ஆம் ஆண்டின் விலை விகிதம் விழுக்காடு அதிகம்/ குறைவஸ |
|---|---|---|---|---|
| 1. | jpUthsh;fs;.ஆர். கிருஷ்ணமூர்த்தி & கோ. | ரூ. 2,61,40,209.69 | ரூ. 3,87,76,393.00 | (+) 48.34 % அதிகம் |
| 2. | M/s.Millinium Construction Co., | ரூ. 2,61,40,209.69 | ரூ. 4,30,41,179.50 | (+) 64.66% அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விவரங்கள் | நாள்; 29.01.2010, 02.02.2010, 08.02.2010, 16.02.2010 மற்றும் 18.02.2010 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்ப விவரம் | **ரு 3,39,74,643.00** |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | jpUthsh;fs;.ஆர். கிருஷ்ணமூர்த்தி & கோ. |
| இறுதி ஒப்பந்தத்தொகை ரூபாய் | **ரூ. 3,39,74,643.00** |
| இறுதி ஒப்ப சதவிகிதம் | **(+) 29.97 % அதிகம்** |
| விலைப்பட்டி ஆண்டு | 2009–2010 |

மேற்கண்ட பணிக்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி & கோ. அவர்களின் ஒப்பம் 19.02.2010 அன்று நடைபெற்ற ஒப்பக் குழுமத்தின் (TENDER COMMITTEE) முன் சமர்ப்பிக்கப்பட்டு இவ்வொப்பம் ஏற்க பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே, பேச்சு வார்த்தைக்குப்பின் குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி & கோ. அவர்களின் ரூ.3,39,74,643/–க்கான அதாவது 2009–2010ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+) 29.97% அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்ப பணியை அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகர முனிசிபல் சட்டம் விதி 1919ல் விதி 80 (2) d; படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.33/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘22.02.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.48/2010நாள் 22.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>பா.து.ந.க.எண்.பி3/1750/2009</u>**

**<u>ஆணையர் அவர்களின் 13.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :94/2010 பொருள் எண்.37

## மண்டலம் – 10, வார்டு – 154ல் இந்திரா நகர் 2வது நிழற்சாலை மற்றும் ராஜீவ்காந்தி சாலை இணைக்கும் இடத்தில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் அமைக்கும் பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள் கிரீன் பீஸ் இன்ப்ராஸ்டரக்ட்சர்ஸ் டெவலப்மெண்ட் (பி) லிமிடெட் அவர்களுக்கு ரூ.3,58,10,775/—க்கு அளிக்க மன்றத்தின் அனுமதி கோரல்

மண்டலம் 10, வார்டு 154ல் இந்திரா நகர் 2வது நிழற்சாலை மற்றும் ராஜீவ்காந்தி சாலை இணைக்கும் இடத்தில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் அமைக்கும் பணிக்கு 2009 – 2010 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி ரூ.3,12,48,000/—க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது.

மண்டலம் 10, வார்டு 154ல் இந்திரா நகர் 2வது நிழற்சாலை மற்றும் ராஜீவ்காந்தி சாலை இணைக்கும் இடத்தில் பக்கிங்காம் கால்வாயின் குறுக்கே பாலம் அமைக்கும் பணிக்காக 22.01.2010 அன்று ஒப்பந்த விலைப்புள்ளி கோரப்பட்டதில் நான்கு ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர். அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்தாரர் பெயர் | அலுவலக மதிப்பீடு தொகை 2009 – 2010 ஆம் ஆண்டு விலை விவரப்படி | ஒப்பத்தொகை | ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள் கிரீன் பீஸ் இன்ப்ராஸ்டரக்ட்சர்ஸ் டெவலப்மெண்ட் (பி) லிமிடெட் | ரூ.3,04,85,771.96 | ரூ.3,58,10,775.00 | (+) 17.47% |
| 2 | திருவாளர்கள் ஆர்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ | ரூ.3,04,85,771.96 | ரூ.3,96,29,950.00 | (+) 29.99% |
| 3 | திரு.எஸ்.ஜெயராமன் | ரூ.3,04,85,771.96 | ரூ.3,86,21,830.00 | (+) 26.69% |
| 4 | திரு.கே.வடிவேலு | ரூ.3,04,85,771.96 | ரூ.3,61,35,330.00 | (+) 18.53% |

குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் கிரீன் பீஸ் இன்ப்ராஸ்டரக்ட்சர்ஸ் டெவலப்மெண்ட் (பி) லிமிடெட் அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஒப்பத்தொகை ரூ.3,58,10,775/—க்கு (+) 17.47% கூடுதல் சதவீதம் அதிகம் என்பதால், ஒப்பந்ததாரரிடம் 29.01.2010 அன்று விலைகுறைப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில் மேற்கண்ட பணிக்கு விலைப்புள்ளி குறைவாகவே சமர்ப்பித்துள்ளதாகவும் கூடுதல் விலைப்புள்ளி அளித்து லாபம் தரும் நோக்கத்தில் விலைப்புள்ளி அளிக்கவில்லை என்பதால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளனர்.

எனவே, ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.3,58,10,775/—க்கு (+) 17.47% அதிகம் ஆகும். இவ்விலை 23.01.2010 நாளிட்ட சந்தைவிலையுடன் ஒப்பிட்டு பார்த்ததில் (+) 5.84% அதிகம் ஆகும்.

மேற்கண்ட விவரங்களை 02.02.2010 அன்று ஒப்பக்குழுமத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இப்பணியானது பக்கிங்காம் கால்வாயின் சகதி நிறைந்த பகுதியில் மேற்கொள்ள வேண்யிருப்பதாலும், பிரத்யேக கட்டுமான உபகரணங்கள் கொண்டு பணி மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், மேலும் இப்பணியினை மேற்கொள்ள இப்பகுதியில் உள்ள நீரினை ஒரு பகுதியில் தடுப்பு அணை அமைத்து பணியினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இப்பணிக்கு தேவையான கட்டுமானப்பொருட்கள் மற்றும் உபகரணங்களை பணி நடைபெறும் பகுதியில் ஒப்பந்ததாரரின் தனிப்பட்ட கவனத்தில் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும், கால்வாயின் குறுக்கே பணி மேற்கொள்ளப்படுவதால் மழைக்காலங்களில் பணி முழுவதுமாக நிறுத்தி வைக்கப்பட வேண்டியுள்ளது.

பொதுவாக பாலப்பணிகளில் கலந்து கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் மிகவும் குறைவு, மேலும் முந்தைய பாலப்பணிகளுக்காக கோரப்படும் ஒப்பந்தப்புள்ளிகளில் **3** அல்லது **4** முறை ஒப்பங்கள் கோர வேண்டியுள்ளது. இப்பணிக்காக முதல் முறையே பெறப்பட்ட ஒப்பசதவீதம் (+) **17.47%** அதிகம் ஆகும். இவ்விலை சந்தைவிலையுடன் ஒப்பிட்டுப்பார்த்ததில் (+) **5.84%** அதிகம் ஆகும்.

இப்பணிக்கு தற்போது பெறப்பட்ட குறைந்த ஒப்ப சதவீதம் மீண்டும் விலைப்புள்ளி கோரப்பட்டால் குறைந்த ஒப்பந்தப்புள்ளி பெறுவதற்கு உத்திரவாதமில்லை. மேலும், இப்பணி பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக உள்ளது.

தற்போது மாமன்றம் சமீபத்தில் சுவாமி சிவானந்தா சாலை மற்றும் வாலாஜா சாலை பணிகளுக்கு முறையே (+) **36.28%** மற்றும் (+) **36.59%** கூடுதலான ஒப்ப சதவீதத்திற்கு அனுமதி அளித்துள்ளது. இப்பணிகளை ஒப்பிட்டு பார்த்ததில் இந்திரா நகர் **2**வது நிழற்சாலைக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி குறைவாகவே உள்ளது.

ஒப்பக்குழுமம் விரிவாக ஆராய்ந்து இப்பணியினை திருவாளர்கள் கிரீன் பீஸ் இன்ப்ராஸ்டரக்ட்சர்ஸ் டெவலப்மெண்ட் (பி) லிமிடெட் அளித்த ஒப்பத்தொகை ரூ.**3,58,10,775/–**க்கு பரிந்துரை செய்தது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள் கிரீன் பீஸ் இன்ப்ராஸ்டரக்ட்சர்ஸ் டெவலப்மெண்ட் (பி) லிமிடெட் அவர்களுக்கு **2009 – 2010** ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) **17.47%** அதிகமான ஒப்பத்தொகை ரூ.**3,58,10,775/–**க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி அளிக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.18/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) - வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**40/2010**நாள் **22.02.2010–**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது **”.**

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.8.ந.க.எண்.அ1/ 712 /2010.</u>**
**<u>ஆணையாளரின் 15.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :95/2010 பொருள் எண் :38

**<u>ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்பு திட்டத்தின் கீழ் நகர்புற ஏழைகளுக்கு வசதிகள் அளிக்கும் திட்டத்தின் (BSUP – PHASE-1) மூலமாக குடியிருப்பு வீடுகள் கட்டித்தர பயனாளிகள் தேர்வு செய்து திட்டத்தை செயல்படுத்த அனுமதி</u>**

ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் நகர்ப்புற ஏழைகளுக்கு வசதிகள் அளிக்கும் திட்டத்தின் (BSUP- PHASE-1) மூலமாக சென்னை நகரில் 236 குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும், மேலும் 44 குடிசைப் பகுதிகளில் பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய புதிய குடியிருப்பு வீடுகள் கட்டித் தரவும் 17.10.2007 அன்று நடைபெற்ற மத்திய ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழுக் கூட்டத்தில் ரூ.12743.88 லட்சங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

குடியிருப்பு வீடுகள் கட்டும் திட்டத்தை பொறுத்தவரை 44 குடிசைப் பகுதிகளில் ஒவ்வொரு வீடும் 330 சதுர அடி பரப்பளவில் ரூ.1,30,000/– மதிப்பீட்டில் 1370 எண்ணிக்கையிலான வீடுகள் ரூ.17.81 கோடியில் கட்டி முடிக்க வேண்டும்.

ஒவ்வொரு வீட்டிற்கான ரூ.1,30,000/–த்தில் 10 சதவீத பங்கான ரூ.13,000/–த்தை பயனாளிகள் ஏற்க வேண்டும். 50 சதவீத பங்கான ரூ.65,000/–த்தை மைய அரசும், 40 சதவீத பங்கான ரூ.52,000/–த்தை மாநில அரசும் மானியமாக அளிக்கும்.

இத்திட்டத்தில் பயனடையும் பயனாளிகள் இத்திட்டத்தின் வழிகாட்டுதலின்படி கீழ்க்காணும் தகுதியை பெற்றிருக்க வேண்டும்.

(1) நிலத்தின் உரிமையாளர் அதற்கான பத்திரம் மற்றும் பட்டா அவரது பெயரில் வைத்திருக்க வேண்டும்.

(2) பயனாளிகள் அந்தக் குடிசைப் பகுதியில் குறைந்தபட்சம் 5 வருடங்களாக குடியிருக்க வேண்டும்.

(3) மேலும், குடியிருப்பு கட்டும் தொகை ரூ.1,30,000/–ற்கு அதிகமானால் அதற்கான செலவினத்தை பயனாளிகளே ஏற்றுக் கொள்ள ஒப்புதல் அளிக்க வேண்டும்.

(4) பயனாளிகள் அந்தக் குடிசைப் பகுதிகளில் இருப்பதற்கு ஆதாரமாக கீழ்க்கண்ட ஆவணங்கள் வைத்திருக்க வேண்டும்.

அ) வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை,

ஆ) குடும்ப அட்டை (Ration Card)

இ) வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ளவர்களுக்கான (BPL) அத்தாட்சி

ஈ) வங்கி கணக்குப் புத்தகம்

உ) ஆயுள் காப்பீட்டு நகல்

மாமன்றத் தீர்மான எண்.195, நாள்–30.06.2009, மற்றும் 392/2009, நாள்–29.10.2009, மற்றும் 493/2009, நாள்–31.12.2009ன்படி ஏற்கனவே மண்டலம்–8ல் 108 பயனாளிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டித் தர ஒப்புதல் பெறப்பட்டது. இத்திட்டத்தில் அடுத்த கட்டமாக மேலும் 4 பயனாளிகள் கண்டறியப்பட்டு, தகுந்த ஆவணங்களை சமர்ப்பித்துள்ளனர். இதற்கான பட்டியல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த 4 குடியிருப்புகள் கட்டுவதற்கான செலவினம் (1,30,000 x 4 = 5,20,000) ரூ.5.20 இலட்சங்கள் ஆகும்.

மேற்கண்ட 4 எண்ணிக்கையிலான குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு பட்டியலில் உள்ளபடி பயனாளிகள் தேர்வு செய்து வார்டு குழு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்தை செயல்படுத்த நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

| . எண் | வார்டு எண் | பயனாளிகளின் பெயர் திரு/ திருமதி | விலாசம் | பரப்பளவு | சர்வே எண் | Phase-I (or) II (or) not comes under phase I and II |
|---|---|---|---|---|---|---|
| 1. | 122 | ஜி.சேகர் | பிளாக் எண்.53, நெ.53/17,83வது தெரு, கன்னியப்பா நகர், அசோக் நகர், சென்னை–83 | 8250ச.மீ | டி.எஸ். 73 | not comes under phase I and II |
| 2. | 122 | எம்.மைக்கேல் | பிளாக் எண்.29, நெ.59/26, 86வது தெரு, கன்னியப்பா நகர், அசோக் நகர், சென்னை–83 | 94 ச.மீ | டி.எஸ். 72 | not comes under phase I and II |
| 3. | 129 | ஜெ.வனிதா | பிளாக் எண்.6, நெ.13, திவாகர் நகர், சாலிகிராமம், சென்னை–83 | 72 ச.மீ | டி.எஸ். 175 | not comes under phase I and II |
| 4 | 118 | ஆர்.சேகர் | எண்.46, ப.எண்.68, ப்ளாக்–26, ட்ரஸ்ட்புரம் 9வது குறுக்குத் தெரு, கோடம்பாக்கம், செ–24. | 74 ச.மீ. | டி.எண். 19 | phase II |

"19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.21/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''22.02.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.42/2010நாள் 22.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.2.ந.க.எண்.இ1/1103/2010**

**ஆணையர் அவர்களின் 18.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :96/2010 பொருள் எண். 39

**மண்டலம்–2ல் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் (JNNURM) கீழ் நகர்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் (BSUP) வழங்கும் திட்டத்தில் கூடுதலாக வீடு கட்டும் பயனாளிகள் தேர்வு செய்து திட்டத்தை செயல்படுத்த அனுமதி**

மண்டலம்–2ல் வார்டு–22ல் **ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் (JNNURM) கீழ் நகர்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் (BSUP) PHASE-I** திட்டத்தின் மூலமாக குடிசை பகுதிகளில் 82 பயனாளிகளின் பங்களிப்புடன் கூடிய குடியிருப்பு வீடுகள் கட்டித்தர **ரூ. 106.60 இலட்சம்** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மண்டலம்–2ல் கடந்த **11.01.2010** அன்று நடைபெற்ற வார்டு குழு கூட்டத்தில் 3 பயனாளிகளுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டித் தர தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு மண்டலம்–2ல் குடிசைப் பகுதிகளில் வசிக்கும் பயனாளிகளை தேர்வு செய்து திட்டத்தை செயல்படுத்துவது சம்பந்தமாக 3 கீழ்கண்ட பயனாளிகளின் பெயர் மற்றும் விலாசம் சமர்ப்பிக்கப்படுகிறது.

**(PHASE-I) ஒப்புதல் பெறப்பட்டுள்ள குடிசைப் பகுதிகளில் தேர்வு செய்யப்படுள்ள பயனாளிகள் விவரம்:–**

| வ.எண் | வார்டு எண் | பயனாளியின் பெயர் (திரு/திருமதி) | குடிசைப்பகுதியின் பெயர் | பயனாளிகளின் விலாசம் |
|---|---|---|---|---|
| 1 | 22 | திரு. ஸ்ரீ நாத் | ஆஞ்சநேயர் நகர் | பழைய எண். 18, புதிய எண்.18, ஆஞ்சநேயர் நகர் 3வது சந்து, இராயபுரம், சென்னை– 13 |
| 2 | 22 | திருமதி. லட்சுமி | ஆஞ்சநேயர் நகர் | எண். 8, ஆஞ்சநேயர் நகர் 3வது சந்து, இராயபுரம், சென்னை– 13 |
| 3 | 22 | திருமதி. ஜி. சுமதி | ஆஞ்சநேயர் நகர் | எண். 6, ஆஞ்சநேயர் நகர் 3வது சந்து, இராயபுரம், சென்னை– 13 |

எனவே, மண்டலம்–2ல் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் (JNNURM) கீழ் நகர்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் (BSUP) வழங்கும் திட்டத்தின் மூலமாக குடிசை பகுதிகளில் மேற்கண்ட பயனாளிகளின் பங்களிப்புடன் கூடிய குடியிருப்பு வீடுகள் கட்டித் தர ஒரு பயனாளிக்கு ரூ. 1.30 இலட்சம் தவணைகளாக வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.23/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**43/2010**நாள் **22.02.2010**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2181/2009</u>**
**<u>ஆணையர் அவர்களின் 18.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

**தீர்மான எண் :97/2010** **பொருள் எண். 40**

## கொளத்தூர் நீர் பிடிப்பு பகுதியில் வெள்ளத் தடுப்பு பணிகள்

சென்னை மாநகரம் சமதள பரப்பைக் கொண்டுள்ளது. 2870 கி.மீ நீளம் சாலைத் தொகுப்பு உள்ளது. இவற்றில் தற்பொழுது 969 கி.மீ நீளத்திற்கு மட்டுமே மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு உள்ளது. இந்த மழைநீர் வடிகால்வாய்கள், 16 சிறு கால்வாய்கள், கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், அடையாறு ஆறு ஆகியன நகரில் மழைநீர் வடிவதற்கு தொகுப்பாகிறது. சென்னை மாநகரில் வெள்ளத்தடுப்புத் திட்டத்திற்காக நிரந்தர தீர்வு காணும் பொருட்டு, இத்திட்டத்திற்காக ரூ. 1448 கோடி திட்ட மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசின் ஒப்புதல் (திட்ட எண். JO 809 – 0035, JO 809 – 0037, JO 809 – 0041மற்றும் JO 809 – 0030 மூலம்) பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | நீர்த்தேக்கப்பகுதி | சென்னை மாநகராட்சி | பொதுப்பணித்துறை ஒதுக்கீடு | ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை | மத்திய அரசில் ஒப்புதல் பெறப்பட்ட தேதி |
|---|---|---|---|---|---|
| 1. | வடக்கு நீர்த்தேக்கப்பகுதி | 277.17 | 82.69 | 359.86 | 19.12.2008 |
| 2. | மத்திய நீர்த்தேக்கப்பகுதி | 261.11 | 83.89 | 345.00 | 29.12.2008 |
| 3. | கிழக்கு நீர்த்தேக்கப்பகுதி | 140.40 | 303.67 | 444.07 | 14.01.2009 |
| 4. | தெற்கு நீர்த்தேக்கப்பகுதி | 136.20 | 162.78 | 298.98 | 22.01.2009 |
| | **மொத்தம்** | **814.88** | **633.03** | **1447.91** | |

சென்னை மாநகராட்சி பங்குத் தொகை ரூ.814.88 கோடி, இதில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு 35 சதவீதம் ரூ. 285.25 கோடி, மாநில அரசின் நிதி ஒதுக்கீடு 15 சதவீதம் ரூ. 122.25 கோடி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித்துறையின் நிதி ஒதுக்கீடு 50 சதவீதம் ரூ. 407.50 கோடி ஆகும். இதற்கான அரசின் நிர்வாக ஒப்புதல் 06.07.2009 அன்று பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கொளத்தூர் நீர்ப்பிடிப்பு பகுதி கடந்த 20.11.2009 அன்று 12 ஒப்பங்கள் பெறப்பட்டது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர்களின் பெயர் |
|---|---|
| 1. | M/s SEW Infra Structure Limited |
| 2. | M/s P & C Constructions (P) Ltd |
| 3. | M/s G.S.R. Ventures |
| 4. | M/s R.P.P Construction (P) Ltd |
| 5. | M/s R.A.U.S Construction (Pvt) Ltd |
| 6. | M/s Nagarjuna construction Company Ltd |
| 7. | M/s Subaiya Construction Company Limited |
| 8. | M/s. Ramalingam & Company |
| 9. | M/s. Marg Limited |
| 10. | M/s. Prathiusha Associates Shipping Private Limited |
| 11. | M/s. Simplex Projects Limited |
| 12. | M/s. R.K. & Sons |

இதில் வரிசை எண்.10, 11 மற்றும் 12ல் உள்ள மூன்று ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த புள்ளியில் குறிப்பிட்டுள்ளபடி உரிய காலத்திற்குரிய பிணை வைப்புத் தொகை சமர்ப்பிக்காததால் இந்த ஒப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. மீதமுள்ள 9 ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்களில் உள்ள சிறிய குறைபாடுகள் தேவைப்படும் விவரங்கள் குறித்து கடிதங்கள் / மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது. இதில் வரிசை எண். 9–ல் உள்ள M/s.Marg Limited அவர்களிடமிருந்து சரியான விவரங்கள் எதுவும்

பெறப்படவில்லை. ஏனைய 8 ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் பரிசீலனை செய்து Evaluation Committee – க்கு சமர்ப்பிக்கப்பட்து.

Technical Bid பரிசீலிக்கப்பட்டு 04.01.2010 அன்று நடைபெற்ற Evaluation Committee – யில் M/s. Ramalingam & Company, M/s. Marg Limited, M/s. Prathiusha Associates Shipping Private Limited, M/s. Simplex Projects Limited, M/s. R.K. & Sons ஆகியோர்களின் ஒப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மற்ற 7 ஒப்பந்ததாரர்களின் Technical Bid ஒப்பங்களை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி 18.01.2010 அன்று இவ்வொப்பந்ததாரர்களின் Financial Bid திறக்கப்பட்டது. அவர்களின் ஒப்பந்த புள்ளி விவரம் பின்வருமாறு.

| வ. எண் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விலை | 2008 – 2009 ஆம் அலுவலக விலை விகிதப்படி ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|
| 1. | **M/s R.P.P Construction (P) Ltd** | **22,62,54,824.10** | **(+) 3.11%** |
| 2. | **M/s P & C Constructions (P) Ltd** | **24,25,64,779.00** | **(+) 10.55%** |
| 3. | **M/s SEW Infra Structure Limited** | **27,41,23,701.32** | **(+) 24.93%** |
| 4. | **M/s R.A.U.S Construction (Pvt) Ltd** | **28,36,19,601.80** | **(+) 29.26%** |
| 5. | **M/s Nagarjuna construction Company Ltd** | **28,60,79,525.00** | **(+) 30.38%** |
| 6. | **M/s G.S.R. Ventures** | **29,16,06,754.00** | **(+) 32.90%** |
| 7. | **M/s Subaiya Construction Company Limited** | -- | -- |

திருவாளர்கள். Subaiya Construction Company Limited அவர்கள் as per addendum I – revised bill of quantity சமர்ப்பிக்காததால் அவருடைய விலைப்புள்ளியை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ. 22,62,54,824.10 2008 – 2009 ஆம் ஆண்டின் அலுவலக விலை ரூ. 21,94,22,047.40 – ற்கு ஒப்பிடுகையில் (+) 3.11 % அதிகம். இந்நிலையில் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரிடம் மேலும் விலைக்குறைப்புடன் விலைப்புள்ளிகளின் சரித்தன்மை (அ) கூடுதலுக்கான விளக்கங்களும் தர அறிவுறுத்தப்பட்டது.

இதற்கு திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்கள் 02.02.2010 நாளிட்ட கடிதத்தில் விளக்கம் அளித்து விலைக் குறைப்பு செய்துள்ளார். இதன்படி திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd குறிப்பிட்ட ஒப்பத்தொகை ரூ. 22,60,33,846.53 2008 – 2009 ம் ஆண்டின் அலுவலக விலை விகிதத்தின் படி (+) 3.01 % அதிகம். மேலும் 2009 – 2010 ஆம் ஆண்டு அலுவலக விலைக்கு ஒப்பிடுகையில் (+) 15.76 % அதிகம் மற்றும் வெளிச்சந்தையில் (16.01.2010) விற்கப்படும் கட்டுமானப் பொருட்களுடன் ஒப்பிடுகையில் (+) 0.16% அதிகம் ஆகும்.

மேலும் திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்களுக்கு வழங்கப்படும் பட்டித்தொகையில் கீழே குறிப்பிட்டுள்ள தொகைகள் பிடித்தம் செய்யப்படவேண்டும்.

(1) 2% வருமானவரி

(2) 10% வருமானவரிக்கு கூடுதல் வரி

(3) வருமானவரி மற்றும் கூடுதல் வரிக்கு கல்வி வரி 3%

(4) 2% விற்பனை வரி

(5) 0.3% தொழிலாளர் நல நிதி தொகை

(6) ஒப்பந்ததாரர் தேவைக்கேற்ப செலுத்த வேண்டிய சேவை வரியை செலுத்தப்பட வேண்டும்.

09.02.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தபுள்ளி குழுக் கூட்டத்தில் இப்பணிக்குரிய ஒப்பத்தொகையை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் +0.16% கூடுதலாக உள்ளதால் பேச்சுவார்த்தை செய்து சந்தை விலையைவிட குறைவாக இருக்கவேண்டும் என்றும், மேலும் நீர்பிடிப்பு பகுதியிலுள்ள நீர்

வழிக்கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்வாய் இவற்றை தனித்தனியாக பிரித்து சந்தை விலையுடன் ஒப்பிட்டுப்பார்த்து குழுமத்திற்கு சமர்ப்பிக்குமாறு தீர்மானிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை செய்து ஒப்பத்தொகையை சந்தைவிலைக்கு குறைவாக பெறப்பட்டுள்ளது மேலும் கொளத்தூர் நீர்பிடிப்பு பகுதியில் நீர்வழிக் கால்வாய் ஏதும்இல்லை என்பதை ஒப்பந்தபுள்ளி குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது. இவ்வொப்பத்திற்கு **16.02.2010** அன்று ஒப்பங்கள் குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்கள் இரண்டாவது பேச்சு வார்த்தைக்குப் பின் அளித்த ஒப்பத் தொகை ரூ. **22,52,23,331.36 2008 – 2009** ம் ஆண்டின் அலுவலக விலை விகிதத்தின் படி (+) **2.64** % அதிகம். மேலும் **2009 – 2010** ஆம் ஆண்டு அலுவலக விலைக்கு ஒப்பிடுகையில் (+) **15.34** % அதிகம் மற்றும் வெளிச்சந்தையில் **(16.01.2010)** விற்கப்படும் கட்டுமானப் பொருட்களுடன் ஒப்பிடுகையில் **(–) 0.20**% குறைவு.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்கள் இரண்டாவது பேச்சு வார்த்தைக்குப்பின் அளித்த ஒப்ப தொகை ரூ. **22,52,23,331.36 2008 – 2009** ம் ஆண்டின் அலுவலக விலை விகிதத்தின் படி (+) **2.64** % அதிகம் என்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்களுக்கு. ரூ. **22,52,23,331.36** மதிப்பிற்கு பணிகள் அளிக்க சென்னை மாநகராட்சி சட்டம் **1919**ன் விதி **80 (2)** ன் படி, மன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.27/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**44/2010**நாள் **22.02.2010**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது **".**

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2186/2009**
**ஆணையர் அவர்களின் 18.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :98/2010 பொருள் எண். 41

**கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் கூவம் ஆறு நீர்ப்பிடிப்புப்பகுதியில் வெள்ளத் தடுப்பு பணிக்கான ஒப்பத்தை நிராகரித்து மறு ஒப்பம் கோர அனுமதி**

சென்னை மாநகரம் சமதள பரப்பைக் கொண்டுள்ளது. 2870 கி.மீ நீளம் சாலைத் தொகுப்பு உள்ளது. இவற்றில் 969 கி.மீ நீளத்திற்கு மட்டுமே மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு உள்ளது. இந்த மழைநீர் வடிகால்வாய்கள், 16 சிறு கால்வாய்கள், கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், அடையாறு ஆறு ஆகியன நகரில் மழைநீர் வடிவதற்கு தொகுப்பாகிறது. சென்னை மாநகரில் வெள்ளத்தடுப்புத் திட்டத்திற்காக நிரந்தர தீர்வு காணும் பொருட்டு, இத்திட்டத்திற்காக ரூ. 1448 கோடி திட்ட மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசின் ஒப்புதல் (திட்ட எண். JO 809 – 0035, JO 809 – 0037, JO 809 – 0041மற்றும் JO 809 – 0030 மூலம்) பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | நீர்த்தேக்கப்பகுதி | சென்னை மாநகராட்சி | பொதுப்பணித்துறை ஒதுக்கீடு | ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை | மத்திய அரசில் ஒப்புதல் பெறப்பட்ட தேதி |
|---|---|---|---|---|---|
| 1. | வடக்கு நீர்த்தேக்கப்பகுதி | 277.17 | 82.69 | 359.86 | 19.12.2008 |
| 2. | மத்திய நீர்த்தேக்கப்பகுதி | 261.11 | 83.89 | 345.00 | 29.12.2008 |
| 3. | கிழக்கு நீர்த்தேக்கப்பகுதி | 140.40 | 303.67 | 444.07 | 14.01.2009 |
| 4. | தெற்கு நீர்த்தேக்கப்பகுதி | 136.20 | 162.78 | 298.98 | 22.01.2009 |
| | **மொத்தம்** | **814.88** | **633.03** | **1447.91** | |

சென்னை மாநகராட்சி பங்குத் தொகை ரூ.814.88 கோடி, இதில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு 35 சதவீதம் ரூ. 285.25 கோடி, மாநில அரசின் நிதி ஒதுக்கீடு 15 சதவீதம் ரூ. 122.25 கோடி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித்துறையின் நிதி ஒதுக்கீடு 50 சதவீதம் ரூ. 407.50 கோடி ஆகும். இதற்கான அரசின் நிர்வாக ஒப்புதல் 06.07.2009 அன்று பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் 12 நீர்ப்பிடிப்பு பகுதிகளுக்கு ஒப்பங்கள் கோரப்பட்டுள்ளது. இதுவரை கீழ்கண்ட ஒன்பது நீர்ப்பிடிப்பு பகுதிகளுக்கு ஒப்பங்கள் பெறப்பட்டுள்ளது.

| **வரிசை எண்** | **நீர்ப்பிடிப்புப் பகுதி** | **குறைந்த ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளி சதவீதம் 2008 – 2009** | **2009 –10 ஆம் ஆண்டு அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம்** | **வெளிச் சந்தையின் விலையுடன் ஒப்பிடுகைளில் சதவீதம்** |
|---|---|---|---|---|
| **1.** | **கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்புப்பகுதி** | **(+) 14.01 %** | **(+) 24.84 %** | **(+) 13.00 %** |
| **2.** | **கொளத்துார் நீர்ப்பிடிப்புப்பகுதி** | **(+) 2.64 %** | **(+) 15.34 %** | **(–) 0.20 %** |
| **3.** | **ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்புப்பகுதி** | **(+) 10.76 %** | **(+) 23.86 %** | **(+) 8.55 %** |
| **4.** | **கூவம் ஆறு நீர்ப்பிடிப்புப்பகுதி** | **(+) 10.87 %** | **(+) 24.08 %** | **(+) 10.29 %** |
| **5.** | **விருகம்பாக்கம், அரும்பாக்கம் நீர்ப்பிடிப்புப்பகுதி** | **(+) 8.09 %** | **(+) 21.03 %** | **(+) 5.32 %** |
| **6.** | **வடக்கு பக்கிங்காம்கால்வாய் நீர்ப்பிடிப்புப்பகுதி** | **(–) 8.13 %** | **(+) 3.11 %** | **(–) 10.54 %** |
| **7.** | **அடையாறு நீர்ப்பிடிப்புப்பகுதி** | **(+) 7.68 %** | **(+) 20.72 %** | **(+) 6.02 %** |
| **8.** | **வேளச்சேரி நீர்ப்பிடிப்புப்பகுதி** | **(+) 2.85 %** | **(+) 15.29 %** | **(–) 0.122 %** |
| **9.** | **தெற்கு பக்கிங்காம்கால்வாய் நீர்ப்பிடிப்புப்பகுதி** | **(+) 1.70 %** | **(+) 13.48 %** | **(+) 0.37 %** |

**09.02.2010** அன்று நடைபெற்ற ஒப்பக்குழுமம் ஒப்பந்ததாரர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி விலைக்குறைப்பு செய்யவும் மேலும் கால்வாய் மற்றும் வடிகால்வாய் ஆகியவற்றின் மதிப்பீடுகளை தனியாகப் பிரித்து அவற்றை சந்தைவிலையுடன் ஒப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் **16.02.2010** அன்று நடைபெற்ற ஒப்பகுழுமக் கூட்டத்தில் கீழ்க்கண்டவாறு தீர்மானம் செய்யப்பட்டுள்ளது.

(1) கால்வாய் (Canal)பணிகளுக்கு சந்தைவிலையைவிட (+)10% அதிகமாக அளிக்கவும்

(2) வடிகால்வாய்(Storm Water Drain) பணிகள் மட்டும் உள்ள ஒப்பங்களுக்கு சந்தைவிலையை விட குறைவாக இருந்தால் மட்டும் ஒப்புதல் அளிக்கவும்,

(3) கால்வாய் மற்றும் வடிகால்வாய் உள்ள ஒப்பங்களில் கால்வாய் பணிக்கு (+) 10% அதிகமாகவும் வடிகால்வாய் பணிகளுக்கு சந்தை விலையை விட குறைந்த சதவிகிதம் உள்ள ஒப்பங்களுக்கு மட்டுமே ஒப்புதல் அளிக்கவும்

(4) அல்லது கால்வாய் மற்றும் வடிகால்வாய் பணிகள் உள்ள ஒப்பங்கள் மொத்தத்தில் சந்தை விலையை விட குறைவாக இருந்தாலும் பரிந்துரை செய்ய முடிவெடுக்கப்பட்டது.

இந்நிலையில் இதுவரை பெறப்பட்ட 9 நீர்பிடிப்பு பகுதிகளுக்கான ஒப்பங்களில் வரிசை எண். 6 வடக்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்புப்பகுதி, வரிசை எண். 2 கொளத்தூர் நீர்ப்பிடிப்புப் பகுதி மற்றும் வரிசை எண். 8 வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பகுதி ஆகிய மூன்று ஒப்பங்கள் வெளிச்சந்தை விலைகளைவிட குறைவாக இருப்பதால் ஒப்பக் குழுமத்தால் பரிந்துரைக்கப்பட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கியுள்ளது.

மீதமுள்ள 6 ஒப்பங்களில் வரிசை எண். 1. கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்புப்பகுதி 4. கூவம் ஆறு நீர்ப்பிடிப்புப்பகுதிகளுக்கான பெறப்பட்ட ஒப்பங்கள் சந்தை விலையை விட முறையே (+) 13% மற்றும் (+) 10.29% அதிகமாக உள்ளதால் இவை நிராகரிக்கப்பட்டு மறுவொப்பம் கோரலாம் எனக் கருதப்படுகிறது.

ஏனைய நான்கு ஒப்பங்களில் வரிசை எண். 3 ஓட்டேரி நல்லா நீர்பிடிப்பு பகுதி 5. விருகம்பாக்கம் , அரும்பாக்கம் நீர்பிடிப்புபகுதி 7. அடையார் நீர்பிடிப்புப்பகுதி 9. தெற்கு பக்கிங்காம் கால்வாய் நீர்பிடிப்புப்பகுதிக்கான ஒப்பங்கள் சந்தை விலையை விட முறையே (+) 8.55%, (+) 5.32% , (+) 6.02% மற்றும் (+) 0.37% அதிகமாக உள்ளதால் (10%க்கு குறைவு) சந்தைவிலைக்கு குறைவாக விலைப்புள்ளிகள் அளிக்கக்கேட்டு பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றும் கருதப்படுகிறது.

எனவே, கேப்டன் காட்டன் கால்வாய் நீர்ப்பிடிப்புப்பகுதி மற்றும் கூவம் ஆறு நீர்ப்பிடிப்புப்பகுதிகளுக்கான பெறப்பட்ட ஒப்பங்கள் சந்தை விலையை விட மிகவும் அதிகமாக உள்ளதால் இவ்வொப்பங்களை நிராகரித்து மறுவொப்பம் கோர சென்னை மாநகராட்சி சட்டம் 1919 விதி 80 (2) ன் படி, மன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலம் சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.30/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**45/2010**நாள் **22.02.2010**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/2188/2009**
**ஆணையர் அவர்களின் 18.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :99/2010 பொருள் எண். 42

**வடக்கு பக்கிங்ஹாம் கால்வாய் நீர் பிடிப்பு பகுதியில் வெள்ளத் தடுப்பு பணிகள்**

சென்னை மாநகரம் சமதள பரப்பைக் கொண்டுள்ளது. 2870 கி.மீ நீளம் சாலைத் தொகுப்பு உள்ளது. இவற்றில் தற்பொழுது 969 கி.மீ நீளத்திற்கு மட்டுமே மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு உள்ளது. இந்த மழைநீர் வடிகால்வாய்கள், 16 சிறு கால்வாய்கள், கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், அடையாறு ஆறு ஆகியன நகரில் மழைநீர் வடிவதற்கு தொகுப்பாகிறது. சென்னை மாநகரில் வெள்ளத்தடுப்புத் திட்டத்திற்காக நிரந்தர தீர்வு காணும் பொருட்டு, இத்திட்டத்திற்காக ரூ. 1448 கோடி திட்ட மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசின் ஒப்புதல் (திட்ட எண். JO 809 – 0035, JO 809 – 0037, JO 809 – 0041மற்றும் JO 809 – 0030 மூலம்) பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | நீர்த்தேக்கப்பகுதி | சென்னை மாநகராட்சி | பொதுப்பணித்துறை ஒதுக்கீடு | ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை | மத்திய அரசில் ஒப்புதல் பெறப்பட்ட தேதி |
|---|---|---|---|---|---|
| 1. | வடக்கு நீர்த்தேக்கப்பகுதி | 277.17 | 82.69 | 359.86 | 19.12.2008 |
| 2. | மத்திய நீர்த்தேக்கப்பகுதி | 261.11 | 83.89 | 345.00 | 29.12.2008 |
| 3. | கிழக்கு நீர்த்தேக்கப்பகுதி | 140.40 | 303.67 | 444.07 | 14.01.2009 |
| 4. | தெற்கு நீர்த்தேக்கப்பகுதி | 136.20 | 162.78 | 298.98 | 22.01.2009 |
| | மொத்தம் | 814.88 | 633.03 | 1447.91 | |

சென்னை மாநகராட்சி பங்குத் தொகை ரூ.814.88 கோடி, இதில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு 35 சதவீதம் ரூ. 285.25 கோடி, மாநில அரசின் நிதி ஒதுக்கீடு 15 சதவீதம் ரூ. 122.25 கோடி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித்துறையின் நிதி ஒதுக்கீடு 50 சதவீதம் ரூ. 407.50 கோடி ஆகும். இதற்கான அரசின் நிர்வாக ஒப்புதல் 06.07.2009 அன்று பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வடக்கு பக்கிங்காம் கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதி கடந்த 27.11.2009 அன்று 7 ஒப்பங்கள் பெறப்பட்டது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர்களின் பெயர் |
|---|---|
| 1. | M/s. Siva Engineering Company |
| 2. | M/s.IVRCL Infrastructure & Projects Limited |
| 3. | M/s. SEW Infra Structure Limited |
| 4. | M/s. AMR Construction Limited |
| 5. | M/s. Prathyusha Associates shipping Private Limited |
| 6. | M/s.G.S.R. Ventures Private Limited |
| 7. | M/s. Vision Ventures Limited |

மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரர்களின் Technical Bid பரிசீலிக்கப்பட்டு 02.02.2010 அன்று நடைபெற்ற Evaluation Committee – யில் 7 ஒப்பந்ததாரர்களின் Technical Bid ஒப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி 05.02.2010 அன்று இவ்வொப்பந்ததாரர்களின் Financial Bid திறக்கப்பட்டது. அவர்கள் அளித்த ஒப்பந்த புள்ளி விவரம் பின்வருமாறு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விலை | 2008 – 2009 ஆம் அலுவலக விலை விகிதப்படி ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|
| 1. | M/s. Siva Engineering Company | 16,21,28,092.40 | (–) 8.13% |
| 2. | M/s.IVRCL Infrastructure & Projects Limited | 19,72,97,226.62 | (+) 11.80% |
| 3. | M/s. SEW Infra Structure Limited | 20,93,39,095.00 | (+) 18.62% |
| 4. | M/s. AMR Construction Limited | 22,20,13,347.00 | (+) 25.80% |
| 5. | M/s. Prathyusha Associates shipping Private Limited | 23,40,71,937.00 | (+) 32.63% |
| 6. | M/s.G.S.R. Ventures Private Limited | 23,41,26,845.00 | (+) 32.66% |
| 7. | M/s. Vision Ventures Limited | – | – |

திருவாளர்கள். Vision Ventures Limited அவர்கள் as per addendum I – revised bill of quantity சமர்ப்பிக்காததால் அவருடைய விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர்கள். Siva Engineering Company அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ. 16,21,28,092.40 2008 – 2009 ஆம் ஆண்டின் அலுவலக விலை ரூ. **17,64,80,780.17 –** ற்கு ஒப்பிடுகையில் **(–) 8.13**% குறைவு.

திருவாளர்கள். Siva Engineering Company அவர்களை விலைக்குறைப்பு பேச்சு வார்த்தைக்கு அழைத்ததில் தன்னால் மேலும் விலையை குறைக்க இயலாலு என தெரிவித்துள்ளார். எனவே, திருவாளர்கள். Siva Engineering Company அவர்களின் ஒப்பத் தொகை ரூ. **16,21,28,092.40 2008 – 2009** ம் ஆண்டின் அலுவலக விலை விகிதத்தின் படி **(–) 8.13**% குறைவு ஆகும். குறிப்பிட்டுள்ள ஒப்பத் தொகையினை **2009 – 2010** ஆம் ஆண்டு அலுவலக விலைக்கு ஒப்பிடுகையில் (+)**3.11** % அதிகம் மற்றும் இவர் அளித்த ஒப்ப விழுக்காடு **(23.01.2010)** தற்சமயம் வெளிச்சந்தையில் விற்கப்படும் கட்டுமானப் பொருட்களுடன் ஒப்பிடுகையில்**(–) 10.54** % குறைவு. இதற்கு ஒப்பங்கள் குழுமம் **16.02.2010** அன்று நடைபெற்ற கூட்டத்தில் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, திருவாளர்கள். Siva Engineering Company அவர்களின் ஒப்ப தொகை ரூ. **16,21,28,092.40 2008 – 2009** ஆம் ஆண்டின் அலுவலக விலை ரூ. **17,64,80,780.17 –** ற்கு ஒப்பிடுகையில் **(–) 8.13**% குறைவு என்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள். Siva Engineering Company அவர்களுக்கு அளிக்க சென்னை மாநகராட்சி சட்டம் **1919** விதி **80 (2)** ன் படி, மன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.28/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**46/2010**நாள் **22.02.2010–**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது **”.**

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி4/2192/2009</u>**
**<u>ஆணையர் அவர்களின் 18.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :100/2010 பொருள் எண். 43

**<u>வேளச்சேரி நீர் பிடிப்பு பகுதியில் வெள்ளத் தடுப்பு பணிகள்</u>**

சென்னை மாநகரம் சமதள பரப்பைக் கொண்டுள்ளது. 2870 கி.மீ நீளம் சாலைத் தொகுப்பு உள்ளது. இவற்றில் தற்பொழுது 969 கி.மீ நீளத்திற்கு மட்டுமே மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு உள்ளது. இந்த மழைநீர் வடிகால்வாய்கள், 16 சிறு கால்வாய்கள், கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், அடையாறு ஆறு ஆகியன நகரில் மழைநீர் வடிவதற்கு தொகுப்பாகிறது. சென்னை மாநகரில் வெள்ளத்தடுப்புத் திட்டத்திற்காக நிரந்தர தீர்வு காணும் பொருட்டு, இத்திட்டத்திற்காக ரூ. 1448 கோடி திட்ட மதிப்பீட்டில் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மத்திய அரசின் ஒப்புதல் (திட்ட எண். JO 809 – 0035, JO 809 – 0037, JO 809 – 0041மற்றும் JO 809 – 0030 மூலம்) பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | நீர்த்தேக்கப்பகுதி | சென்னை மாநகராட்சி | பொதுப்பணித் துறை ஒதுக்கீடு | ஒப்புதல் அளிக்கப்பட்ட மொத்தத் தொகை | மத்திய அரசில் ஒப்புதல் பெறப்பட்ட தேதி |
|---|---|---|---|---|---|
| 1. | வடக்கு நீர்த்தேக்கப்பகுதி | 277.17 | 82.69 | 359.86 | 19.12.2008 |
| 2. | மத்திய நீர்த்தேக்கப்பகுதி | 261.11 | 83.89 | 345.00 | 29.12.2008 |
| 3. | கிழக்கு நீர்த்தேக்கப்பகுதி | 140.40 | 303.67 | 444.07 | 14.01.2009 |
| 4. | தெற்கு நீர்த்தேக்கப்பகுதி | 136.20 | 162.78 | 298.98 | 22.01.2009 |
| | மொத்தம் | 814.88 | 633.03 | 1447.91 | |

சென்னை மாநகராட்சி பங்குத் தொகை ரூ.814.88 கோடி, இதில் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு 35 சதவீதம் ரூ. 285.25 கோடி, மாநில அரசின் நிதி ஒதுக்கீடு 15 சதவீதம் ரூ. 122.25 கோடி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித்துறையின் நிதி ஒதுக்கீடு 50 சதவீதம் ரூ. 407.50 கோடி ஆகும். இதற்கான அரசின் நிர்வாக ஒப்புதல் 06.07.2009 அன்று பெறப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வேளச்சேரி நீர்ப்பிடிப்பு பகுதி கடந்த 20.11.2009 அன்று 11 ஒப்பங்கள் பெறப்பட்டது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர்களின் பெயர் |
|---|---|
| 1. | M/s. SEW Infra Structure Limited |
| 2. | M/s. R.P.P. Construction (P) Ltd |
| 3. | M/s.Prathiba Industries Limited |
| 4. | M/s. P & C Construction (P) Ltd |
| 5. | M/s.Sivaswathi Constructions Private Limited |
| 6. | M/s.IVRCL Infrastructure & Projects Limited |
| 7. | M/s Nagarjuna Construction Company Ltd |
| 8. | M/s.B.E.Billimoria & Company Limited |
| 9. | M/s. Siva Engineering Company |
| 10. | M/s. Krishnamurthy & Company |
| 11. | M/s Simplex Projects Limited |

இதில் வரிசை எண்.10 மற்றும் 11ல் உள்ள இரண்டு ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்த புள்ளியில் குறிப்பிட்டுள்ளபடி உரிய காலத்திற்குரிய பிணை வைப்புத் தொகை சமர்ப்பிக்காததால் இந்த ஒப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. மீதமுள்ள 9 ஒப்பந்ததாரர்களின் ஒப்பங்களில் உள்ள சிறிய குறைபாடுகள் தேவைப்படும் விவரங்கள் குறித்து கடிதங்கள் / மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது. இந்த 9 ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் பரிசீலனை செய்து Evaluation Committee – க்கு சமர்ப்பிக்கப்பட்டது.

Technical Bid பரிசீலிக்கப்பட்டு 19.01.2010 அன்று நடைபெற்ற Evaluation Committee – யில் M/s. Siva Engineering Company அவர்கள் ஒப்பவிதிகளின் படி P.C.C. மற்றும் R.C.C. பணிகள் செய்த விவரம் ஒப்ப விதிகளுக்கு குறைவாக சமர்ப்பித்துள்ளதால் இவ்வொப்பம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. மற்ற 8 ஒப்பந்ததாரர்களின் Technical Bid ஒப்பங்களை ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்படி 25.01.2010 அன்று இவ்வொப்பந்ததாரர்களின் Financial Bid திறக்கப்பட்டது. அவர்களின் ஒப்பந்த புள்ளி விவரம் பின்வருமாறு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர்களின் பெயர் | ஒப்பந்தபுள்ளி விலை | 2008 – 2009 ஆம் அலுவலக விலை விகிதப்படி ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|
| 1. | M/s. R.P.P. Construction (P) Ltd | 41,87,94,831.25 | (+) 2.97% |
| 2. | M/s.IVRCL Infrastructure & Projects Limited | 42,90,21,390.42 | (+) 5.49% |
| 3. | M/s. P & C Construction (P) Ltd | 44,80,58,439.00 | (+) 10.17% |
| 4. | M/s.Prathiba Industries Limited | 47,47,49,149.00 | (+) 16.73% |
| 5. | M/s.B.E.Billimoria & Company Limited | 47,51,28,493.85 | (+) 16.82% |
| 6. | M/s. SEW Infra Structure Limited | 51,78,99,469.08 | (+) 27.34% |
| 7. | M/s.Sivaswathi Constructions Private Limited | 53,17,52,460.03 | (+) 30.74% |
| 8. | M/s Nagarjuna Construction Company Ltd | 53,23,27,312.00 | (+) 30.89% |

மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்கள் அளித்த ஒப்ப தொகை ரூ. 41,87,94,831.25 2008 – 2009 ஆம் ஆண்டின் அலுவலக விலை ரூ. 40,67,10,961.86 – ற்கு ஒப்பிடுகையில் (+) 2.97 % அதிகம். இந்நிலையில் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரிடம் மேலும் விலைக்குறைப்புடன் விலைப்புள்ளிகளின் சரித்தன்மை (அ ) கூடுதலுக்கான விளக்கங்களும் தர அறிவுறுத்தப்பட்டது.

இதற்கு திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்கள் 02.02.2010 நாளிட்ட கடிதத்தில் விளக்கம் அளித்து விலைக் குறைப்பு செய்துள்ளார். இதன்படி திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd குறிப்பிட்ட ஒப்பத்தொகை ரூ. 41,83,93,474.88 2008 – 2009 ம் ஆண்டின் அலுவலக விலை விகிதத்தின் படி (+) 2.87 % அதிகம். மேலும் 2009 – 2010 ஆம் ஆண்டு அலுவலக விலைக்கு ஒப்பிடுகையில் (+) 15.32 % அதிகம் மற்றும் வெளிச்சந்தையில் (23.01.2010) விற்கப்படும் கட்டுமானப் பொருட்களுடன் ஒப்பிடுகையில் (–) 0.097% குறைவு ஆகும்.

மேலும் திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்களுக்கு வழங்கப்படும் பட்டித்தொகையில் கீழே குறிப்பிட்டுள்ள தொகைகள் பிடித்தம் செய்யப்படவேண்டும் என தெரிவித்துள்ளார்கள்.

(1) 2% வருமானவரி

(2) 10% வருமானவரிக்கு கூடுதல் வரி

(3) வருமானவரி மற்றும் கூடுதல் வரிக்கு கல்வி வரி 3%

(4) 2% விற்பனை வரி

(5) 0.3% தொழிலாளர் நல நிதி தொகை

(6) ஒப்பந்ததாரர் தேவைக்கேற்ப செலுத்த வேண்டிய சேவை வரியை செலுத்தப்பட வேண்டும்.

09.02.2010 அன்று நடைபெற்ற ஒப்பந்தபுள்ளி குழுக் கூட்டத்தில் இப்பணிக்குரிய ஒப்பத்தொகையை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 0.097% குறைவாக உள்ளதால் பேச்சுவார்த்தை செய்து சந்தை விலையைவிட குறைவாக இருக்கவேண்டும் என்றும், மேலும் நீர்பிடிப்பு

பகுதியிலுள்ள நீர் வழிக்கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்வாய் இவற்றை தனித்தனியாக பிரித்து சந்தை விலையுடன் ஒப்பிட்டுப்பார்த்து குழுமத்திற்கு சமர்ப்பிக்குமாறு தீர்மானிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் ஒப்பந்ததாரருடன் பேச்சுவார்த்தை செய்து ஒப்பத்தொகையை சந்தைவிலைக்கு குறைவாக பெறப்பட்டுள்ளது மேலும் வேளச்சேரி நீர்பிடிப்பு பகுதியில் நீர்வழிக் கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்வாய் பகுதிகளை தனித்தனியாக சந்தை விலையுடன் ஒப்பிட்டு ஒப்பந்தபுள்ளி குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது. இதற்கு **16.02.2010** அன்று ஒப்பங்கள் குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்கள் இரண்டாவது முறை பேச்சு வார்த்தைக்குப் பின் அளித்த ஒப்பத் தொகை ரூ. **41,82,88,898.51, 2008 – 2009** ம் ஆண்டின் அலுவலக விலை விகிதத்தின் படி (+) **2.85** % அதிகம். மேலும் **2009 – 2010** ஆம் ஆண்டு அலுவலக விலைக்கு ஒப்பிடுகையில் (+) **15.29** % அதிகம் மற்றும் வெளிச்சந்தையில் **(23.01.2010)** விற்கப்படும் கட்டுமானப் பொருட்களுடன் ஒப்பிடுகையில் **(–) 0.122**% குறைவு. இதற்கு **16.02.2010** அன்று ஒப்பங்கள் குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, மேற்கண்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பங்களில் திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்கள் இரண்டாவது முறை பேச்சு வார்த்தைக்குப்பின் அளித்த ஒப்ப தொகை ரூ. **41,82,88,898.51 2008 – 2009** ம் ஆண்டின் அலுவலக விலை விகிதத்தின் படி (+) **2.85** % அதிகம் என்பதால் இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள். R.P.P Construction (P) Ltd அவர்களுக்கு ரூ. **41,82,88,898.51** மதிப்பிற்கு பணிகள் அளிக்க சென்னை மாநகராட்சி சட்டம் **1919** விதி **80 (2)** ன் படி, மன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) யின் மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.29/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**47/2010**நாள் **22.02.2010–**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது **”.**

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**தி.க.மே.து.ந.க.எண்.எ7/ 2629 /2009**

**ஆணையரின் 12.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :101/2010 பொருள் எண்:44

**கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் வேலிச்சுவர் கட்டும் பணி**

மண்டலம்–1, பகுதி–1, கோட்டம்–2ல், **கொடுங்கையூர்** குப்பை கொட்டும் வளாகத்தில் வடக்கு திசையில் 5100 மீட்டருக்கு வேலிச்சுவர் கட்டும் பணிக்காக ரூ.2,67,00,000/– மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி 29.01.2010 என்று நாள் குறித்து ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டன. குறித்த நாளான29.01.2010 அன்று கீழ்வரும் ஒப்பங்கள் பெறப்பட்டன. அவைகளின் விவரங்கள் கீழ்வருமாறு.

| | ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம் | | | |
|---|---|---|---|---|
| | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ,) | 2009–2010ஆம் ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
| | திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன் | 2,30,27,864/– | 2,18,78,774./– | (–) 4.99 % |
| | திருவாளர்கள். பியர்ல் இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் கோ-ஆப்ரேடிவ் சொசையிட்டி லிமிடெட் | 2,30,27,864/– | 2,13,69,858/– | (–) 7.20 % |
| | திருவாளர்கள். கஜலஷ்மி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 2,30,27,864/– | 2,18,78,774./ | (–) 4.99 % |
| | திருவாளர்கள் வி.எஸ். கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 2,30,27,864/– | 2,18,78,774./ | (–) 4.99 % |

குறைந்த ஒப்பம் அளித்த திருவாளர்கள். பியர்ல் இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் கோ-ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிட்டட் (–) 5.00 %க்கும் அதிகமாக (–) 7.20 % என்று விலைவிகிதம் அளித்து கூடுதல் பாதுகாப்புத் தொகையாக அலுவலக மதிப்பில் 2 சதவிகிதம் ஒப்பந்தப்புள்ளியுடன் செலுத்தியுள்ளதால், அவர்களிடம் விலைகுறைப்பு பேச்சு வார்த்தை நடத்தப்படவில்லை. இப்பணிக்கான செலவினம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து செலவிடப்படும்

மேற்குறிப்பிடப்பட்ட பணிக்காக பெறப்பட்ட நான்கு ஒப்பங்களில் பேச்சு வார்த்தைக்குப்பின் திருவாளர்கள். பியர்ல் இன்ஜினியரிங் கன்ஸ்ரக்ஷன் கோவாப்ரேட்டிவ் சொஸைட்டி லிமிடெட் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு 2009–2010ஆம் ஆண்டின் அலுவலக விலையை விட (-) 7.20 % குறைவாகும். இதன்படி அவர் அளித்த ஒப்பத்தொகை ரூ.2,13,69,858/– ஆகும்.

ஏற்கனவே, இப்பணிக்கு ரூ2,88,35,000/–க்கு 2008–2009ஆம் ஆண்டு துறை விலைவிகிதங்களை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதலும், மேலும், இந்த திட்டம் ஜவஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாலும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் வரும் பணிகள் விரைவாக செய்து முடிக்கப்படவேண்டும் என்ற அவசரம் உள்ளதாலும், திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்பளிப்பினை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டு, அதில் குறைவான விலைப்புள்ளி

அளித்திருந்த திருவாளர்கள் மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் பேச்சு வார்த்தைக்கு பிறகு அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.2,42,86,242/– பரிந்துரைக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அது மன்றத்தினால் 29.10.2009 அன்று நடந்த கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு சாதகம் அளிக்கும் விதத்தில் நடந்து கொண்டுள்ளதாக துறை அலுவலர்கள் மீது புகார்கள் எழுந்ததாலும், மேலும், 2009–2010ஆண்டின் விலைவிகிதங்கள் அமலுக்கு வந்து விட்டதாலும், சட்ட அலுவலரின் பரிந்துரையின்படி ஒப்பங்கள் நிராகரிக்கப்பட்டு இப்பணிக்கு 2009–2010ஆம் ஆண்டின் விலைப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு திருத்தப்பட்டு 29.01.2010 என்று நாளிட்டு ஒப்பங்கள் கோரப்பட்டன. அவ்வாறு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் மேலே சொல்லப்பட்டுள்ளவாறு திருவாளர்கள். பியர்ல் இன்ஜினியரிங் கன்ஸ்ட்ரக்ஷன் கோ-ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிட்டட் அவர்கள் குறைவான ஒப்பத்தொகையினை அளித்துள்ளனர். இவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.2,13,69,858/– முந்தைய ஒப்பத்தில் இப்பணிக்கு பெறப்பட்ட ஒப்பத்தொகையான ரூ.2,42,86,242/– ஐ விட குறைவானதாகும்.

இந்த பணிக்கான .திட்ட மதிப்பீட்டின் விவரங்கள் கீழ்வருமாறு :–

| மதிப்பீட்டின் தொகை ரூ | | |
|---|---|---|
| ஆ | பணி செலவினம் மட்டும் | 2,30,27,864.40 |
| ஆ | மேற்பார்வை செலவு | 23,02,786/– |
| இ | சில்லறை மேற்பார்வை செலவு | 5,75,697/– |
| ஈ) | தரக்கட்டுப்பாடு | 2,30,279/– |
| உ) | மற்றைய எதிர்பாரா செலவு | 5,63,373/– |
| | மொத்தம் | ***2,67,00,000/–*** |

மேற்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ***ரூ.2,67,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தியேழு இலட்சம் மட்டும்)*** மதிப்பீட்டிற்கு ஆட்சிமுறை ஒப்பளிப்பு வேண்டப்படுகிறது.

எனவே,

(1) மண்டலம்–1, பகுதி–1, கோட்டம்–2, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் வடக்கு திசையில் வேலிச்சுவர் கட்டும் பணிக்காக 2009–2010 ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலை அடிப்படையாக கொண்டு ரூ.2,67,00,000/–(ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தியேழு இலட்சம் மட்டும்)க்கு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதலும்

(2) மேற்சொன்ன பணிக்காக மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளிகள் அழைத்ததற்கு மன்றத்தின் பின்னேற்பும் மற்றும்

(3) மேற்சொன்ன பணிக்காக பெறப்பட்ட திருவாளர்கள். பியர்ல் இன்ஜினியர்ஸ் கன்ஸ்ட்ரக்ஷன் கோ-ஆப்ரேட்டிவ் சொசைட்டி லிமிடெட் அவர்கள் கோரியுள்ள ரூ.2,13,69,858/–(ரூபாய் இரண்டு கோடியே பதிமூன்று இலட்சத்து அறுபத்தொன்பதாயிரத்து எண்ணூற்று ஐம்பத்தெட்டு மட்டும்)ஐ 2009–2010 ஆண்டு அலுவலக விலையை விட (-) 7.20 % குறைவான தொகைக்கு ஒப்புதலும் வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.19/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

‘‘22.02.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.53/2010நாள் 22.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**தி.க.மே.து.ந.க.எண்.எ7/ 2630 /2009**
**ஆணையரின் 18.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :102/2010 **பொருள் எண்:45**

**பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் வேலிச்சுவர்கட்டும் பணி**

மண்டலம்–10, பகுதி–30, கோட்டம்–155ல் ரூ.2,23,25,000/– மதிப்பீட்டிற்கு பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் வடக்கு திசையில் 4250 மீட்டருக்கு வேலிச்சுவர் கட்டும் பணிக்காக 29.01.2010 என்று நாள் குறித்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. குறித்த நாளான 29.01.2010 அன்று திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன் அவர்கள் மட்டும் ஒப்பந்தப்புள்ளி அளித்தனர். அவர்கள் அளித்துள்ள விலைவிவரம் கீழ்வருமாறு.

| ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ.) | 2009–2010ஆம் ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன் | **1,92,47,526.50** | **2,01,13,665.00** | (+) **4.5** % |

திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களிடம் விலைக்குறைப்பு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதில் 02.02.2010 நாளிட்ட கடிதத்தில் தங்களின் விலைவிகிதத்தை ரூ.2,01,13,665.00 அதாவது (+) 4.5 % என்பதிலிருந்து ரூ.1,99,01,942/– என்று அதாவது (+)3.40 % என்று குறைத்து அளித்துள்ளனர். அவ்வாறு குறைத்து அளிக்கும் போது அவர்கள் தேங்கியிருக்கும் தண்ணீரினை சென்னை மாநகராட்சி வெளியேற்றி தந்த பிறகே பொருட்களை எடுத்துச் செல்ல இயலும் என்று கூறியிருந்தனர். ஒப்பந்ததாரரை அந்த நிபந்தனையினை திரும்ப பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கு ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு என்பது நிபந்தனைக்குட்பட்டது என்று கூறியுள்ளார்கள். எனவே, ஒப்பந்ததாரர் தாங்கள் கொடுத்திருந்த விலைக்குறைப்பு கடிதத்தினை திரும்ப பெறுவதாகவும், தாங்கள் ஒப்பத்தில் கொடுத்திருந்த விலையான (+) 4.50% இறுதியானது என 18.02.2010 தேதியிட்ட அவர்களின் கடிதத்தில் கூறியுள்ளார்கள். இவர்களின் ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட ஒப்பத்தொகை 23.01.2010 சந்தை விலைவிகிதங்களோடு ஒப்பிடப்பட்டது. அதன்படி இந்த பணிக்கான சந்தை மதிப்பு ரூ.2,32,03,750.45 ஆகும். இதன்படி ஒப்பந்தப்புள்ளிதாரர் திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் ஒப்பத்தொகையான ரூ.2,01,13,665/– இப்பணிக்கான சந்தை மதிப்பை விட (–) 13.32 % குறைவாகும். இந்த ஒப்பந்ததாரர் சென்னை மாநகராட்சியில் பதிவு செய்யப்பெறாத ஒப்பந்ததாரர். ஆயினும் பொதுப்பணித்துறையில் முதல் வகுப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளவர்.

மேற்சொன்ன திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி, ஒப்பந்தப்புள்ளி குழுவின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டதில், ஒப்பந்தப்புள்ளி குழு தங்களது 18.02.2010 அன்று நடந்த கூட்டத்தில் திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களது மேற்சொன்ன ஒப்பந்தப்புள்ளிக்கு பரிந்துரையினை வழங்கியுள்ளது.

ஏற்கனவே, இப்பணிக்கு ரூ2,41,54,000/–க்கு 2008–2009ஆம் ஆண்டு துறை விலைவிகிதங்களை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதலும், மேலும், இந்த திட்டம் ஜஹர்லால்நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாலும், ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் வரும் பணிகள் விரைவாக செய்து முடிக்கப்படவேண்டும் என்ற அவசரம் உள்ளதாலும், திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்பளிப்பினை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டு, அதில் குறைவான விலைப்புள்ளி அளித்திருந்த திருவாளர்கள் மெர்குரி கன்ஷ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் பேச்சு வார்த்தைக்கு பிறகு அளித்துள்ள ஒப்பத்தொகையானரூ.1,99,05,899/–க்கு பரிந்துரைக்கப்பட்டு மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு அது மன்றத்தினால் 29.10.2009 அன்று நடந்த கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு சாதகம் அளிக்கும் விதத்தில் நடந்து கொண்டுள்ளதாக துறை அலுவலர்கள் மீது புகார்கள் எழுந்ததாலும், மேலும், **2009–2010**ஆண்டின் விலைவிகிதங்கள் அமலுக்கு வந்து விட்டதாலும், சட்ட அலுவலரின் பரிந்துரையின்படி ஒப்பங்கள் நிராகரிக்கப்பட்டு இப்பணிக்கு **2009–2010**ஆம் ஆண்டின் விலைப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு திருத்தப்பட்டு **29.01.2010** என்று நாளிட்டு ஒப்பங்கள் கோரப்பட்டதில் திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர். இவர்கள் பேச்சு வார்த்தைக்கு பிறகு அளித்துள்ள ஒப்பத்தொகையானது ரூ.**2,01,13,665/–** ஆகும்.

தற்போது இந்த பணிக்கான திட்ட மதிப்பீட்டின் விவரங்கள் கீழ்வருமாறு

| மதிப்பீட்டின் தொகை ரூ | | |
|---|---|---|
| அ | பணி செலவினம் மட்டும் | 1,92,47,526.50 |
| ஆ | மேற்பார்வை செலவு | 19,24,753/– |
| இ | சில்லறை மேற்பார்வை செலவு | 4,81,188/– |
| ஈ) | தரக்கட்டுப்பாடு | 1,92,475/– |
| உ) | மற்றைய எதிர்பாரா செலவு | 4,79,057.50/– |
| | மொத்தம் | ***2,23,25,000/–*** |

மேற்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ***ரூ.2,23,25,000/– (ரூபாய் இரண்டு கோடியே இருபத்துமூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்)*** மதிப்பீட்டிற்கு ஆட்சிமுறை ஒப்பளிப்பு வேண்டப்படுகிறது.

எனவே,

**(1)** கோட்டம்–**155**, பகுதி–**30**, மண்டலம்–**10**ல் **பெருங்குடி** குப்பை கொட்டும் வளாகத்தில் வேலிச்சுவர் கட்டும் பணிக்காக **2009–2010** ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலை அடிப்படையாக கொண்டு ***ரூ.2,23,25,000/– (ரூபாய் இரண்டு கோடியே இருபத்துமூன்று இலட்சத்து இருபத்தைந்தாயிரம் மட்டும்)***க்கு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதலும்

**(2)** மேற்சொன்ன பணிக்காக மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளிகள் அழைத்ததற்கு மன்றத்தின் பின்னேற்பும் மற்றும்

**(3)** மேற்சொன்ன பணிக்காக பெறப்பட்ட திருவாளர்கள். மெர்குரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் பேச்சு வார்த்தைக்குப் பிறகு கோரியுள்ள ***ரூ.2,01,13,665/–(ரூபாய் இரண்டு கோடியே ஒரு இலட்சத்து பதிமூன்றாயிரத்து அறுநூற்று அறுபத்தி ஐந்து மட்டும்)ஐ*** **2009–2010** ஆண்டு அலுவலக விலையை விட (+) **4.50 %** ***அதிகமான*** ஒப்பத்தொகை தொகைக்கு ஒப்புதலும் வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.32/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**54/2010**நாள் **22.02.2010**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

‘‘இதனை மன்றம் ஒத்திவைக்கின்றது’’

*******

**<u>தி.க.மே.து.ந.க.எண்.எ7/ 3191 /2009</u>**
**<u>ஆணையரின் 18.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :103/2010 பொருள் எண்.46

**<u>கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கான்கிரிட் சாலை அமைக்கும் பணி</u>**

மண்டலம்–1, பகுதி–1, கோட்டம்–2ல் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் 650 மீட்டருக்கு ரூ.2,88,00,000/–.2008–2009 ஆம் ஆண்டு விலைபட்டியலை அடிப்படையாக கொண்ட மதிப்பீட்டில் சிமென்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணிக்காக திட்ட மதிப்பீட்டிற்கு ஆட்சி முறை ஒப்பளிப்பை எதிர்நோக்கி 06.11.2009 என்று நாள் குறித்து ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டன. குறித்த நாள் அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் அவைகளை சமர்ப்பித்தவர்களின் விவரம் கீழ் வருமாறு.

| | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பணியின் அலுவலக மதிப்பு (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2007–08ஆம் ஆண்டு விலை விகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| | திருவாளர்கள். ராமாராவ் | 2,48,27,639/– | 2,60,44,193.31/– | (+) 4.90 % |
| | திருவாளர்கள். ஜி.கே.என்டர்பிரைசஸ் | 2,48,27,639/– | 2,48,52,466.63/- | (+) 0.10 % |
| | திருவாளர்கள். எம்.மேனகா | 2,48,27,639/– | 2,65,63,090.96/- | (+) 6.99 % |
| | திருவாளர்கள் எஸ்.ஜெயசந்திரன், | 2,48,27,639/– | 2,55,22,812.89/– | (+) 2.80 % |
| | திருவாளர்கள்.எ.ஹரிகிருஷ்ணன் | 2,48,27,639/– | 2,56,46,951.08/– | (+) 3.30 % |

குறைந்த விலைவிகிதம் அளித்த திருவாளர்கள் ஜி.கே. எண்டர்பிரைசஸ் அவர்களுடன் விலைக்குறைப்பு 11.11.2009 அன்று பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பத்தொகை/ஒப்ப சதவிகிதம் ரூ.2,48,27,639/- (துறை விலைவிகிதம்) ஆகும்.

இந்த கோப்பின் மீது நடவடிக்கை எடுக்கும் போது, 2009–2010ம் ஆண்டின் அலுவலக விலைவிகிதம் நடைமுறைக்கு வந்து விட்டது. அதன்படி இந்த பணிக்காக 2009–2010ஆம் ஆண்டின் அலுவலக விலைவிகிதத்தின் இந்த பணிக்கான மதிப்பீடு கணிக்கப்பட்டதில் இந்த பணியின் மதிப்பு (பணியின் மதிப்பு மட்டும்) ரூ.2,49,97,944/– ஆகும். இந்த விலைவிகிதத்தை விட திருவாளர்கள். ஜி.கே. எண்டர்பிரைஸஸ் அவர்கள் பேச்சு வார்த்தைக்குப்பின் கோரியுள்ள விலைவிகிதமான ரூ.2,48,27,639/-, (–) 0.686 % குறைவாகும். இந்த ஒப்பம் ஒப்பந்தப்புள்ளி குழுவின் முன் பரிந்துரைக்காக சமர்ப்பிக்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி குழு (tender committee) தங்களது 18.12.2009 நாளிட்ட கூட்டக்குறிப்புரையில் இந்த ஒப்பந்தப்புள்ளிக்கு பரிந்துரை வழங்கியுள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திருவாளர்கள். ஜி.கே.என்டர்பிரைசஸ் அவர்களுக்கு ரூ.2,48,27,639/- (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தி எட்டு இலட்சத்து இருபத்தி ஏழாயிரத்து அறுநூற்று முப்பத்தி ஒன்பது மட்டும்)க்கு 2008–2009 ஆம் ஆண்டு அலுவலக மதிப்பீடு செய்யப்பட்ட தொகைக்கே அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இந்த பணியினை ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாலும், மேலும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகள் விரைவாக செய்து முடிக்கப்பட வேண்டும் என்ற அவசரம் உள்ளதாலும், ரூ.2,88,00,000/–கான 2008–2009 ஆம் ஆண்டு விலைப்பட்டியலை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்பளிப்பினை எதிர்நோக்கி ஒப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த பணிக்கான திட்ட மதிப்பீட்டின் விவரங்கள் கீழ்வருமாறு.

| மதிப்பீட்டின் தொகை ரூ | | |
|---|---|---|
| அ | பணி செலவினம் மட்டும் | **2,48,27,639/–** |
| ஆ | மேற்பார்வை செலவு | **24,82,764/–** |
| இ | சில்லறை மேற்பார்வை செலவு | **6,20,691/–** |
| ஈ) | தரக்கட்டுப்பாடு | **2,48,276/–** |
| உ) | மற்றைய எதிர்பாரா செலவு | **6,20,630/–** |
| | மொத்தம் | **2,88,00,000/–** |

மேற்குறிப்பிட்ட பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ***ரூ.2,88,00,000/– (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தெட்டு இலட்சம் மட்டும்)*** மதிப்பீட்டிற்கு ஆட்சிமுறை ஒப்பளிப்பு வேண்டப்படுகிறது.

எனவே,

(1) கோட்டம்–2, பகுதி–1, மண்டலம்–1 கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் சிமெண்ட் கான்கிரிட் சாலை அமைக்கும் பணிக்காக 2008–2009ஆண்டு அலுவலக விலைப்பட்டியலை அடிப்படையாக கொண்டு ரூ.2,88,00,000/–க்கு தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதலும்

(2) மேற்சொன்ன பணிக்காக மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளிகள் அழைத்ததற்கு மன்றத்தின் பின்னேற்பும் மற்றும்

(3) மேற்சொன்ன பணிக்காக பெறப்பட்ட திருவாளர்கள். ஜி.கே.என்டர்பிரைசஸ் அவர்கள் பேச்சு வார்த்தைக்குப் பிறகு கோரியுள்ள **ரூ.2,48,27,639/- (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்தி எட்டு இலட்சத்து இருபத்தி ஏழாயிரத்து அறுநூற்று முப்பத்தி ஒன்பது மட்டும்)**க்கு, **2008–2009** ஆண்டு அலுவலக விலை மதிப்பீட்டிற்கு ஒப்புதலும் வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.31/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**55/2010**நாள் **22.02.2010–**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது **".**

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**தி.க.மே.து.ந.க.எண்.எ7/ 68 /2010**
**<u>ஆணையரின் 12.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :104/2010 பொருள் எண். 47

**<u>இரவு நேர துப்புரவு பணி திட்டம்</u>**

சென்னை மாநகரம் 174 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகவும் சுமார் 50 இலட்சம் மக்கள் தொகை கொண்டதாகவும் உள்ளது. தினசரி சென்னை மாநகரத்திற்கு எண்ணிலடங்கா மக்கள் பல்வேறு பணிகளின் நிமித்தம் வந்து செல்லுகின்றனர். மேலும் அடுக்குமாடி குடியிருப்புகளும் வணிக வளாகங்களும், அதிக அளவில் தொடர்ச்சியாக உருவாகி வருகின்றன. இதனால் சென்னை மாநகரத்தில் வணிக நடவடிக்கைகளும் மற்றும் சாலைகளில் போக்குவரத்தும் மிகவும் அதிகமாக உள்ளது. இதன் காரணமாக சென்னை மாநகரில் குடியிருப்போரின் எண்ணிக்கையும் வேகமாக அதிகரித்து மாநகரத்திற்கு வந்து செல்லும் மக்கள் தொகையும் அதிகரித்து வருகின்றது.

அதிகரித்து வரும் மக்கள் தொகை நெருக்கம், சாலைகளின் போக்குவரத்து நெரிசல், ஆகிய காரணங்கள் சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகளில்/சாலைகளில் துப்புரவு பணியினை பகல் நேரத்தில் செயலாக்குவது கடினமானதாக உள்ளதை கருத்தில் கொண்டு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2009–2010 நிதி நிலை அறிக்கையில் கீழ்வருமாறு அறிவித்துள்ளார்.

``**<u>இரவு நேர துப்புரவு பணி</u>**

சென்னை மாநகரில் மக்கள் அதிக அளவில் கூடும் சந்தைப்பகுதிகள், வணிக வளாகப்பகுதிகள், பேருந்து நிலையப்பகுதிகள் மற்றும் போக்குவரத்து நிறைந்த சாலைகள் ஆகிய இடங்களில் பகல் நேரத்தில் துப்புரவு பணி செய்வது கடினமாக இருப்பதால், இப்பகுதிகளில் துப்புரவு பணி இரவு நேரத்தில் செயல்படுத்தப்படும். ''

எனவே, சென்னை மாநகரத்தில் இது போன்ற பகுதிகளை மற்றும் சாலைகளை இனம் கண்டு அங்கு துப்புரவு பணியினை இரவு நேரத்தில் செயலாக்கலாம் என்ற அடிப்படையில் சென்னை மாநகரின் பல்வேறு பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டன. அந்த ஆய்வில் பல்வேறு சாலைகள்/தெருக்கள், சந்தைப்பகுதிகள் மற்றும் வணிகப்பகுதிகள் இனம் காணப்பட்டன. அவ்வாறு இனம் காணப்பட்டுள்ள சாலைகளின்/தெருக்களின் பட்டியல் இத்துடன் உள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு இரவு நேரத்தில் துப்புரவு பணி செயலாக்கப்படும் போது அந்த பணியானது போக்குவரத்து இடையூறுகள் மற்றும் மக்கள் நெரிசல் இன்றி முழுமையாக எளிதில் செயலாக்கப்படும்.

மேலும் அவ்வப்போதைய நிலையினை கருத்தில் கொண்டு துப்புரவு பணியினை பகலில் செயலாக்குவது கடினம் என்றும், இரவில் மட்டுமே துப்புரவு பணியினை செயலாக்க கருதப்படும் சாலைகளை/தெருக்களை/பகுதிகளை இனம் கண்டு தேவைக்கேற்ப அங்கும் துப்புரவு பணியினை செயலாக்கவும் அவசியம் உள்ளது.

மேலும் அவ்வாறு செயலாக்கப்படும் நிலையில் அந்தந்த சாலைகளுக்கு மற்றும் தெருக்களுக்கு தேவையான பணியாட்கள் மற்றும் வாகனங்கள் ஆகியவைகளையும் தீர்வு செய்ய வேண்டும். மேலும் இரவு துப்புரவு பணியினை இரவு 9.00 மணியில் இருந்து நள்ளிரவுக்குப்பின் 2.00 மணி வரையில் செயலாக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

எனவே, மேற்குறித்த காரணிகளின் அடிப்படையில்

(1) இத்துடன் இணைப்பில் சொல்லப்பட்டுள்ள சாலைகளின் /தெருக்களின் பட்டியலில் உள்ள இடங்களில் துப்புரவு பணியினை இரவு நேரத்தில் செயலாக்கவும்

(2) அவ்வாறு செயலாக்க அந்தந்த சாலைகள் மற்றும் தெருக்களுக்கு தேவையான பணியாட்கள் மற்றும் வாகனங்கள் இணைப்பில் உள்ள பட்டியலில் சொல்லப்பட்டுள்ளவாறு செயலாக்கவும்

(3) இரவு துப்புரவு பணியினை இரவு 9.00 மணியிலிருந்து நள்ளிரவுக்குப்பின் 2.00 மணி வரை செயலாக்கவும்

(4) அவ்வப்போதைய நிலையினை கருத்தில் கொண்டு மேலும் தேவையேற்படின் பகல்நேரத்தில் துப்புரவு பணியினை செயலாக்க இயலாத சாலைகளை/தெருக்களை இனம் கண்டு அங்கும் இரவு நேரத்தில் துப்புரவு பணியினை செயலாக்கவும்

மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மற்றும் நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது. .

## இணைப்பு

## இரவு துப்புரவு பணியினை செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ள இடங்கள்

| மண்டலம் | கோட்டம் | இடம் | வாகன ஒதுக்கீடு | துப்புரவு பணியாளர் ஒதுக்கீடு |
|---|---|---|---|---|
| 1 | 6 | திருவொற்றியூர் நெடுஞ்சாலை (விஜயராகவா சாலை முதல் சுங்கச்சாவடி வரை) – 5.5 கிலோ மீட்டர் | 1 சிறிய காம்பாக்டர் வாகனம் | 10 பணியாளர்<br>1 மேஸ்திரி |
| 2 | 27 மற்றும் 28 | ராஜாஜி சாலை மற்றும்<br>என்.எஸ்.ஸி. போஸ் சாலை – 1.9 கிலோ மீட்டர் | 1 சிறிய காம்பாக்டர் வாகனம் | 10 பணியாளர்<br>1 மேஸ்திரி |
| 5 | 68 | புல்லா அவென்யு (மாநகராட்சி அங்காடி)<br>ஈ.வெ.ரா. சாலை<br>புல்லா அவின்யூ விரிவு<br>கீழ்பாக்கம் கார்டன் சாலை | 1 பெரிய காம்பாக்டர் வாகனம் | 14 பணியாளர்<br>2 மேஸ்திரி |
| | 70 | புரசைவாக்கம் நெடுஞ்சாலை,<br>புதிய ஆவடி சாலை,<br>பிளவர்ஸ் சாலை,<br>மில்லர்ஸ் சாலை | | |
| | 71 | புரசைவாக்கம் நெடுஞ்சாலை,<br>கங்காதரரீஸ்வரர் கோயில் தெரு,<br>ராஜா அண்ணாமலை சாலை, | | |
| 7 | 110<br>107 & 108 | அண்ணா சாலை (ஸ்பென்சர்ஸ் முதல் ஜெமினி வரை – ஆயிரம் விளக்கு மார்கெட் சேர்த்து)<br>கோடம்பாக்கம் நெடுஞ்சாலை (நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை முதல் கோடம்பாக்கம் மாட்கெட் வரை)<br>கோபாலபுரம் முதல் தெரு | 1 சிறிய காம்பாக்டர் வாகனம் | 17 பணியாளர்<br>1 மேஸ்திரி |
| 9 | 131 | கோவிந்தசாமி தெரு (வணிக பகுதி மற்றும் மீன் மார்கெட்)<br>கே.கே. மெயின் சாலை (வணிக பகுதி மற்றும் காய்கறி மார்கெட்)<br>பிள்ளையார் கோயில் தெரு (வணிக பகுதி மற்றும் சிறுதொழில் நிறுவனங்கள் பகுதி) | 1 சிறிய காம்பாக்டர் வாகனம் | 1 துப்புரவு ஆய்வாளர்<br>47 பணியாளர்<br>2 மேஸ்திரி |
| | 134 | ஜோன்ஸ் சாலை, மேற்கு<br>கோடம்பாக்கம் சாலை | 1 சிறிய காம்பாக்டர் வாகனம் | |
| | 133 | கோடம்பாக்கம் சாலை,<br>கோவிந்தன் சாலை | | |
| | 136 | 70 அடி சாலை | | |
| | 137 | தெற்கு உஸ்மான் சாலை,<br>தென்மேற்கு போக் சாலை,<br>4வது பிரதான சாலை மற்றும் மார்கெட் | | |
| | 138 | எல்லையம்மன் கோயில் தெரு, பொன்னியம்மன் கோயில் தெரு | 1 சிறிய காம்பாக்டர் வாகனம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | **139** | ஜென்னிஸ் சாலை மற்றும் பஜார் சாலை | | |
| | **139** | அண்ணா சாலை ‘‘சி’’ பிரிவு | | |
| | இரவு ரீச்–34 | ஜென்னிஸ் சாலை மீன் அங்காடி | **1** கனரக வாகனம் (HMV) | |

“19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.20/2010 நாள்: 19.02.2010-ன்படி அந்தந்த வார்டுக்குழுக்களில் பின்னேற்பு அனுமதி பெறப்பட வேண்டுமென்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**52/2010**நாள் **22.02.2010–**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>நிமஉ துநகஎண்.எஸ்சி1/3755/2000</u>**
**<u>ஆணையர் அவர்களின் 20.01.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :105/2010 பொருள் எண்.48

**<u>டென்னிஸ் ஆடுகள நிலத்தை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ள அனுமதி</u>**

சென்னை–20, 8வது குறுக்குத் தெரு, இந்திரா நகர், 2ம் எண்ணுள்ள இடத்தில் கலிக்குன்றம் கிராமம், புல எண்.25 பாகம், 12 மனை 446 சதுர அடி சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலம், இந்திரா நகர் ஸ்போர்ட்ஸ் கிளப் அவர்களின் அனுபவத்தில் உள்ளது.

மேற்கண்ட நிலம் சென்னை மாநகராட்சிக்கு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தேவைப்படுவதால் இந்நிலத்தினை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுத்து அறிவிப்புகள் வழங்கிய பின்னர் இந்நிலத்தினை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ளலாம்.

எனவே, மேற்கண்ட நிலத்தினை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“22.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 24/2010 நாள் 22.02.2010–ன்படி, வார்டு குழுவின் தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.)பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நிமஉதுநகஎண்.எஸ்சி1/483/2004**
**ஆணையர் அவர்களின் 20.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :106/2010 பொருள் எண்.49

**டென்னிஸ் ஆடுகள நிலத்தை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ள அனுமதி**

சென்னை–20, சாஸ்திரி நகர், 5வது குறுக்குத் தெரு, 11ம் எண்ணுள்ள இடத்தில் ஊரூர் கிராமம், புல எண்.33 பாகம், 15 மனை 1620 சதுர அடி சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலம், சாஸ்திரி நகர் நலசங்கம் அவர்களின் அனுபவத்தில் உள்ளது.

மேற்கண்ட நிலம் சென்னை மாநகராட்சிக்கு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தேவைப்படுவதால் இந்நிலத்தினை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுத்து அறிவிப்புகள் வழங்கிய பின்னர் இந்நிலத்தினை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ளலாம்.

எனவே, மேற்கண்ட நிலத்தினை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “22.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 25/2010 நாள் 22.02.2010–ன்படி, வார்டு குழுவின் தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.)பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நிமஉ துநகஎண்.எஸ்சி1/3755A/2000**
**ஆணையர் அவர்களின் 20.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :107/2010 பொருள் எண்.50

**டென்னிஸ் ஆடுகள நிலத்தை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ள அனுமதி**

சென்னை–8, காந்தி இர்வின் சாலை, எழும்பூர், 30ம் எண்ணுள்ள இடத்தில் எழும்பூர் கிராமம், புல எண்.828 பாகம், 2ல் 165 மனை 0002 சதுர அடி சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான நிலம், தமிழ்நாடு டென்னிஸ் அசோசியேஷன் அவர்களின் அனுபவத்தில் உள்ளது.

மேற்கண்ட நிலம் சென்னை மாநகராட்சிக்கு பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தேவைப்படுவதால் இந்நிலத்தினை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்வது அவசியமாகிறது. விதிகளின்படி உரிய நடவடிக்கை எடுத்து அறிவிப்புகள் வழங்கிய பின்னர் இந்நிலத்தினை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ளலாம்.

எனவே, மேற்கண்ட நிலத்தினை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக்கொள்ள நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "22.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 26/2010 நாள் 22.02.2010–ன்படி, வார்டு குழுவின் தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.)பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/4357/2009**
**ஆணையர் அவர்களின் 05.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :108/2010 பொருள் எண்.51

பராமரிப்புக்கு எடுத்துக் கொள்வது

மண்டலம்–10, வார்டு எண்.154ல், எல்.பி.சாலை, திருவான்மியூர் கிராமம், பிளாக் எண்.10, நகர புல எண்.21/2ல் – (பழைய புல எண்.35 பாகம்) உள்ள தெருவினை அகலப்படுத்துவதற்கான 164.26.ச.மீ பரப்பளவுடைய நிலத்தினை, கட்டட வரைபட அனுமதி வழங்கும்போது கட்டட உரிமையாளரிடமிருந்து தானமாக எடுத்துக் கொண்டுள்ளதாகவும், எனவே இந்த நிலத்தினை சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ளுமாறு 05.10.2009 நாளிட்ட கடிதத்தில் சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் கேட்டுக் கொண்டுள்ளது.

மேற்கண்ட நிலத்தினை சென்னை மாநகராட்சி கையகப்படுத்த மாமன்றத்தின் அனுமதி பெற 10வது மண்டல வார்டு குழு தனது தீர்மானம் எண்.447, நாள்.21.10.2009இல் பரிந்துரை செய்துள்ளது. மேலும் மேற்கண்ட நிலத்தில் எந்த விதமான ஆக்கிரமிப்புகளும் இல்லையென மண்டல அலுவலர்–5 அவர்கள் 07.01.2010 நாளிட்ட குறிப்புரையில் தெரிவித்துள்ளார்.

எனவே மண்டலம்–10, வார்டு எண்.154ல், எல்.பி.சாலை, திருவான்மியூர் கிராமம், பிளாக் எண்.10, நகர புல எண்.21/2ல் – (பழைய புல எண்.35 பாகம்) உள்ள தெருவினை அகலப்படுத்துவதற்கான 164.26 ச.மீ. நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமத்திடமிருந்து சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"22.02.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.32/2010நாள் 22.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/1140/2008**
**ஆணையர் அவர்களின் 22.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :109/2010 பொருள் எண்.52

**பூங்காவிற்கான திறந்தவெளி காலி மனையை சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ள அனுமதி**

மண்டலம்–9, வார்டு எண்.131ல் அமைந்துள்ள தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய அன்னை சத்யா நகர் Phase-I திட்டப்பகுதியில் உள்ள பூங்காவிற்கான திறந்த வெளி நிலத்தினை சென்னை மாநகராட்சியின் பராமரிப்புக்கு எடுத்துக் கொள்ளுமாறும், இந்த நிலத்தினை கூட்டுப்புலத் தணிக்கை செய்வதற்கு உரிய தேதியினை தெரிவிக்குமாறும் 03.04.2008 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய அன்னை சத்யா நகர் Phase-I திட்டப்பகுதியில் சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்படவுள்ள 186 ச.மீ பரப்பளவு கொண்ட பூங்காவிற்கான நிலத்தினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய பொறியாளர், வார்டு எண்.131ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இவ்வலுவலக வட்டாட்சியர் மற்றும் சார்நில ஆய்வாளர் ஆகியோரால் கூட்டுப்புலத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு இதனைத் தொடர்ந்து மேற்படி நிலத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, நிலத்தின் அளவுகளை சரிபார்த்து சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு 26.06.2008, 06.02.2009 மற்றும் 06.11.2009 நாளிட்ட இவ்வலுவலக கடிதங்கள் வாயிலாக தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மேற்கண்ட அன்னை சத்யா நகரில் அமைந்துள்ள காலி மனையின் அளவுகள் சரிபார்க்கப்பட்டு எவ்வித ஆக்கிரமிப்புமின்றி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடமிருந்து பெறுவதற்கு 9வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.124, நாள்.07.07.2009ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே மண்டலம்–9, வார்டு எண்.131, அன்னை சத்யா நகர் Phase-I திட்டப்பகுதியில் உள்ள 186 ச.மீ. அளவுள்ள காலி மனையை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திடமிருந்து சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> “22.02.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.27/2010நாள் 22.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.6.ந.க.எண்.இ1/1481/2009</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 22.01.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :**110/2010** பொருள் எண்.**53**

**<u>நியாய விலைக்கடைகள் கட்டி வாடகைக்கு அளித்தல்</u>**

மண்டலம்–**6**, வார்டு–91, விவேகானந்தர் இல்லம் **1** மற்றும் **2** நியாய விலைக் கடைகள் தற்போது தனியார் கட்டிடத்தில் செயல்பட்டு வருவதாகவும், இந்த நியாய விலைக்கடைகள் சென்னை மாநகராட்சி இடத்தில் செயல்பட ஏதுவாகவும், அப்பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்களின் நலன் கருதியும், வார்டு–91, கஜபதிலாலா தெருவில் சமுதாய நலக்கூடத்தின் எதிரில், சிவன் கோயில் பக்கத்தில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 1000 சதுரடி காலி இடத்தை திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்கு ஒதுக்கீடு செய்ய கேட்டுக் கொள்ளப்பட்டது.

91–வது வார்டின் மாமன்ற உறுப்பினர் அவர்களின் 25.03.2009 தேதியிட்ட கடிதத்தில், கஜபதிலாலா தெருவில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான மேற்படி 1000 சதுரடி காலி இடத்தை விவேகானந்தர் இல்லம் **1** மற்றும் **2** நியாய விலைக் கடைகளை நடத்த விதிகளின்படி ஒதுக்கீடு செய்திட பரிந்துரைத்துள்ளார்.

22.05.2009 தேதியிட்ட 6வது மண்டல வார்டு குழு தீர்மான 115 ல் மண்டலம்–6, வார்டு–91, கஜபதிலாலா தெருவில் சமுதாய நலக்கூடத்தின் எதிரில் மற்றும் சிவன் கோயில் பக்கத்தில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 1000 சதுரடி காலி இடத்தை விவேகானந்தர் இல்லம் **1** மற்றும் **2** நியாய விலைக் கடைகளை நடத்த திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்கு குத்தகைக்கு அல்லது அவ்விடத்தில் சென்னை மாநகராட்சி மூலம் கட்டிடம் கட்டி நியாய விலைக் கடைகள் நடத்த வாடகைக்கு வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மேலும், 24.12.2009 தேதியிட்ட 6வது மண்டல வார்டு குழு தீர்மான 365 ல் கஜபதிலாலா தெருவில் மாநகராட்சிக்கு சொந்தமான 1000 சதுரடி இடத்தில் கட்டிடம் கட்டி உரிய வாடகை நிர்ணயம் செய்து நியாய விலைக்கடைகள் நடத்த திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்கு நிலம் மற்றும் உடமைத்துறை மூலம் வாடகைக்கு விட பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மண்டலம்–6, வார்டு–91, கஜபதிலாலா தெருவில் சமுதாய நலக்கூடத்தின் எதிரில் மற்றும் சிவன் கோயில் பக்கத்தில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 1000 சதுரடி காலி இடம் தற்போது உபயோகமற்ற நிலையில் வெற்றிடமாக உள்ளது. இந்த இடத்தின் அருகாமையில் கிருஷ்ணாம்பேட்டை மயான பூமி மற்றும் பொது கழிப்பிடம் உள்ளதால், வேறு பயன்பாட்டிற்கு உகந்ததாக இல்லை. மேலும், எதிர்காலத்தில் இவ்விடத்தில் ஆக்கிரமிப்புகள் ஏற்படுவதை தவிர்க்க, விவேகானந்தர் இல்லம் **1** மற்றும் **2** நியாய விலைக் கடைகளை நடத்த அவ்விடத்தில் சென்னை மாநகராட்சி மூலம் கட்டிடம் கட்டி நியாய விலைக் கடைகள் நடத்த வாடகைக்கு வழங்கலாம் என்று சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. மண்டலம்–6, வார்டு–91, கஜபதிலாலா தெருவில் சமுதாய நலக்கூடத்தின் எதிரில் மற்றும் சிவன் கோயில் பக்கத்தில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான 1000 சதுரடி காலி இடத்தில் கட்டிடம் கட்டி, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கத்திற்கு விவேகானந்தர் இல்லம் **1** மற்றும் **2** நியாய விலைக் கடைகள் நடத்த வாடகைக்கு வழங்கவும்,
2. சதுர அடிக்கு ரூ.15/– என்று மாத வாடகை நிர்ணயம் செய்வதற்கும், 12 மாத வாடகை முன்பணம் பெறுவதற்கும்,
3. ஒதுக்கப்படவுள்ள கட்டிடத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதாக இருப்பின் சென்னை மாநகராட்சி அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்று நிபந்தனை விதிப்பதற்கும்,
4. வாடகை தொடர்பாக திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிமிடெட் நிறுவனத்தின் இசைவினை பெற்று பின்னர் ஒதுக்கீடு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**36/2010**நாள் **22.02.2010**–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ3/1888/2009**
**ஆணையர் அவர்களின் 20.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :111/2010 பொருள் எண்.54

**உணவு பொருள் வழங்கல் அங்காடிக்கு இட ஒதுக்கீடு செய்ய அனுமதி**

தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகம், மண்டல மேலாளர், சென்னை மண்டலம் (தெற்கு) அவர்கள் கடிதத்தில் கோடம்பாக்கம் பகுதியில் இயங்கி வரும் அமுதம் சில்லறை அங்காடி 58 கோடம்பாக்கம் நெடுஞ்சாலை கடை (குறியீடு எண்.HA002) தற்போது 250 சதுர அடியில் கொண்ட இடத்தில் 1900 உணவு அட்டைகள் இணைப்பில் கொண்டு செயல்பட்டு வருகிறது எனவும், இக்கடை மக்கள் நெருக்கடியான பகுதியில் அமைந்துள்ளது எனவும், இக்கடையின் நுழைவாயில் சிறியதாக அமைந்துள்ளதால் அட்டைதாரர்கள் ஒவ்வொருவராக கடையின் உள்ளே சென்று உணவு பொருள்கள் பெற்று கொண்டு திரும்பி வரும் பொழுது இருக்கமான நிலையில் இக்கட்டிடம் அமைந்துள்ளது. எனினும் உணவு பொருள்கள் போதிய அளவு இருப்பு வைக்க இடமில்லை எனவும் ஆகையால் மண்டலம்–8, பாலமுத்து கிருஷ்ணன் தெரு, தர்மாபுரம் பகுதியில் உள்ள பொதுக்கழிப்பிடம் இரண்டு ஆண்டுகளாக தற்போது எவ்வித உபயோகமற்ற நிலையில், 1000 சதுர அடி இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது எனவும் மேற்படி தேர்வு செய்த இடத்தினை குடும்ப அட்டைதாரர்களின் நலன் கருதி தமிழ்நாடு நுகர் பொருள் வாணிப கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு கோரியுள்ளார்.

மேற்படி சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆய்வு செய்து அக்கட்டிடத்தின் தற்போதைய பயன்பாட்டுத்தன்மை மற்றும் ஒதுக்கீடு செய்வது குறித்து விவரங்கள் மற்றும் 8வது வார்டுகுழு பரிந்துரையினை பெற்று அனுப்பி வைக்குமாறு இவ்வலுவலக குறிப்பின் மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது. 8வது மண்டல வார்டுகுழுவின் தீர்மான எண்.363, நாள்.08.10.2009ல் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் கோரியுள்ள மேற்படி இடத்தினை ஒதுக்கீடு செய்ய சிறிய அளவு மராமத்து பணிகளை மேற்கொண்டு நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்டவற்றின் அடிப்படையில் வார்டு எண்.119ல், பாலமுத்து கிருஷ்ணன் தெருவில் உள்ள சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான உபயோகமற்ற நிலையில் இருக்கும் பொதுக்கழிப்பிடத்தினை நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘22.02.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.28/2010நாள் 22.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/276/2009**
**ஆணையர் அவர்களின் 22.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :112/2010 பொருள் எண்.55

**தமிழ்நாடு மின்சார வாரிய துணை மின் நிலையம் அமைக்க சென்னை மாநகராட்சி நிலத்தினை மாவட்ட ஆட்சியருக்கு துறப்பு செய்ய அனுமதி**

08.12.2008 நாளிட்ட சென்னை மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில் மண்டலம்–5, வார்டு–72, எழும்பூர் கிராமம், பிளாக் எண்.28, புல எண்.463/2 பாகத்திலுள்ள 2604 ச.அடி விஸ்தீரணமுள்ள நிலத்தில் துணை மின்நிலையம் அமைக்க தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு இந்த நிலத்தினை மாற்றம் செய்யவும், அரசாணை நிலை எண்.261 உள்(காவல்) துறை, நாள்.15.02.2007இன்படி தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு முன்நுழைவு அனுமதி வழங்க அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே சென்னை மாநகராட்சியின் இசைவினை அளிக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

மேற்படி இடம் நிலம் மற்றும் உடைமைத் துறையின் உதவி பொறியாளர் மற்றும் சார்–ஆய்வாளர் (நில அளவை) அவர்களால் தணிக்கைச் செய்யப்பட்டு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு நில உரிமை மாற்றம் செய்ய முன்நுழைவு அனுமதி கோரப்பட்டுள்ள இடத்தின் ஒரு பகுதி காலியாகவும், ஒரு பகுதியில் துணை மின்நிலையம் அமைக்க கட்டடம் கட்டப்பட்டு வருவதாகவும், மேற்கண்ட இடமானது மாநகராட்சி நிலப்பதிவேட்டில் கீழ்கண்டவாறு பதிவாகி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | | | |
|---|---|---|---|---|
| கிராமம் | – | எழும்பூர் | | |
| பிளாக் எண் | – | 28 | | |
| புல எண். | – | 463/2 | | |
| விஸ்தீரணம் | – | காணி | கிரவுண்டு | ச.அடி |
| | | 3 | 12 | 1741 |

உரிமையாளர் பெயர்:– சென்னை மாநகராட்சி (பொது)

மேற்கண்ட எழும்பூர் கிராமம், பிளாக் எண்.28, புல எண்.463/2 பாகத்திலுள்ள 2604 ச.அடி பரப்பளவு கொண்ட சென்னை மாநகராட்சி (பொது) என வகைப்படுத்தப் பட்டுள்ள நிலத்தின் மீதான சென்னை மாநகராட்சியின் உரிமையினை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு துறப்பு செய்வதற்கு மன்றத்தின் அனுமதி பெறுவதற்கு 5வது மண்டல வார்டு குழு தனது தீர்மான எண்.2, நாள்.08.12.2009ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே வார்டு குழு தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலத்தின் மீதான சென்னை மாநகராட்சியின் உரிமையினை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு துறப்பு (Relinquish) செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“22.02.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.29/2010நாள் 22.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ3/5359/2009**
**ஆணையர் அவர்களின் 15.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :113/2010 பொருள் எண். 56

**டி.யூ.சி.எஸ்.க்கு கட்டிட ஒதுக்கீடு**

07.12.2009 நாளிட்ட கடிதத்தில் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிமிடெட் நிறுவனத்தின் கீழ் செயல்படும் டி.யூ.சி.எஸ். இராஜா அண்ணாமலைபுரம் (LCO34) 1 கூடுதல் கவுண்டர்) எண்.2, சி.ப்பி.ராமசாமி தெரு, சென்னை–28 என்ற முகவரியில் செயல்பட்டு வருகிறது என்றும், வள்ளீஸ்வரம் தோட்டத்திலிருந்து குடும்ப அட்டைதாரர்கள் சுமார் 1 ½ கிலோ மீட்டர் தொலைவில் மேற்படி கடைக்கு சென்று பொருட்களை பெற்று வருவதால் குடும்ப அட்டைதாரர்கள் ஆட்சேபனை செய்து வருகின்றனர் என்றும், ஆர்.கே.நகர் சீனிவாசா அவின்யூ அருகில் உள்ள கார்ப்பேரஷன் கல்யாண மண்டபத்தின் பின்புறம் காலியாக உள்ள பல்நோக்கு திட்ட பணிக்காக கார்ப்பரேஷன் கட்டிடம் சுமார் 250 சதுர அடி பரப்பில் கட்டப்பட்டுள்ளதை இப்பகுதிவாழ் குடும்ப அட்டைதாரர்கள் பொருட்களை பெற்றுச் செல்ல வசதியாக மேற்படி கட்டிடத்தினை இவ்வலுவலகத்திற்கு மாத வாடகைக்கு வழங்கிட கோரப்பட்டுள்ளது.

23.12.2009 நாளிட்ட 10வது வார்டு குழு தீர்மானத்தில் ஆர்.கே.நகர், சீனிவாசா அவின்யூ அருகில் உள்ள மாநகராட்சி கல்யாண மண்டபத்தின் பின்புறம் காலியாக உள்ள பல்நோக்கு திட்ட பணிக்காக சுமார் 354 சதுர அடி பரப்பில் கட்டப்பட்ட மாநகராட்சி கட்டிடத்தை வள்ளீஸ்வரம் தோட்டத்தில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெரும் வகையில் மாத வாடகையினை நிலம் மற்றும் உடைமைத்துறை மூலம் நிர்ணயம் செய்து, டி.யூ.சி.எஸ். நிறுவனத்திற்கு வழங்க பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிமிடெட் நிறுவனத்தின் பயன்பாட்டிற்கு மண்டலம்10, வார்டு–149ல், ஆர்.கே.நகர், சீனிவாசா அவின்யூ அருகில் உள்ள மாநகராட்சி கல்யாண மண்டபத்தின் பின்புறம் காலியாக உள்ள பல்நோக்கு திட்ட பணிக்காக சுமார் 354 சதுர அடி பரப்பில் கட்டப்பட்ட மாநகராட்சி கட்டிடத்தை

1. சதுர அடிக்கு ரூ.15/– என்று மாத வாடகை நிர்ணயம் செய்வதற்கும், டி.யூ.சி.எஸ் நிறுவனத்திடம் 12 மாத வாடகை முன்பணம் பெறுவதற்கும்.

2. ஒதுக்கப்படவுள்ள மேற்படி கட்டிடத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதாக இருப்பின் சென்னை மாநகராட்சியின் அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை விதிப்பதற்கும்,

3. வாடகை தொடர்பாக திருவல்லிக்கேணி நகர கூட்டுறவு சங்கம் லிமிடெட் நிறுவனத்தின் இசைவினை பெற்று பின்னர் ஒதுக்கீடு செய்வதற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“22.02.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.56/2010நாள் 22.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ3/965/2009**
**ஆணையர் அவர்களின் 15.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :114/2010 பொருள் எண்.57

**தபால் நிலையத்திற்கு இட ஒதுக்கீடு**

26.03.2009 நாளிட்ட கடிதத்தில் தபால் நிலைய முதுநிலை கண்கணிப்பாளர் சென்னை நகர (தெற்கு) பாகம், சென்னை–17 அவர்கள் ஜாபர்கான் பேட்டை தபால் நிலையம் அமைப்பதற்கு ஜாபர்கான் பேட்டையில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான தகுந்த இடத்தை வாடகைக்கு ஒதுக்கீடு செய்து வழங்குமாறு கோரியுள்ளார்.

16.04.2009 நாளிட்ட இத்துறையின் குறிப்பில் தபால் துறையால் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தை ஆய்வு செய்து தபால் நிலையம் அமைப்பதற்கு தகுதி வாய்ந்ததாக உள்ளதா என்றும், மேலும் அக்கட்டிடத்தின் தற்போதைய பயன்பாட்டு தன்மை குறித்து விவரங்கள் அடங்கிய மண்டல அறிக்கையினை அனுப்புமாறு கோரப்பட்டது.

20.05.2009 நாளிட்ட குறிப்பில் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடம் ஆய்வு செய்யப்பட்டது எனவும், இவ்விடம் ராகவ ரெட்டி காலனி, 3வது தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் குழந்தைகள் மைய கட்டிடத்தின் அருகில் அமைந்துள்ளதாகவும், இதிலுள்ள கட்டிடம் 60 அடி நீளமும் 15 அடி அகலமும் கொண்ட சிமெண்ட் சீட் கூரையுள்ள கட்டிடமாகும் எனவும், தற்போது இக்கட்டிடத்தில் குழந்தைகள் மையம் தற்காலிகமாக இயங்கி வருகிறது. எனவும், அருகில் கட்டப்பட்டு வரும் குழந்தைகள் மைய கட்டிடப்பணி நிறைவு பெற்ற பின் இத்தற்காலிக குழந்தைகள் மையம் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டுவிடும் எனவும் அதன் பின்னர் இது ஒரு பயன்பாடில்லா கட்டிடமாக இருக்கப் போவதால் இதனை மேம்படுத்தி தபால் நிலையத்திற்கு வழங்க ஏதுவாக இருக்கும் என மண்டல அலுவலர்–9 அவர்களால் தெரிவிக்கப்பட்டு இதனை ஒதுக்கீடு செய்வதற்கான 07.07.2009 நாளிட்ட வார்டு குழுவின் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள விபரங்களின் அடிப்படையில் இந்திய தபால் துறைக்கு ஜாபார்கான் பேட்டை தபால் நிலையம் சென்னை மாநகராட்சி விதிகளுக்குட்பட்டு இயங்க மேற்கண்ட இடத்தை ஒதுக்கி

1. சதுர அடிக்கு ரூ.15/– என்று மாத வாடகை நிர்ணயம் செய்வதற்கும், 12 மாத வாடகை முன்பணம் பெறுவதற்கும்.

2. ஒதுக்கப்படவுள்ள மேற்படி கட்டிடத்தில் ஏதேனும் மாற்றங்கள் செய்வதாக இருப்பின் சென்னை மாநகராட்சி அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை விதிப்பதற்கும்,

3. வாடகை தொடர்பாக தபால் நிலைய முதுநிலை கண்காணிப்பாளர், சென்னை நகர (தெற்கு) சென்னை–17 அவர்களின் இசைவினை பெற்று பின்னர் ஒதுக்கீடு செய்வதற்கும், நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“22.02.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.57/2010நாள் 22.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ9/2644/2002**
**ஆணையர் அவர்களின் 22.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :115/2010 பொருள் எண்.58

**நில உரிமை மாற்றம்**

மண்டலம்–5ல் வார்டு எண்.68ல், பெரிய கூடல் கிராமம், பிளாக் எண்.7, நகர புல எண்.34 பாகத்திலுள்ள 12.0 ச.மீ. பரப்பளவு கொண்ட சாலை என வகைப்பாடு செய்யப்பட்ட நிலத்தினை தமிழர் நகர் திட்டப்பணிக்காக தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியத்தின் பெயருக்கு நில உரிமை மாற்றம் செய்திட சென்னை மாநகராட்சியின் இசைவினை அளிக்குமாறு 17.05.2005 நாளிட்ட மேலாண்மை இயக்குநரின் நேர்முக கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மேற்படி தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய கடிதத்தில் கோரியவாறு மேற்கண்ட நிலத்தினை தமிழர் நகர் திட்டப்பணிக்காக (M.U.D.P) தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு நிலஉரிமை மாற்றம் செய்திட சென்னை மாநகராட்சியின் இசைவினை அளிக்குமாறு 05.01.2007 நாளிட்ட மாவட்ட ஆட்சியரின் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேற்கண்ட இடத்தினை நிலம் மற்றும் உடைமைத்துறையின் சார்–நில ஆய்வாளர் புலத்தணிக்கைச் செய்து பெரிய கூடல் கிராமம், பிளாக் எண்.7, நகர புல எண்.34ல் கண்டுள்ள நிலம் முனிசிபல் ரிஜிஸ்டர் மற்றும் அடங்கல் கலத்தில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் எனவும், பயன்பாடு கலத்தில் ‘‘சாலை’’ எனவும் நிலப்பதிவேடுகளில் பதிவுகள் காணப்படுவதாகவும், இந்த புலத்தின் ஒரு பகுதி அதாவது 12.0 ச.மீ. நிலம் தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய தமிழர் நகர் மனைப்பிரிவு வரைபடத்தில் (Approved Layout) மனை எண்.51 ஆக காட்டப்பட்டுள்ளதாகவும் அறிக்கை அளித்துள்ளார்.

மேற்கண்ட நிலம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருப்பினும் ‘‘சாலை’’ என குறிப்பிடப்பட்டுள்ளதால் சென்னை மாநகராட்சியின் இசைவினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் கோரியுள்ளது.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தின்படி பெரியகூடல் கிராமம், பிளாக் எண்.7, நகர புல எண்.34 பாகத்திலுள்ள 12.0 ச.மீ பரப்பளவு கொண்ட நிலத்தினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் திட்டப் பணிக்காக அதன் பெயருக்கு நில உரிமை மாற்றம் செய்ய சென்னை மாநகராட்சியின் இசைவினை அளிப்பது குறித்து மன்றத்தின் அனுமதியினை பெறுவதற்காக 5–வது மண்டல வார்டு குழு தனது தீர்மானம் எண்.20, நாள்.20.07.2009ல் பரிந்துரை செய்துள்ளது.

எனவே மண்டலம்–5, வார்டு எண்.68ல், தமிழர் நகர் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய திட்டப்பகுதியில் பெரிய கூடல் கிராமம், பிளாக் எண்.7, நகர புல எண்.34 பாகத்திலுள்ள 12.0 ச.மீ. பரப்பளவுடைய நிலத்தினை தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் திட்டப்பணிக்காக அவ்வாரியத்தின் பெயருக்கு நில உரிமை மாற்றம் செய்ய, சென்னை மாநகராட்சியின் ஆட்சேபணையின்மையினை அளிப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘22.02.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.31/2010நாள் 22.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/ 6040 /1997**
**ஆணையர் அவர்களின் 21.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :116/2010 பொருள் எண்.59

**மண்டலம்–8ல் உள்ள சென்னை மாநகராட்சி குடியிருப்பாளருக்கு கிரயப்பத்திரம் வழங்க அரசுக்கு மன்ற தீர்மான பெற்று அனுப்ப அனுமதி வேண்டி**

தி.நகர் கிராமம், புல எண்.5709, 5710 மற்றும் 5711 ஆகியவற்றிலுள்ள, பூங்கா மற்றும் வீட்டு வசதி திட்டத்துக்காக சென்னை மாநகராட்சியால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட 59 மனை பரப்பளவு கொண்ட நிலத்தினை சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கும் மற்றும் பல்வேறு நிகழ்வுகளில் நில ஆர்ஜிதம் காரணமாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கும் வசிக்கும் இடமாக மனை ஒன்றுக்கு மாத வாடகை ரூ.2/– என 1969க்கு முன் நிர்ணயம் செய்து ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிலத்தினை, முறையே சென்னை மாநகராட்சி ஊழியர்களுக்கு மனை ஒன்றுக்கு ரூ.2000/– வீதமும், நில ஆர்ஜிதத்தில் பாதிக்கப்பட்டு மாற்று அடிப்படையில் குடியிருக்க அனுமதிக்கப்பட்டவர்களுக்கு மனை ஒன்றுக்கு ரூ.3000/–வீதமும் விற்பனை செய்திட மன்றத் தீர்மானம் எண்.865/69, நாள்.29.10.1969இல் முடிவெடுக்கப்பட்டது.

அரசாணை எண்.1803, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, நாள்.29.10.81இல் மேற்கண்ட மன்றத் தீர்மானத்தின் அடிப்படையில் கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு நிலத்தினை விற்பனை செய்திட அரசு அனுமதி அளித்தது.

1) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் நிர்ணயிக்கும் அபிவிருத்தி கட்டணத்தை குடியிருப்புதாரர்களிடமிருந்து முழுமையாக வசூல் செய்து தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு செலுத்துவதுடன் மற்றும் விற்பனை பத்திரப்பதிவுக்கு முன்னர் நிலத்தின் விற்பனை விலையை வசூல் செய்ய வேண்டும்.
2) பாரமரிப்பு கட்டணத்தை மாதந்தோறும் குடியிருப்புதாரர்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டும்.

மேற்கண்ட அரசாணையினை அமுலாக்கம் செய்வதற்கு தனி அதிகாரி மன்றத் தீர்மானம் எண்.988/81, நாள்.14.11.81இல் முடிவெடுக்கப்பட்டது.

மேற்கண்ட அரசாணை மற்றும் மன்றத் தீர்மானத்தினை பின்பற்றி, சென்னை மாநகராட்சி வருவாய் துறை மூலமாக குடியிருப்புதாரர்களுக்கு 1982 ஆம் வருடத்தில் நிலக்கிரயம் செய்து வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் மொத்தம் 135 மனைகள் இருந்தன. இந்த 135 மனைகளில் 21 மனைகள் சென்னை மாநகராட்சி (பொது) என வகைப்படுத்தப்பட்டுள்ள அரசுக்கு சொந்தமான நிலம் என்பதால் இதனை சென்னை மாநகராட்சியால் விற்பனை செய்ய இயலாது. மீதமுள்ள 114 மனைகளில் 9 நபர்கள் தங்களுக்கு கிரயப்பத்திரம் வழங்கப்படவில்லை எனவும், அப்போது தங்களிடம் பணம் இல்லாததால் கிரயப்பத்திரம் பெற இயலவில்லை எனவும், தற்போது கிரயத் தொகை செலுத்த இருப்பதாகவும் கோரிக்கைகள் அளித்திருந்தனர். இதற்கிடையில் திரு.பொன்னையா என்பவருக்கு கிரயப்பத்திரம் வழங்கப்படாமல் இருப்பதும், நீதி மன்ற உத்திரவின்படி இவருக்கு கிரயப்பத்திரம் வழங்கப்பட வேண்டியிருப்பதும் தெரியவந்தது. ஆக மொத்தம் கீழ்கண்ட 10 நபர்களுக்கு கிரயப்பத்திரம் வழங்கப்படாமல் விடுப்பட்டு போயுள்ளது தெரியவந்தது.

| வ. எண் | பெயர் மற்றும் விலாசம் | பிளாட் எண். கதவு எண். | குடியிருக்கும் காலம் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1. | சுப்புக்கண்ணு, த/பெ. நடேசன், 35/18 பிளாட் எண்.115, கார்ப்பரேஷன் காலனி, 3வது தெரு, தி.நகர், சென்னை–17. | 115 / 18 | 45 | ஒதுக்கீடுதாரர் |
| 2. | எல்லம்மாள், க/பெ.அருணாச்சலம், புது எண்.27, பழைய எண்.26, பிளாட் எண்.48, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை–17. | 48 / 27 | 50 | வாரிசுதாரர் |
| 3. | லஷ்மி, க/பெ. (லேட்) கந்தசாமி, 8/35, பிளாட் எண்.56, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை–17. | 56 / 35 | 50 | வாரிசுதாரர் |
| 4. | G.ராதாகிருஷ்ணன், த/பெ.(லேட்) கோபால்சாமி, 18/30, பிளாட் எண்.51, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை–17. | 51 / 30 | 50 | வாரிசுதாரர் |
| 5. | சத்தியநாரயணசிங், த/பெ.பாலாஜி, 16/31, பிளாட் எண்.52, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை–17. | 52 / 31 | 50 | வாரிசுதாரர் |
| 6. | நாகம்மாள், க/பெ.(லேட்) குப்பன், 37/19, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை–17. | 78 / 19 | 50 | வாரிசுதாரர் |
| 7. | கருணாகரன், த/பெ.பெருமாள் & ஜெயலஷ்மி, 4/37, பிளாட் எண்.58, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை–17. | 58 / 37 | 50 | வாரிசுதாரர் |
| 8. | முனுசாமி, த/பெ.துலுக்கானம், 5/3, பிளாட் எண்.62, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை–17. | 62 / 03 | 20 | குடியிருப்பவர் |
| 9. | சுமதி, க/பெ. பாஸ்கரன், 6/36, பிளாட் எண்.57, கார்ப்பரேஷன் காலனி, 2வது தெரு, தி.நகர், சென்னை–17. | 57 / 36 | 20 | குடியிருப்பவர் |
| 10. | பொன்னய்யா, 14/32, பிளாட் எண்.91, கார்ப்பரேஷன் காலனி, 3வது தெரு, தி.நகர், சென்னை–17. | 91 / 36 | 50 | ஒதுக்கீடுதாரர் |

மேற்கண்ட 10 நபர்களில் 8 நபர்கள் மட்டும் ஒதுக்கீடுதாரர்கள் மற்றும் ஒதுக்கீடுதாரர்களின் வாரிசுதாரர்கள் ஆவார்கள் (வரிசை எண்.1, 2, 3, 4, 5, 6, 7 மற்றும் 10) மற்ற 2 நபர்கள் (வரிசை எண்.8 மற்றும் 9) குடியிருப்பினை அனுபவித்து வருபவர்கள் ஆவார்கள்.

மேற்கண்ட 10 குடியிருப்பாளர்களுக்கு கிரயப்பத்திரம் வழங்கிடுவதற்கு 8வது மண்டல வார்டு குழு தனது தீர்மானம் எண்.251/98, நாள்.10.06.98ல் பரிந்துரை செய்துள்ளது.

இவர்களுக்கு கிரயப்பத்திரம் வழங்குவது குறித்து 22.02.2005 நாளிட்ட இத்துறை கடிதம் மூலமாக அரசிடம் தெளிவுரை கோரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அரசு கடித எண்.38579/மாந1/2004–7, ந.நி.ம.கு.வ.துறை நாள்.07.02.06இல், நில ஆர்ஜித சட்டவிதி எண்.16இன் படி எந்த நோக்கத்திற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக நிலம் பயன்படுத்தப்படவில்லையெனில் ,அந்நிலம் அரசு வருவாய்த் துறையை சார்ந்ததாக கருதப்படும் என்றும், இது போன்ற நிலத்தினை வேறு நபர்களுக்கு ஒதுக்கீடு செய்ய மாநகராட்சி மன்றத்திற்கு தலையீட்டு உரிமையில்லை என தெரிவித்து, அனுபவிப்பாளர்களுக்கு நில ஒதுக்கீடு செய்ய தேவையெனில் உரிய செயற்குறிப்பினை மன்றத் தீர்மானம் பெற்று அரசு வருவாய்த்துறைக்கு அனுப்பிவைக்குமாறு அரசு தெளிவுரை வழங்கி உள்ளது.

அரசு அளித்துள்ள இத்தெளிவுரையினை மன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டதில், சென்னை மாநகராட்சி நிலத்தினை அனுபவித்து வரும் 10 குடியிருப்பாளர்களுக்கு நில ஒதுக்கீடு செய்ய அரசாணை அமல் செய்யப்பட்ட நாளிலிருந்து வருடத்திற்கு 12 சதவிகித வட்டியுடன் சேர்த்து வசூல் செய்து அவர்களுக்கு கிரயம் செய்து கொடுக்க ஆணை வேண்டி, அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பி வைக்க மன்றத் தீர்மான எண்.427/06, நாள்.31.08.2006ல் முடிவெடுக்கப்பட்டு, இப்பொருள் குறித்து உரிய ஆணை வேண்டி 18.09.2006 நாளிட்ட இத்துறை கடிதம் மூலம் உரிய முன்மொழிவு அரசு வருவாய்த் துறைக்கு அனுப்பப்பட்டு, அரசின் ஆணை எதிர்நோக்கப்பட்டது.

இந்நிலையில் இப்பொருள் குறித்து நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் அரசு செயலாளருடன் ஆணையர் அவர்கள் கலந்தாய்வு செய்ததில், இப்பொருள் குறித்து மன்றத்தில் விவாதித்து உரிய முடிவெடுத்து தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைக்குமாறு அரசு கடிதம் எண்.32734/மாந1/2006–5, ந.நி.ம.கு.வ.துறை, நாள்.18.11.2009ல் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனவே அரசு கடிதம் எண்.32734/மாந1/06–5, நநி (ம) கு.வ.துறை, நாள்.18.11.2009ல் கோரியுள்ளவாறு இப்பொருள் குறித்து உரிய முடிவெடுக்கும் பொருட்டு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘22.02.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.30/2010நாள் 22.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.8.வ.து.ந.க.எண்.ஆர்1/782/2007</u>**
**<u>ஆணையரின் 08.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :117/2010 பொருள் எண். 60

**<u>சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க கோருதல்</u>**

29.03.2007 நாளிட்ட பப்ளிக் ஹெல்த் செயலரின் கடிதத்தில், 12எ, தம்பையா ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை 600 033 என்ற முகவரியில் இயங்கிவரும் பப்ளிக் ஹெல்த் சென்டரின் கட்டடத்திற்கு, அரையாண்டு சொத்துவரியாக ரூ.7751/– என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாகவும், பப்ளிக் ஹெல்த் சென்டர் என்ற அமைப்பு மனவளர்ச்சி குன்றியுள்ள குழந்தைகளுக்கான கல்வியினை புகட்டி வருவதாகவும், அவர்களுக்கு தேவையான மருத்துவ உதவிகள் மற்றும் பயிற்சி வகுப்புகளை அளித்துவருவதாகவும் தெரிவித்து, இந்த அமைப்பு செயல்பட்டுக்கொண்டு வரும் கட்டடத்திற்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்க கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மண்டலம்–8, வார்டு எண்.125ல் கதவு எண்.12எ, தம்பையா ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை 600 033 என்ற முகவரியில் இயங்கிவரும் பப்ளிக் ஹெல்த் சென்டரின் கட்டடத்திற்கு, அரையாண்டு சொத்துவரியாக ரூ.7751/– என 2/1998–99 முதல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. குடியிருப்பு வசதிக்காக பயன்படுத்தப்படாத கட்டடம் என்ற வகையில் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு, கேட்புகள் அனுப்பப்பட்டுள்ளது. ஆனால், 2/1998–99 முதல் சென்னை மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள இந்தச் சொத்துவரியினை இந்த அமைப்பு செலுத்தவில்லை. ஆனால், தொடர்ந்து, சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்க கோரிக்கையினை விடுத்துவருகிறது.

இதன்பொருட்டு சமர்ப்பிப்பது யாதெனில், பொதுச்சேவை செய்வதால், ஏற்கனவே 1969ஆம் ஆண்டு இந்த அமைப்பிற்கு சொந்தமான மேற்கு மாம்பலம் பகுதியில் இருந்த கட்டடத்திற்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

பப்ளிக் ஹெல்த் சென்டரின் கோரிக்கை குறித்து முடிவெடுக்க, 03.07.2007 அன்று நடைபெற்ற 8வது வார்டு குழு கூட்டத்தில்பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், 8வது மண்டல வார்டு குழு பப்ளிக் ஹெல்த் சென்டரின் கோரிக்கையினை பரிசீலித்து, சொத்துவரி விலக்கு அளிக்க தீர்மான எண். 302–ன் படி பரிந்துரை செய்துள்ளது.

எனவே, மண்டலம்–8, வார்டு எண்.125ல் கதவு எண்.12எ, தம்பையா ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை 600 033 என்ற முகவரியில் இயங்கிவரும் பப்ளிக் ஹெல்த் சென்டரின் கட்டடத்திற்கு, ரூ.7751/– என 2/1998–99 முதல் அரையாண்டு சொத்துவரியாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சொத்துவரி விதிப்பினை ரத்து செய்து, இக்கட்டடத்திற்கு சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.101 (e) ன்கீழ் சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்கு அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘22.02.2010அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.38/2010நாள் 22.02.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ’’.

‘‘இதனை மன்றம் ஒத்திவைக்கின்றது’’

*******

**ம.அ.10.சு.து.ந.க.எண்.எ1/485/2009**
**ஆணையாளர் அவர்களின் 17.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :**118/2010** பொருள் எண்.**61**

**ஒருவழி பணி மாறுதல்**

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்-10, கோட்டம்-146ல் சுகாதார ஆய்வாளராக பணிபுரியும் திரு. ஏ. ஈஸ்வரன் அவர்கள் ஏற்கனவே திருநெல்வேலி மாநகராட்சிக்கு ஒருவழி இட மாறுதல் மூலம் செல்வதற்கு விண்ணபித்திருந்தார். ஆனால் தற்போது வணக்கத்திற்குரிய மேயர் அவர்களுக்கு அளித்துள்ள விண்ணப்பத்தில் தன்னுடைய பெற்றோர் மதுரையில் வசிப்பதால் தன்னை ஒரு வழி பணியிடமாறுதல் மூலம் மதுரை மாநகராட்சிக்கு பணியிடமாற்றம் செய்து ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

தனியர் சென்னை மாநகராட்சியில் சுகாதாரத்துறையில் பிறப்பு மற்றும் இறப்பு எழுத்தராக 04.01.2001ல் பணியில் சேர்ந்தார். தனியரின் பணி 09.01.2003ல் வரன்முறைப்படுத்தப்பட்டது. தனியர் +2 படிப்பில் தேர்ச்சி பெற்றுள்ளார். மேலும், சுகாதார ஆய்வாளருக்கான பட்டயப் படிப்பில் காந்தி கிராம பல்கலைக் கழகத்தில் பயின்று தேர்ச்சி பெற்றுள்ளார். தனியர் 12.06.2009 முதல் சுகாதார ஆய்வாளராக பதவி உயர்வு பெற்று மண்டலம்-10, கோட்டம்-146ல் சுகாதார ஆய்வாளராக பணியாற்றி வருகின்றார்.

தனியர் தற்போது அடிப்படை ஊதியமாக ரூ.11,170/-ல் 5200-20200 என்று ஊதிய விகிதத்தில் பணியாற்றி வருகின்றார். தனியர் மீது துறை ரீதியான எவ்விதமான ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. மேலும் விழிப்புத் துறை மூலமாக எவ்விதமான ஒழுங்கு நடவடிக்கை / விசாரணையும் நிலுவையில் இல்லை எனச் சான்று பெறப்பட்டுள்ளது.

மேலும் தனியர் பணிபுரிந்துள்ள மண்டலம் 6,2,4 மற்றும் 10 லிருந்து தனியர் மீது எவ்வித தணிக்கை தடையும் நிலுவையில் இல்லையென அறிக்கை பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் தனியர், உறுப்பினர் இல்லையெனச் சான்று பெறப்பட்டுள்ளது. நீதிமன்ற வழக்கு மற்றும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையும் எதுவும் நிலுவையில் இல்லையென தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், தனியரை மதுரை மாநகராட்சிக்கு ஒருவழி இட மாறுதல் மூலம் பணியிட மாற்றம் செய்வதால், சென்னை மாநகராட்சிக்கு எவ்விதத்திலும் நிதி இழப்போ நிர்வாகத்திற்கு பணி பாதிப்போ/இடையூறோ ஏற்படாது என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே, தனியர் விண்ணப்பக் கடிதத்தில் கோரியுள்ளபடி மதுரை மாநகராட்சிக்கு இவரது கோரிக்கையை ஏற்று, இவரை ஒருவழி பணியிடமாறுதல் மூலம் விதிகளுக்கு உட்பட்டு பணியிடமாற்றம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி நியமனக்குழு மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"இம்மாத நியமனக்குழு முடிவுற்ற நிலையில் இப்பொருளை நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/2965/09**

**ஆணையாளர் அவர்களின் 22.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :119/2010 பொருள் எண்.62

**பணிநியமனம்**

சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் தற்பொழுது மருத்துவ அலுவலர் பதவிக்கான 14 பணியிடங்கள் காலியாக உள்ளது.

இப்பதவியினை வரையறுக்கப்பட்ட பணிவிதிகளின்படி (அரசாணை எண்.161, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வாங்கல் துறை, நாள் 28.08.98) நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும் அதன் விவரம் பின்வருமாறு:-

| Class | Posts | Scale of Pay (Revised) | Method of Appointment | Qualification |
|---|---|---|---|---|
| II | Medical Officer | Rs.15600-39100 + G.P.5400 | Direct recruitment Age 35 years | M.B.B.S. degree preferable with a post graduate degree or diploma in University Grants Commission. |

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு-IIன் கீழ் வகைப் படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவியினை சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85(3) (பி)ன் படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் நியமனம் செய்ய அதிகாரம் பெற்றுள்ளது. அரசாணை (நிலை) எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (மா.ந.3) நாள் 06.10.2009ல் வகுப்பு-IIன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பதவியினை உறுதியாக்கம் வழங்க மன்றத்திற்கு அரசு அதிகாரப் பங்களிப்பு அளித்துள்ளது.

மேற்படி வரையறுக்கப்பட்டுள்ள பணிவிதிகளின்படி வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பணி மூப்பு / இன சுழற்சியின் அடிப்படையில் தகுதிவாய்ந்த நபர் பட்டியல் பெறப்பட்டு 56 மருத்துவர்களுக்கு 17.02.2010 அன்று நேர்காணல் நடத்தப்பட்டது. நேர்காணலுக்கு பின்வரும் நபர்கள் மட்டுமே ஆஜரானார்கள்.

| வ. எண். | மருத்துவர் பெயர் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எண் | இனம் | படிப்பு | தற்போது வயது | தேர்தெடுக்கப் பட்டவர்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | U. சுதா<br>2000F 05356 SF 07.06.2000 | General | M.B.B.S. | 33 | ஆம் |
| 2. | B. சுஜாதா<br>2001F 11918 SF 06.09.2001 | SC | M.B.B.S. | 38 | ஆம் |
| 3. | ஹெப்சிபா மேரி கிரேஸ்<br>2004F 03046 SF 15.03.2004 | MBC | M.B.B.S. | 35 | ஆம் |
| 4. | S. ஹெலன் கிளாரிசா<br>2001F 13201 SF 04.09.2001 | General | M.B.B.S. | 36 | ஆம் |
| 5. | ஜோதிலட்சுமி வேலு<br>2001F 16613 SF 19.10.2001 | SC | M.B.B.S. | 33 | ஆம் |
| 6. | V. அகிலா தேவி<br>2003F 02643 SF 24.03.2003 | MBC | M.B.B.S. | 30 | இல்லை |
| 7. | சாந்பர்வீன்<br>2006F 32608 SF 19.12.2006 | BC | M.B.B.S. | 29 | ஆம் |

அரசாணை எண்.65 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த (கே2) துறை நாள் 27.05.2009ன்படி பின்வரும் நபர்கள் தேர்வு செய்ய தகுதியுடையவர்கள் ஆகிறார்கள்.

| வ. எண் | மருத்துவர் பெயர் மற்றும் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு எண் | இனம் | படிப்பு | தாய்மொழி தமிழ் / தமிழ் மொழி கல்வி தேர்ச்சி விவரம் | தற்போது வயது | தேர்தெடுக்கப் பட்ட விவரம் |
|---|---|---|---|---|---|---|

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | B. சுஜாதா<br>2001F 11918 SF 06.09.2001 | SC | M.B.B.S | தமிழ் | 38 | ஆம் |
| 2. | ஹெப்சிபா மேரி கிரேஸ்<br>2004F 03046 SF 15.03.2004 | MBC | M.B.B.S | தமிழ் | 35 | ஆம் |
| 3. | சாந்பர்வீன்<br>2006F 32608 SF 19.12.2006 | BC Muslim | M.B.B.S | உருது | 29 | ஆம் |
| 4. | ஜோதிலட்சுமி வேலு<br>2001F 16613 SF 19.10.2001 | SC | M.B.B.S | தமிழ் | 33 | ஆம் |
| 5. | U. சுதா<br>**2000**F 05356 SF 07.06.2000 | General | M.B.B.S | தமிழ் | 33 | ஆம் |
| 6. | S. ஹெலன் கிளாரிசா<br>2001F 13201 SF 04.09.2001 | General | M.B.B.S | தமிழ் | 36 | ஆம் |

மேற்படி பட்டியலில் வரிசை எண்.1 மற்றும் 6ல் உள்ள நபர்கள் முறையே B. சுஜாதா மற்றும் S.ஹெலன்கிளாரிசா ஆகிய இருவர் வரையறுக்கப்பட்ட பணிவிதிகளின்படி 35 வயது கடந்துள்ள போதிலும், அரசாணை எண்.98, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள் 17.02.2006ன்படி பணி நியமனத்திற்கு வயது வரம்பினை மேலும் 5 ஆண்டு காலத்திற்கு நீட்டித்து அரசு தளர்வாணை வழங்கியுள்ளதாலும் தமிழ்நாடு அரசு சார்நிலை பணியாளர் பொது விதி 12 (d) (ii)ன்படி இவர்களுக்கு வயது வரம்பிலிருந்து தளர்வாணை வழங்கி பணிநியமனம் செய்யலாம்.

வரிசை எண்.3ல் உள்ள சாந்த்பர்வீன் என்பவர் தற்போது மேற்படிப்பு படித்து வருவதால் வருகின்ற ஏப்ரல் 2010ல் பணியில் சேர்வதாக நேர்காணலின்போது தெரிவித்துள்ளதால் தமிழ்நாடு சார்நிலை பணியாளர் பொது விதி 4(e)ன்படி கால அவகாசம் வழங்கி ஏப்ரல் 2010ல் பணியில் சேர பரிசீலிக்கலாம்.

வரிசை எண்.5ல் உள்ள டாக்டர் சுதா என்பவர் குடும்ப நலத்துறையில் பணி புரிய விருப்பமின்மை தெரிவித்துள்ளதால் இவரை தவிர இதர 5 நபர்களுக்கு பணி நியமனம் வழங்கலாம்.

எனவே, சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்துறையில் தற்போது காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடங்களில் மேற்படி பட்டியலில் இடம் பெற்றுள்ள 6 நபர்களில் 5 நபர்களுக்கு (வரிசை எண்.5ஐ தவிர) தற்காலிகமாக மருத்துவ அலுவலராக ரூ.15600-39100 + G.P.5400 என்றும் ஊதியவிகிதம் மற்ற இதர படிகளுடன், தகுதிகாண் பருவகாலத்திற்குள் தமிழ்நாடு அரசு தேர்வாணயத்தால் நடத்தப்படும் செயல் அலுவலருக்கான கணக்கு தேர்வில் தேர்ச்சி மற்றும் மருத்துவ தொகுப்பு தேர்வில் தேர்ச்சி பெறப்பட வேண்டும் என்றும் வரிசை எண்.6ல் உள்ள டாக்டர். எஸ். ஹெலன் கிளாரிசா ஆகியோருக்கு வயது வரம்பிலிருந்து தளர்வு செய்தும் மன்றத்தின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மருத்துவ அலுவலராக பணிநியமனம் செய்ய மன்றத்தின் அனுமதி நியமனக்குழு சுற்றின் மூலம் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

"இம்மாத நியமனக்குழு முடிவுற்ற நிலையில் இப்பொருளை நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**இ.பொ.து.பொ.தொ.ந.க.எண்.w5/052/2009**
**ஆணையாளரின் 18.02.2010 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண் :120/2010 பொருள் எண். 63

**பயனற்ற மரக்கழிவுகள் – விற்பனை செய்தல்**

சென்னை மாநகராட்சியின் பல்வேறு நிர்வாக பிரிவுகளிலிருந்து பயனற்றது என பெறப்பட்ட மரக்கழிவுகள் 90 மெட்ரிக் டன் எடை அளவு விற்பனை செய்யும் பொருட்டு மதிப்பாய்வு செய்வதற்கு செயற் பொறியாளர்.(இ)–1, சென்னை மாநகராட்சி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில் நுட்பக்குழு 22.7.2009 அன்று நேரடி ஆய்வு செய்து பயனற்றது என கழிவு செய்யப்பட்ட நிலையில் திறந்த வெளியில் மழை மற்றும் வெய்யிலில் பாதிக்கப்பட்டுள்ள மரக்கழிவுகள் 90 மெட்ரிக் டன்னுக்கு மொத்த மதிப்பு ரூ.1,80,000/– என நிர்ணயிக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பம் – ஏலம் கோரி முடிவு செய்த 10.9.2009 நாளன்று ஏலத்தில் மேற்கண்ட மரக் கழிவுகளை உயர்ந்த விலையாக கோரிய மொத்த விலை ரூ.3,33,000/–யானது தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மதிப்பைவிட கூடுதலாக இருந்தபோதிலும், சந்தை நிலவர விலைக்கு குறைவாக காணப்பட்டதால் ரத்து செய்து விட்டு மறு ஒப்பம்–ஏலம் கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறும் இறுதி நாள் 20.01.2010 அன்று ஒரு ஒப்பந்தப்புள்ளி நமூனா மட்டும் பெறப்பட்டது. 21.01.2010 ஏலம் நாளன்று 44 ஏலதாரர்கள் கலந்து கொண்டனர். ஏலத்தில் மற்றும் ஓப்பந்தப்புள்ளி நமூனாவில் பெறப்பட்ட விலைகளை ஒப்பாய்வு செய்யப்பட்டதில் 90 மெட்ரிக் டன் எடை உயர்ந்த விலையாக ஏலத்தில் கோரிய மொத்த விலை ரூ.5,49,000/–யானது தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மொத்த மதிப்பு ரூ.1,80,000/–ஐ விட அதிகமாக இருப்பதால் விற்பனை செய்ய பின்வருவனவற்றின் மீது அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. பொது தொழிற்சாலையில் பல்வேறு நிர்வாகப் பிரிவுகளிலிருந்து பயனற்றது என பெறப்பட்ட மரக்கழிவுகள் 90 மெட்ரிக் டன் (90,000 கிலோ) எடை அளவு பயனற்றவை என கழிவு செய்யவும்,
2. 90 மெட்ரிக் டன் எடை பயனற்ற மரக்கழிவுகளுக்கு தொழில் நுட்பக்குழு நிர்ணயித்த மொத்த மதிப்பு ரூ.1,80,000/–க்கும் அதிகமாக ஏலத்தில் உயர்ந்த விலையாக ரூ.5,49,000/– கோரிய திருவாளர்கள். பர்வீன் டிரேடர்ஸ், சென்னை–15, அவர்களுக்கு உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யவும்,
3. 90 மெட்ரிக் டன் எடை மரக்கழிவுகளை விற்பனை தீர்வு செய்வதற்கு முன்பாக ஏற்கனவே செலுத்தப்பட்ட ஒப்பவைப்பு தொகை ( 20%) ரூ.1,09,800/–ஐ சரி செய்து செலுத்த வேண்டிய விலையின் மீதி தொகை ரூ.4,39,200/– மற்றும் ( கோரிய விலைக்கு ) விற்பனை வரி, வருமான வரி, தனித்தனியாக செலுத்துச் சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்த கோருவதற்கும்,

இதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(பணிகள்) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

"19.2.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 36/10 நாள்: 19.2.2010–ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ3/ 5657 /2009</u>**

**<u>ஆணையர் அவர்களின் 22.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :**121/2010** பொருள் எண்.**64**

**<u>நியாய விலைக்கடைக்கு இட ஒதுக்கீடு</u>**

**10.11.2009** நாளிட்ட அரசாணையில் பொது மக்களுக்கு வசதியற்ற வகையில் தனியார் கட்டிடங்களில் இயங்கிவரும் நியாய விலைக்கடைகளுக்கு பதிலாக அரசு மற்றும் அரசு நிறுவனங்களுக்கு சொந்தமான இடங்கள் இருப்பின் அத்தகைய தகுதியான இடங்களை தேர்வு செய்து அந்த இடங்களில் நியாய விலை கடைகளை கட்டலாம் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பொது வினியோக திட்டப்பணிகள் குறித்து **20.05.2008** அன்று ஆய்வு செய்த போது முடிவு செய்யப்பட்டது என்றும், சென்னை மாநகராட்சியை பொறுத்த வரையில் **117** இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும் இவ்வாறு தேர்வு செய்யப்பட்ட இடங்களில் அந்தந்த துறை மூலம் நியாய விலைக்கடைகள் கட்டுவதில் ஏற்படும் கால தாமதம் தவிர்க்க சம்மந்தப்பட்ட நிறுவனங்களிடம் கட்டிடம் கட்டுவதற்கான பணியை ஒப்படைத்து அக்கட்டிடத்தை வாடகையின்றி அனுமதிப்பதற்கு பதில் நிதியை நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு வழங்கி சம்மந்தப்பட்ட இடங்களில் நில உரிமை மாற்றம் இன்றி கட்டிடங்கள் கட்டி அந்தந்த துறைகளின் கட்டுபாட்டிலேயே வைத்து கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் ஆகியவைகளின் பொது வினியோக கடைகள் வாடகையின்றி அனுமதிக்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது என்றும் அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்தும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அரசு முதன்மை செயலர் அவர்களின் **22.12.2009** நாளிட்ட கடிதத்தில் அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் தேர்வு செய்யப்பட்ட **117** இடங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது. மேற்கண்டவாறு தேர்வு செய்யப்பட்டுள்ள இடங்களையும், மண்டல அலுவலர்கள் ஆய்வு செய்யப்பட்டு **24** இடங்கள் மட்டுமே தர இயலும் என மண்டல அலுவலர்கள் **1, 5, 9, 10** ஆகியோர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. பிற இடங்கள் திறந்தவெளி நிலம், பூங்கா, பள்ளிக்கூடம், விளையாட்டு திடல் மற்றும் தனியார் இடம் என்பதால் ஒதுக்கீடு செய்ய இயலாத என்பதால் பரிந்துரைக்கப்படவில்லை. மேலும் மேற்கண்ட இடங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு ஒப்படைப்பது குறித்து **20.01.2010** அன்று அரசு முதன்மை செயலர் அவர்களால் தலைமைச்செயலகத்தில் கலந்தாய்வு கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தின் போது மண்டல அலுவலர்களால் பரிந்துரைக்கப்பட்ட **24** இடங்கள் மட்டுமே தர இயலும் என சென்னை மாநகராட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மண்டல அலுவலர்களால் பரிந்துரைக்கப்பட்ட **24** இடங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு வழங்க சம்பந்தப்பட்ட மண்டலங்களின் வார்டுகுழு பரிந்துரை கோரப்பட்டது. வார்டு குழு **5** மற்றும் **9** ஆகியவற்றின் பரிந்துரைகள் பெறப்பட்டுள்ளது. மண்டலம்–**5** மற்றும் **9** வார்டு குழுக்களால் பரிந்துரைக்கப்பட்ட **13** இடங்கள் பின்வருமாறு :

(வார்டுகுழு **1** மற்றும் **10**ன் பரிந்துரைகள் பெறப்பட்டு இடஒதுக்கீடு செய்ய பின்னர் கருத்துருக்கள் சமர்ப்பிக்கப்படும்)

| வ எண். | குறியீடு எண். | வார்டு எண். | நியாய விலைக்கடையின் முகவரி | தேர்வு செய்யப்பட்ட இடம் | புல எண். |
|---|---|---|---|---|---|
| 1 | DC013 | 72 | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், சேத்துபட்டு–6, 2, அருணாசலம் தெரு, சென்னை–30. | வெங்கடாசலபதி தெருவில் உள்ள மாநகராட்சி கட்டிடத்திற்கு இடது பக்கத்தில் குப்பைகள் சேகரித்து வைப்பதற்காக சுமார் 2600 சதுரடி அளவுள்ள காலி இடம் உள்ளது. | 17 / 249 |
| 2 | DC015 | 72 | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், சேத்துபட்டு–3, முருகேசன் தெரு, சென்னை–30. | வெங்கடாசலபதி தெருவில் உள்ள மாநகராட்சி கட்டிடத்திற்கு இடது பக்கத்தில் குப்பைகள் சேகரித்து வைப்பதற்காக சுமார் 2600 சதுரடி அளவுள்ள காலி இடம் உள்ளது. | 17 / 249 |
| 3 | DC009 | 72 | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், சேத்துபட்டு–2, (முத்தியாலு தெரு) முருகேசன் தெரு, சேத்பட்டு, சென்னை–30. | வெங்கடாசலபதி தெருவில் உள்ள மாநகராட்சி கட்டிடத்திற்கு இடது பக்கத்தில் குப்பைகள் சேகரித்து வைப்பதற்காக சுமார் 2600 சதுரடி அளவுள்ள காலி இடம் உள்ளது. | 17 / 249 |
| 4 | DB034 | 73 | பூங்கா நகர் கூ.மொ.விற்பனை பண்டக சாலை, தெற்கு காசர் தோட்டம் 11,வடக்கு காசர் தோட்டம், அமைந்தகரை | வெள்ளாளர் தெரு, அமைந்தகரை | 27/89 |
| 5 | DB018 | 67 | பூங்கா நகர் கூ.மொ.விற்பனை பண்டக சாலை, ஷெனாய் நகர்–1, 22.பிரிவரி சாலை, ஷெனாய் நகர், சென்னை–30. | 2வது பிரதான சாலை, பிரிவரி சாலை, செனாய்நகர் | 11 / 59 |
| 6 | DB019 | 67 | பூங்கா நகர் கூ.மொ.விற்பனை பண்டக சாலை, நியாயவிலைக் கடை தற்போது இயங்கும் இடம் | 2வது பிரதான சாலை, பிரிவரி சாலை, செனாய்நகர் | 11 / 59 |
| 7 | DB020 | 67 | பூங்கா நகர் கூ.மொ.விற்பனை பண்டக சாலை, ஷெனாய் நகர்–3, 22, பிரிவரிசாலை, ஷெனாய்நகர், சென்னை–30. | 2வது பிரதான சாலை, பிரிவரி சாலை, செனாய்நகர் | 11 / 59 |
| 8 | DB021 | 67 | பூங்கா நகர் கூ.மொ.விற்பனை பண்டக சாலை, ஷெனாய் நகர்–4, சிந்தாமணி வளாகம், சென்னை–102. | 2வது பிரதான சாலை, பிரிவரி சாலை, செனாய்நகர் | 11 / 59 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | LA 001 | 137 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், டி.என்.எச்.பி.1, நந்தனம், 2 லிங்க் ரோடு நந்தனம், சென்னை–15 | சென்னை மாநகராட்சி ஆட்டோ திடல், மூப்பரப்பன் தெரு, வார்டு–137, மண்டலம்–9 | 54 / 10 |
| 10 | LA 002 | 137 | தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், டி.என்.எச்.பி.1, நந்தனம், 2 லிங்க் ரோடு நந்தனம், சென்னை–15 | சென்னை மாநகராட்சி ஆட்டோ திடல், மூப்பரப்பன் தெரு, வார்டு–137, மண்டலம்–9 | 54 / 10 |
| 11 | LC023 | | திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கம், சைதாப்பேட்டை–9, 50.பழைய மாம்பலம் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை–15. | புதுத்தெரு, பழைய பொதுக் கழிப்பிடம் உள்ள இடம் (30X55) சதுரடி | 32 / 63 பகுதி |
| 12 | LG008 | | காரணீஸ்வரர் கூட்டுறவு பண்டகசாலை–2, 37. கே.ப்பி. கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை–15. | வரசித்தி பிள்ளையார் கோயில் தெரு, காந்தி பூங்கா அருகில் 400 சதுரடியில் உள்ள இடம். | 26 / 71 |
| 13 | LG013 | | காரனீஸ்வரர் கூட்டுறவு பண்டகசாலை–3, 4பாரதிதாசன் தெரு, திருப்பூர் குமரன் காலனி, சைதாப்பேட்டை, சென்னை–15 | புதுத்தெரு, பழைய பொதுக்கழிப்பிடம் உள்ள இடம் (30x55) சதுரடி | 32 / 63 பகுதி |

எனவே 10.11.2009 நாளிட்ட அரசாணையின்படி மேற்கண்ட இடங்களை நில உரிமை மாற்றம் இன்றியும் வாடகை இன்றியும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழத்திற்கு ஒப்படைக்க நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 23.02.2010 அன்று தீர்மான எண்.59/2010–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**வ.து.ந.க.எண்.ஜி1/11912/2009**

**ஆணையாளர் அவர்களின் 06.01.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :122/2010 பொருள் எண்.65

**சிறப்பு வகை கட்டடங்களுக்கு சொத்துவரி மாற்றி அமைத்தல்**

சென்னை மாநகர முனிசிபல் சட்டம் 1919, பிரிவு எண்.100ன்படி, சென்னை மாநகரில் உள்ள கட்டடங்கள் மற்றும் நிலங்கள் ஆகியவற்றிற்கு மன்றத் தீர்மானத்தின்படி சொத்துவரி விதிக்க வழிவகை அளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டப்பிரிவின்படி, சொத்துவரி மதிப்பீடு செய்யப்படும் வேளையில், கட்டடங்கள் மற்றும் நிலத்திற்கான அப்போதைய ஆண்டு வாடகை மதிப்பு கணக்கிடப்பட்டு அவைக்கான சொத்துவரி நிர்ணயம் செய்யப்படுகிறது.

அரசு ஆணை எண்.856, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி நிர்வாகத் துறை, நாள் 19.04.1972ன்படி ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகள் போன்ற சிறப்பு வகை கட்டடங்களை பொறுத்தமட்டில்,

1) வகுப்பு–எ, வகுப்பு–பி போன்று அவற்றின் வகைப்பாட்டின் அடிப்படையில் ஆண்டு மதிப்பு கணக்கிடப்படுகிறது,
2) ஓட்டல்கள் அவைகள் பெற்றிருக்கும் வசதியின் அடிப்படையில் மற்றும் வசூலிக்கும் வாடகை அடிப்படையில் வகுப்பு–எ மற்றும் வகுப்பு–பி என்று வகைப்படுத்தப்படுகின்றன,
3) ஓட்டல் மற்றும் தங்கும் விடுதிகளுக்கு ஆண்டு மதிப்பு அவை தங்கும் அறைகளுக்கு வசூலிக்கும் வாடகைத் தொகை அடிப்படையில் மதிப்பிடப்படுகிறது.

2008ஆம் ஆண்டு பொது சீராய்வு மேற்கொண்டு அனைத்து வகையான கட்டடங்களுக்கான சொத்துவரி மாற்றி அமைக்க அரசு ஆணையிட்டது. பொதுசீராய்வு மேற்கொள்வதை தள்ளிவைக்க மன்றம் தீர்மானித்ததைத் தொடர்ந்து, சொத்துவரி சீராய்வு மேற்கொள்ளப்படவில்லை.

ஓட்டல்கள் மற்றும் தங்கும் விடுதிகள் தங்களது வாடகைத் தொகையினை காலத்திற்கேற்றால்போல் உயர்த்தி நிர்ணயம் செய்து வசூலித்து வருவதால், சொத்துவரியினையும் வாடகைத் தொகை அடிப்படையில் உயர்த்தி நிர்ணயம் செய்து வசூலிக்க வேண்டியுள்ளது.

எனவே, ஓட்டல்கள் மற்றும் தங்கும்விடுதிகள் போன்ற சிறப்புவகை கட்டடங்களுக்கான சொத்துவரியினை மட்டும் சீராய்வு செய்து சொத்துவரியினை ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதத்தை கணக்கில்கொண்டு மாற்றியமைத்திட மன்றத்தின் அனுமதி வேண்டி நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 25.01.2010 அன்று தீர்மான எண்.20/2010–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**Bg.rh.J.e.f.vz;.gp1/1201/2007**
**MizauJ 17.02.2010 ehspl;l Fwpg;g[**

**தீர்மான எண் :123/2010** bghUs; vz;:66

**பேருந்து நிழற்குடைகள் அமைக்க மாநகர போக்குவரத்து கழகத்திற்கு தடையின்மை சான்று வழங்குதல்**

brd;id khefhpYs;s BgUe;J epHw;Filfs; midj;Jk; brd;id khefuhl;rpapd; guhkhpg;gpd; fPH; 1993 tiu nUe;J te;jJ. brd;id khefuj;jpy; Bghf;Ftuj;jpid Bkk;gLj;j jf;f mwpt[iu tHA;Ftjw;F jpU.jpy;iyehafk; jiyikapy; ty;Yeh; FG xd;iw muR 1990y; mikj;jJ. nf;FG brd;id khefhpYs;s BgUe;J epHw;Filfis guhkhpf;Fk; gzpapid khefug; Bghf;Ftuj;J fHfk; Bkw;bfhs;syhk; vd;Wk;, BgUe;J epWj;jj; jlA;fis (Bus Bay) brd;id khefuhl;rp mikf;fyhk; vd;Wk; jdJ ghpe;Jiufspy; xd;whf mwptpj;jJ. me;j ghpe;Jiuapd; mog;gilapy; muR jdJ Mizapy; (murhiz vz; 14 MA&WS ehs; 11.1.93) brd;id khefhpYs;s BgUe;J epHw;Filfis khefug; Bghf;Ftuj;J fHfj;jplk; xg;gilf;f Mizapl;lJ. njd;go brd;id khefhpYs;s BgUe;J epHw;Filfs; bgUk;ghyhdit (Rkhh; 877 vz;zpf;if) khefug; Bghf;Ftuj;J fHfj;jpd; guhkhpg;gpd; fPH; te;jJ. Rkhh; 364 vz;zpf;ifapyhd BgUe;J epHw;Filfs; brd;id khefuhl;rp trBk nUe;J te;jJ.

brd;id khefu Bghf;Ftuj;J fHfk; ne;j BgUe;J epHw;Filfis tpsk;gujhu;fsplk; fl;Ljy;, guhkhpj;jy; gpd; xg;gilj;jy; vd;w mog;gilapy; xg;gilj;J tpsk;guA;fspd; K}yk; tUtha; Nl;o te;jJ. nt;tpsk;gujhuh;fs; rpyh; khefug; Bghf;Ftuj;J fHfj;jplk; Vw;gl;l gpur;ridapdhy; (litigation) khefug; Bghf;Ftuj;J fHfj;jpd; kPJ brd;id cah;ePjp kd;wj;jpy; tHf;F bjhLj;jdh;. (W.P.No.34872/2003 kw;Wk; 318/2004) nt;tHf;if tprhhpj;j cah;ePjp kd;wk; 05.09.2006 md;W tHA;fpa jdJ jPh;g;gpy; "brd;id khefhpy; cs;s rhiyfs; kw;Wk; rhiyBahuA;fis guhkhpf;Fk; mjpfhuk; MCMC ACT –d; gphpt[fs; 203, 204, 205, 220 & 223A-d; go brd;id khefuhl;rp;f;Bf cz;L vd;Wk; khefug; Bghf;Ftuj;Jf;fHfj;jpw;F BgUe;J epHw;Filfis mikf;ft[k; mjpy; tpsk;guA;fis mikj;J mjd;K}yk; tUthia Nl;Ltjw;F mDkjp mspf;f brd;id khefuhl;rp khkd;wj;jpw;Bf mjpfhuk; cs;sJ" vdt[k; jdJ jPh;g;gpy; TwpaJ.

brd;id cah;ePjp kd;w jPh;g;gpid vjph;j;J khefug; Bghf;Ftuj;Jf;fHfKk; mth;fspd; tpsk;gujhuh;fs; rpyUk; cr;rePjp kd;wj;jpy; Bky;KiwaPL bra;jdh;.

brd;id cah;ePjp kd;w jPh;g;gpd; mog;gilapy; muR 14.07.07 md;W khz;g[kpF cs;shl;rp Jiw mikr;rh; mth;fspd; jiyikapy; eilbgw;w Tl;lj;jpy; khefug; Bghf;Ftuj;Jf; fHfj;jplk; cs;s tHf;fpw;F cl;glhj BgUe;J epHw;Filfis khefuhl;rp trk; cldoahf xg;gilf;ft[k;.

tHf;fpw;F cl;gl;l BgUe;J epHw;Filfis Jhpjkhf tHf;Ffis Kotpw;F bfhzh;e;J gpd; khefuhl;rp trk; xg;gilf;ft[k;. mt;thW xg;gilf;fg;gl;l BgUe;J epHw;Filfis cyfj;juj;jpw;F xg;ghf mikf;f fl;Ljy;, guhkhpj;jy; & xg;gilj;jy; vd;w mog;gilapy; brd;id khefuhl;rp xg;gA;fs; Bfhut[k; tpsk;guA;fspd; K}yk; tUk; tUthia brd;id khefuhl;rpa[k; khefug; Bghf;Ftuj;J fHfKk; 50:50 vd;w tpfpjj;jpy; gfph;e;J bfhs;st[k; KobtLf;fg;gl;lJ.

njd;go, 29.11.07 md;W khefug; Bghf;Ftuj;J fHfk; 416 vz;zpf;ifapyhd tHf;fpw;F cl;glhj BgUe;J epHw;Filfis brd;id khefuhl;rp trk; Kjw;fl;lkhf xg;gilj;jJ. mjpy; 167 vz;zpf;ifapyhd BgUe;J epHw;Filfs; khefu vy;iyf;F btspBa tUgit.

kPjKs;s 249 vz;zpf;ifapyhd BgUe;J epHw;Filfspy; 136 kl;Lk; Bjh;t[ bra;J Vw;fdBt khefuhl;rp trkpUe;j 364 vz;zpf;ifapyhd BgUe;J epHw;FilfSld; Brh;j;J bkhj;jk; 500 BgUe;J epHw;Filfis ehd;F rpg;gA;fshfg; gphpj;J 22.01.08 md;W fl;Ljy;, guhkhpj;jy; & xg;gilj;jy; vd;w mog;gilapy; rh;tBjr xg;gA;fis brd;id khefuhl;rp BfhhpaJ. jpUthsh;fs; ml;Byg;!; vd;w epWtdk; xt;bthU rpg;gj;jpw;Fk; U}.405 nyl;rA;fis brd;id khefuhl;rpf;F xt;bthU tUlKk; jUtjw;F tpiyg;g[s;spfs; mspj;jJ. nt;bthg;gk; brd;id khefhpy; tpsk;gu gyiffs; mfw;Wtjw;F Kd; miHf;fg;gl;ljhy;, nt;bthg;gj;ij uj;J bra;J kWxg;gk; Bfhhpdhy; mjpf tUtha; tu tha;g;gpUg;gjhf 03.05.08 md;W eilbgw;w khkd;w Tl;lj;jpy; KobtLf;fg;gl;lJ.

kW xg;gk; Bfhhpajpy; mjpf tpiyg;g[s;spfs; mspj;j jpUthsh;fs; $pz;lhy; !;blapd;by!; ypkpbll; (M/s. Jindal Stainless ltd.,) vd;w epWtdj;jpw;F K}d;W rpg;gA;fSf;F ( Package II to IV) gzp tHA;f khkd;wk; xg;g[jy; mspj;jJ. mth;fs; cld;gof;if Bkw;bfhs;shjjpdhy; me;j xg;gA;fis uj;J bra;at[k;, mth;fspd; Kd; itg;g[ bjhifia gpoj;jk; bra;at[k,; mth;fis jtW niHj;Bjhh; gl;oaypy; Brh;f;ft[k; 29.10.09 md;W kd;wj;jpd; xg;g[jy; bgwg;gl;lJ.

njd; gpd;dh; nUKiw kPz;Lk; BgUe;J epHw;Filfis fl;Ljy;, guhkhpj;jy;, gpd; xg;gilj;jy; vd;w Kiwapy; mikf;f brd;id khefuhl;rp xg;gA;fs; BfhhpaJ. 17.12.2009 md;W eilbgw;w xg;g Kd; Tl;lj;jpy; fye;J bfhz;l xg;ge;jjhuh;fs; ahtUk; tpsk;gu mstPl;oid mjpfg;gLj;j Bfhhpdh; BkYk;, BgUe;J epHw;Filfspd; Bky; gf;fk; tpsk;gu gyiffs; itf;f mDkjpj;jhy; kl;LBk jA;fspd; brytPdA;fis NLbra;a Koa[k; vd;W Bfhhpf;if itj;jdh;. nf;Bfhhpf;if Vw;fg;glhjjhy; xg;gA;fs; VJk; nUKiwa[k; bgwg;gltpy;iy.

njw;fpilapy; brd;id cah;ePjp kd;wj;jpd; jPh;g;ig vjph;j;J cr;r ePjp kd;wj;jpy; Bky;KiwaPL bra;j khefu Bghf;Ftuj;J fHfKk; kw;Wk; mjd; tpsk;gujhuh;fSk; rkur cld;gof;if mwpf;if xd;wpid cr;r ePjp kd;wj;jpy; jhf;;fy; bra;jdh;. nr;rkur cld;;gof;ifapd;go khefu Bghf;Ftuj;J fHfj;jpd;

“tpsk;gujhuh;fs; 500 vz;zpf;ifapyhd BgUe;J epHw;Filfis cyfj;juj;jpw;F xg;ghf mikj;J mjpy; 30 r.kP kpfhky; tpsk;guA;fis itj;Jf; bfhs;sவுk; 12 tUlA;fSf;F tUthia Nl;lt[k; xU tUlj;jpw;F xt;bthU BgUe;J epHw;Filf;Fk; U}.30,000/- tPjk; khefug; Bghf;Ftuj;J fHfj;jpw;F brYj;jt[k;, K}d;W tUlA;fSf;F xU Kiw nf;fl;lzj;ij 10 rjtPjk; cah;j;jpf; bfhLf;ft[k;” Kot[ bra;J cr;r ePjp kd;wj;jpy; mDkjp Bfhhp rkh;g;gpj;jJ.

nt;cld;gof;ifia cr;r ePjp kd;wk; Vw;W nr;rkhjhd cld;gof;if kw;w rl;l jpl;lA;fSf;F cl;gl;lJ vd;W Twp Bky;KiwaPl;L kDf;fis js;Sgo bra;jJ.

njd;gpd;, 500 vz;zpf;ifapyhd BgUe;J epHw;Filfis jd;trk; itj;Jf;bfhz;L nWjpahf kPjKs;s 576 vz;zpf;ifapyhd BgUe;J epHw;Filfis khefu Bghf;Ftuj;Jf; fHfk; brd;id khefuhl;rp trk; 18.12.08 md;W xg;gilj;jJ. njpy; 199 BgUe;J epHw;Filfs; khefu vy;iyf;F btspBa tUgit kPjKs;s 377 vz;zpf;ifapyhd BgUe;J epHw;Filfs; khefu vy;iyf;Fs; tUgit. ne;epiyapy; brd;id khefuhl;rp kw;Wk; khtl;l Ml;rpahpd; mDkjpapd;wp khefu Bghf;Ftuj;Jf; fHfk; BgUe;J epHw;Filfis jd;dpr;irahf epWtj; bjhlA;fpaJ. mt;thW epWtg;gl;l BgUe;J epHw;Filfs; brd;id khefuhl;rpahy; mikf;fg;gl;l totikg;gpid Bghd;W ny;iy.

brd;id khefuhl;rpapd; jilapy;yh rhd;wpjH; bgw;W brd;id khtl;l Ml;rpahpd; chpkk; bgw;wgpd;jhd; khefuhl;rpf;F brhe;jkhd

nlj;jp;y; BgUe;J epHw;Filfs; kw;Wk; mjpy; tpsk;gu gyiffs; mikf;fyhk; vd;Wk; BkYk; khefu Bghf;Ftuj;Jf;fHfk; mikj;J tUk; epHw;Filfs; cyfj; juj;jpw;F xg;ghf ny;iy vd;Wk; vdBt BgUe;J epHw;Filfs; mikf;Fk; gzpapid cldoahf epWj;Jk;go[a[k; khefu Bghf;Ftuj;J fHfj;jpw;F 29.9.09 md;W fojk; K}yk; brd;id khefuhl;rp mwpt[Wj;jpaJ.

khefu Bghf;Ftuj;Jf; fHfk;,12.01.2010 md;W brd;id khefuhl;rp mikj;Js;s BgUe;J epHw;Filapd; totikg;gpy; rpwpJ khw;wA;fs; bra;J khjphp totikg;ig rkh;g;gpj;J, njw;F khefuhl;rpapd; xg;g[jYk;, jilapy;yh rhd;wpjGk; tHA;Fk;goa[k; BfhhpaJ. nk; khjphp totikg;gpd;go 10 nlA;fspy; BgUe;J epHw;Filfs; mikf;f mDkjpa[k;,; mjid Ma;t[ bra;j gpd;dh; kd;wj;jpd; xg;g[jYld; mDkjp tHA;fg;gLbkd 13.01.2010 md;W khefu Bghf;Ftuj;Jf;fHfj;jpw;F bjhptpf;fg;gl;lJ.

njd;go khefu Bghf;Ftuj;Jf; fHfk; lhf;lh; Jh;fhgha; Bj&;Kf; rhiyapy; (kyh; kUj;Jtkid mUfhikapy;) khjphp totikg;gpd; go BgUe;J epHw;Fil mikj;Js;shh;fs;. ng;BgUe;J epHw;Fil brd;id khefuhl;rpapd; totikg;gpy; rpwpJ khw;wA;fs; bra;J mikj;Js;sJ. vdpDk;, nk;khjphp totikg;gpd;go epHw;Filfs; mikf;f mனுkjpf;fyhk;.

vdBt, khefu Bghf;Ftuj;Jf;fHfk;, cr;rePjp kd;wj;jpd; jPh;g;gpd;go, brd;id khefhpy; 500 vz;zpf;ifapyhd BgUe;J epHw;Filfis Bkw;Twg;gl;l totikg;gpd;go mikf;f mனுkjpa[k; mjpy; tpsk;gu gyiffs; itf;f khtl;l Ml;rpahplk; chpkk; bgw jilapy;yh rhd;wpjH; fPH;fz;l epge;jidfSld; tHA;Ftjw;F

1) brd;id khefuhl;rp rhiyfspy; mikf;fg;gLk; epHw;Filfspy; 180 rJu mof;F kpfhkYk; beLq;rhiy Jiw rhiyfspy; mikf;fg;gLk; BgUe;J epHw;Filfspy; 205 rJu mof;F kpfhkYk; tpsk;gu gyiffs; mikf;ft[k;.
2) BgUe;J epHw;Filfs; ghjrhhpfSf;F nila{W ny;yhky; mikf;ft[k;,
3) nt;tpsk;gujhuh;fs; (Consortium) brd;id khefuhl;rpapd; kPJ bjhLj;Js;s tHf;Ffis (W P No. 12542/09) jpUk;g bgw khefu Bghf;Ftuj;Jf; fHfk; eltof;if vLf;ft[k;,
4) ng;BgUe;J epHw;Filfis me;je;j kz;ly mYtyh;fspd; fye;jhByhrida[ld; mikf;ft[k;.

kd;wj;jpd; mனுkjp Btz;o epiyf;FG (gzpfs;) kw;Wk; epiyf;FG (thptpjpg;g[ (kw;Wk;) epjpapd;) K}ykhf rkh;g;gpf;fg;gLfpwJ.

"19.02.2010 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.24/2010 நாள்: 19.02.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி)-é‹ மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**51/2010**நாள் **22.02.2010–**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.10.வ.து.ந.க.எண்.ஆர்2/292/2010**

**ஆணையாளர் அவர்களின் 19.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :124/2010 பொருள் எண்.67

**வயதுமுதிர்வு ஓய்வு**

சென்னை மாநகராட்சி, வருவாய்த்துறை, மண்டலம்-10ல் உதவி வருவாய் அலுவலராகப் பணிபுரியும் திரு. எம்.பி. நந்தகுமார் அவர்கள் வயதுமுதிர்வு அடிப்படையில் 28.02.2010 முதல் ஓய்வு பெறவுள்ள வகுப்பு-2 நிலையைச் சார்ந்த அலுவலராவார். 2009-2010 நிதியாண்டில் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெறும் அலுவலர் பட்டியலடங்கிய 19.01.2009 நாளிட்ட சுற்றறிக்கை பொ.து.ந.க.எண்.ஜி3/33866/2008ல் வரிசை எண்.18ல் தனியர் பெயர் இடம் பெற்றுள்ளது. சென்னை மாநகராட்சி பணியில் முதல் முதலாக இளநிலை உதவியாளராக திரு. எம்.பி. நந்தகுமார் அவர்கள் வருவாய் துறையில் 03.04.1975 முதல் பணி நியமனம் செய்யப்பட்டார். அன்னார் 21.06.2006 முதல் வகுப்பு-2 நிலையில் உதவி வருவாய் அலுவலராக ரூ.8000-275-13500 என்ற காலமுறை ஏற்று ஊதிய விகிதத்தில் பதவி உயர்வு செய்யப்பட்டு தற்போது வரை அப்பதவியில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார். இவரது பணிப்பதிவேட்டிலுள்ள பதிவின்படி தனியரின் பிறந்த தேதி 19.02.1952 ஆகும். இதனடிப்படையில் வயது முதிர்வு காரணமாக இவர் 28.02.2010 பிற்பகல் முதல் ஓய்வு பெறவிருக்கிறார்.

இவ்வலுவலர் சென்னை மாநகராட்சியில் முதல் முதலில் பணி நியமனம் செய்யப்பட்ட நாள் முதற்கொண்டு இன்றைய தேதி வரை ஊதியமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை. மேலும் ஓய்வூதியம் பயன் கணக்கீட்டிற்கு தகுதியில்லாத காலமாக கருதக்கூடிய காலங்கள் ஏதுமில்லை என்பது தனியரின் பணிப்பதிவேடு பதிவுகளிலிருந்து ஊர்ஜிதம் செய்யப்படுகிறது. அன்னார் முதல் முதலில் பணி நியமனம் செய்யப்பட்ட நாள் முதல் வயது முதிர்வு அடிப்படையில் ஓய்வு பெறும் நாள் வரையிலான இவரது பணிக்காலம் 34 ஆண்டுகள், 10 மாதங்கள், 26 நாட்களாகும்.

அன்னார் மீது இன்றைய தேதியில் மண்டலத்திலோ அல்லது வருவாய்த் துறையிலோ ஒழுங்கு நடவடிக்கை மற்றும் விசாரணை ஏதும் நிலுவையிலில்லை. மேலும் அன்னார் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என விழிப்பு அலுவலர் அவர்களின் 09.02.2010 தேதியிட்ட சான்றிதழில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. எம்.பி. நந்தகுமார், உதவி வருவாய் அலுவலர், மீது மண்டலம்-1 முதல் 9 வரை தணிக்கை தடையின்மை சான்று பெறப்பட்டுள்ளது. இவர் பணியாற்றிய மண்டலங்களில் பிற்காலத்தில் ஏதேனும் தணிக்கை தடை விபரம் கண்டறியப்படின் இதனால் ஏற்படும் நிதி இழப்பிற்கு தனியரை பொறுப்பாக்கி அத்தொகை முழுவதும் அன்னாரது பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும்.

தனியரிடமிருந்து வாகன முன்பணம், திருமண முன்பணம், வீடு கட்டும் முன்பணம், பண்டிகை முன்பணம் ஆகிய இனங்களில் தனியரது ஊதியத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டியவை ஏதும் நிலுவையில் இல்லை. மேலும் இவர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்திற்கு நிலுவை ஏதுமில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் வகுப்பு-2 நிலையிலுள்ள அலுவலராதலால் இவரை வயதுமுதிர்வு அடிப்படையில் 28.02.2010 முதல் பணியிலிருந்து ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வழங்கப்பட வேண்டும்.

எனவே, திரு. எம்.பி. நந்தகுமார், உதவி வருவாய் அலுவலர் வருவாய்துறை, மண்டலம்-10 அவர்களை அவரது பணிக்காலத்திற்குட்பட்ட தணிக்கைத் தடைகளுக்கு பொறுப்பாக்கியும், இறுதி தணிக்கையில் சென்னை மாநகராட்சிக்கு தனியரால் நிதி இழப்பு அல்லது செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் நீண்ட கால முன்பணம் சரி செய்யப்படாமல் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு அன்னாரைப் பொறுப்பாக்கி அத்தொகை முழுவதையும் அன்னாரது ஓய்வூதியப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி இவரை 28.02.2010 பிற்பகல் முதல் வயதுமுதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் ஒப்புதல் நியமனக்குழு மூலமாக வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளை நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

**<u>சு.து.ந.க.எண்.சி5/2583/2009</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 17.02.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :125/2010 பொருள் எண்.68

**<u>வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி</u>**

டாக்டர். எஸ். கிருஷ்ணா, கூடுதல் சுகாதார அலுவலர் அவர்கள் வயதுமுதிர்வு காரணமாக 31.01.2010 பிற்பகல் முதல் ஓய்வு பெற வேண்டி இருந்ததால் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 31.01.2010ல் ஓய்வு பெற அனுமதிக்கப்பட்டார். இவர் 16.07.1987 முதல் உதவி சுகாதார அலுவலராக சென்னை மாநகராட்சிப் பணியில் சேர்ந்தார். இவருக்கு இப்பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவம் முடித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் 14.11.2008 முதல் கூடுதல் சுகாதார அலுவலர் பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார். அரசாணை (ப) எண்.168 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 21.04.2009-ன்படி இப்பதவியில் அரசு உறுதியாக்கம் வழங்கியுள்ளதை தொடர்ந்து மன்றத் தீர்மான எண்.150/09, நாள் 30.06.2009ல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

தணிக்கை தடை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை தொடர்பாக இவர் முன்னர் பணிபுரிந்த மண்டலங்களிலிருந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது. இவர் மீது தனிப்பட்ட முறையில் தணிக்கைத் தடை ஏதும் நிலுவையில் இல்லை எனவும் மண்டலம்-3ல் கேடும் குற்றமும் பயக்கும் தொழில் உரிமக் கட்டணம் தொடர்பாக எழுப்பபட்ட தணிக்கைத் தடைக்கு மண்டல வருவாய் துறைக்கு பதில் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலரின் 07.01.2010 தேதியிட்ட குறிப்பின்படி தனியர் மீது விசாரணை எதுவும் நிலுவையில் இல்லையென அறிக்கை அளித்துள்ளார். துறைப்பூர்வமான ஒழுங்கு நடவடிக்கையும் ஏது. நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான குடியிருப்பு ஏதும் இவருக்கு ஒதுக்கப்படவில்லை. சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திற்கு இவர் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஏதுமில்லை எனவும் சான்று பெறப்பட்டுள்ளது. தனியர் வகுப்பு-1 (ஆ) சார்ந்த அலுவலராதலால் மன்றத்தின் அனுமதி பெறப்பட்ட பின்னரே இவரை பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்க இயலும்.

மன்றத்தின் அனுமதி பெறுவதற்கு போதிய கால அவகாசம் இல்லாததால் டாக்டர். எஸ். கிருஷ்ணா, கூடுதல் சுகாதார அலுவலர் என்பவரை 31.01.2010 அன்று பிற்பகல் முதல் தணிக்கைத்தடை மற்றும் தணிக்கைத் தடைகளால் நிதி இழப்பு மற்றும் நீண்ட கால முன் பண நிலுவை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அவரது ஓய்வூதியப் பயன்களில் இருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் ஆணையரது செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி5/2583/2009, நாள் 29.01.2010-ன்படி 31.01.2010 பிற்பகல் முதல் வயதுமுதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளிக்கப்பட்டார்.

எனவே மேற்கண்ட அலுவலருக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 31.01.2010 அன்று பிற்பகல் முதல் வயதுமுதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளித்தமைக்கு நியமனக்குழு மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

"இம்மாத நியமனக்குழு முடிந்து விட்டநிலையில் இப்பொருளை நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>க.து.ந.க.எண்.டி1/115/2009</u>**
**<u>ஆணையர் அவர்களின் 18.01.2010 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண் :126/2010 பொருள் எண்.69

**<u>பணியமைப்பு சமுதாயக் கல்லூரி பணியாளர்களின் பணி மேலும் ஓராண்டு பணி நீட்டிப்பு</u>**

சென்னை மாநகராட்சி மாமன்றம் இயற்றிய தீர்மானம் எண் 115 நாள் 22.02.1999 அடிப்படையில், கல்வித்துறையின் கீழ் 4 சமுதாயக் கல்லூரிகள் (பிப்ரவரி 1999 முதல் 2 கல்லூரிகளும், மார்ச்சு 1999 முதல் 1 கல்லூரியும், ஆகஸ்டு 1999 முதல் நான்காவது கல்லூரியும்) மிகச் சிறப்பாக இயங்கி வருகின்றன. இந்திய நாட்டில் ஒரு மாநகராட்சி, சமுதாயக் கல்லூரிகளைத் தொடங்கி நடத்தி வருவது என்பது இதுவே முதல் முறை ஆகும்.

மேற்காண் கல்லூரிகளின் நிர்வாகப் பணிகளை திறம்பட செவ்வனே செய்வதற்கும், மாநகராட்சி தொழிற் பயிற்சி நிலைய நிர்வாகப் பணிகளையும் கூடுதலாக செய்திடவும் 1 இளநிலை உதவியாளர் (திருமதி.எம். மகாலெட்சுமி) மற்றும் 1 கணினி தட்டச்சாளர் (திருமதி. ஆர். மகாலெட்சுமி) ஆகியோர் பிப்ரவரி 1999 முதலும், 1 அலுவலக உதவியாளர் (திரு. கே.சேகர்) ஆகஸ்டு 1999 முதல் அப்போதைய துணை ஆணையர்(கல்வி) அவர்களால் நேரடியாகவும், தற்காலிகமாகவும் தொகுப்பூதிய அடிப்படையில் பணியமர்த்தப்பட்டனர்.

இம்மூவரின் மாதாந்திரத் தொகுப்பூதியம் மன்றத் தீர்மானங்கள் மன்றத் தீர்மானம் எண் 363/2002, 85/2004, 34/2005, 57/2006, 136/2007, 620/2007மற்றும் 643/2008ன்படி மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து தொடர்ந்து வழங்கப்படுகின்றது. மன்றத் தீர்மானம் எண் 643/2008 நாள் 30.12.2008ன்படி, திருமதி. எம். மகாலெட்சுமி (இளநிலை உதவியாளர்) மற்றும் திருமதி. ஆர்.மகாலெட்சுமி (கணிப்பொறி/தட்டச்சு இயக்குபவர்) மற்றும் திரு. கே. சேகர் (அலுவலக உதவியாளர்) ஆகிய மூவரும் 01.11.2008 முதல் ஓராண்டு பணி நீட்டிப்புடன், மாதாந்திராத் தொகுப்பூதியம் முறையே ரூ.4250/–, ரூ.4250/– மற்றும் ரூ.2250/–ம் பெற்று வருகின்றனர்.

14.12.2009 நாளிட்ட உதவி ஆணையர் (பொநிமப) அவர்களின் குறிப்புரையில், மேற்காண் தனியர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் இல்லாமல் நேரடி நியமனம் பெற்றிருப்பதாலும், மற்றும் இப்பணிகளை 10 ஆண்டுகள் தொடர்ந்து பணிசெய்து வருவதாலும், இவர்களை சென்னை மாநகராட்சி பணியில் நிரந்தர பணிபுரிய அரசின் ஆணை பெற மன்றத்தின் ஒப்புதல் பெற்று கடிதம் அனுப்ப தெரிவித்துள்ளார். அவ்வாறே இது குறித்து தனியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, இந்நிலையில், மேற்காண் தனியர்களது பணி தொடர்ந்து தேவைப்படுகின்ற காரணத்தால், மேலும் தொடர்ந்து பணிபுரிவதாலும் இவர்களுக்கு மாத தொகுப்பூதியம் வழங்குவதற்கும், பணிக்காலம் 31.10.2009 அன்றுடன் முடிவடைந்த நிலையில் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றார்கள். தொடர்ந்து பணிபுரியும் காலத்திற்கு (31.10.2009 முதல் 31.12.2009 வரை) பின்னேற்பு அனுமதியும், மேலும், 31.10.2010 வரை ஓராண்டு பணிநீட்டிப்பிற்கு மன்றத்தின் அனுமதியும் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

மேலும், இம்மூவரும் சென்னை மாநகராட்சி சமுதாயக் கல்லூரிகளில் தற்போது செயல்பட்டு வரும்,

1. “தேசிய திறந்த நிலைப்பள்ளியின் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் பயிற்சியின் பணிகள், NIOS – (National Institute of Open Schooling / Accredited Vocational Institute - 690039) “
2. குறுகிய கால தொழிற் பாடப் பிரிவுகளான பி.பி.ஓ (BPO), கஸ்டமர் ரிலேஷன்ஸ் அண்டு சேல்ஸ் ( Customer Relations and Sales) மற்றும் ஹாஸ்பிடாலிட்டி சர்வீஸ் ( Hospitality Services) போன்ற பயிற்சிகள் சமுதாயக் கல்லூரி (தெற்கு) ன் அலுவலக பணிகள்,

3. குறுகிய கால தொழிற் பாடப் பிரிவுகளான பி.பி.ஓ (BPO ), இன்பர்மேஷன்டெக்னாலஜி ஏனபுல்டு சர்வீஸ் Information Technology Enabled Services (ITES), எலெட்ரிக்கல் டெக்னீசியன் Electrical Technician, கட்டிங் அன்டு டெய்லரிங் (Cutting and Tailoring) போன்ற பயிற்சிகள் சமுதாயக் கல்லூரி (வடக்கு)இன் அலுவலக பணிகளையும் கூடுதலாகச் செய்கின்றனர்.

4. மூன்று புதிய குறுகிய கால தொழிற்பாட பிரிவுகளுக்கான
   1) Mobile Repair and Servicing,
   2) Retail,
   3) White Goods Service,
   போன்ற பயிற்சிகளுக்காக ஆரம்ப கட்டப் பணிகள் செய்து வருகின்றனர்.

எனவே கீழ்கண்ட மூவருக்கும்,

1) பணிக்காலம் 31.10.2009 அன்றுடன் முடிவடைந்த நிலையில், தொடர்ந்து கீழ்காண் தனியர்கள் பணிபுரியும் காலத்திற்கு (31.10.2009 முதல் 31.12.2009 வரை) பின்னேற்பு அனுமதியும், மேலும், 31.10.2010 வரை ஒராண்டு பணிநீட்டிப்பு செய்யவும்,

2) 10 வருடம் பணி அனுபவம், பணிப்பளு, தகுதி மற்றும் தற்போதைய விலைவாசி உயர்வு ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஏற்கனவே வழங்கப்பட்ட இம்மூவரின் மாதந்திரத் தொகுப்பூதியம் கீழ்க்கண்டவாறு வழங்கவும்,

| வ.எண் | பணியாளர் பெயர் மற்றும் கல்வித்தகுதி | பதவி | தொகுப்பூதியம் |
|---|---|---|---|
| 1. | திருமதி.எம்.மகாலெட்சுமி எம்.ஏ (ஆங்கிலம்), டி.சி.ஏ., அரசு நடைமுறை நூல் தேர்ச்சி (G.O.M.) | இளநிலை உதவியாளர் | ரூ.4250/– |
| 2. | திருமதி. ஆர். மகாலெட்சுமி, எம்.ஏ. (பொருளாதாரம்), டிப்ளமோ இன் ஆபிஸ் ஆட்டோமேசன் தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்) முதுநிலை அரசு நடைமுறை நூல் தேர்ச்சி (G.O.M.) | தட்டச்சர்/கணிப்பொறி இயக்குபவர் | ரூ.4250/– |
| 3. | திரு.கே. சேகர், 8ஆம் வகுப்பு தேர்ச்சி | அலுவலக உதவியாளர்ர் | ரூ.2250/– |

3) மாநகராட்சி வருவாய் நிதி – துறை – கல்வி – பிரிவு 25 – சமுதாயக் கல்லூரி – கணக்குக் குறியீடு எண் – 116 நிரந்தரமற்றப் பணியாளர் ஊதியம் என்றத் தலைப்பில் 2009 – 2010க்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ.1,50,000/– லிருந்து தொடர்ந்து வழங்குவதற்கும்,

வரிசை எண் **(1)** முதல் **(3)** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழுக்கள்(கல்வி) (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**08.2.2010** அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.**8/2010** நாள் **08.2**.2010-ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“**22.02.2010**அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்**33/2010**நாள் **22.02.2010**ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது ”.

“இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளை நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ப.து.ந.க.எண்.264/2010**

**ஆணையாளர் அவர்களின் 24.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :127/2010 பொருள் எண்.70

**சென்னை மாநகராட்சி மற்றும் இதர உள்ளாட்சி அமைப்பு களுக்கு அதிகாரப் பகிர்வு**

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் செயல்முறை ஆணை எண்.RT/15631/2009, Dt.05.02.2010 படி ஏற்கனவே அளித்த அதிகார பகிர்வில் சில மாற்றங்களைச் செய்து Sub-Section (3) of Sction 9–C of the Town and Country Planning Act 1971 (as amended) அதிகார பகிர்வு ஆணையாளர் சென்னை மாநகராட்சி மற்றும் சென்னை பெருநகர இடங்களில் (CMA) உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கியுள்ளது. இதில் சாதாரண கட்டிடங்களுக்கு திட்ட அனுமதி வழங்குவதற்கும் அனுமதியின்றி 31.12.1989–க்கு பிறகு பிரிக்கப்பட்ட மனைகளை வரன்முறைப் படுத்துவதற்கும் (எட்டு மனைகளுக்கு மிகாமல்) ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறு திட்ட அனுமதி வழங்கும்பொழுது கீழ்கண்ட விதிகளுக்குட்பட்டு வழங்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

(அ) திட்ட அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்ட மனை வளர்ச்சிக் கட்டுப்பாடு விதிகளுக்குட்பட்டு இருக்க வேண்டும்.

(ஆ) பிரிக்கப்படாமல் அசலாக உள்ள மனை 1000 சதுர மீட்டருக்கு மிகாமல் இருக்க வேண்டும்.

(இ) எஞ்சியுள்ள மனைகளில் (Residual Plots) கட்டிடங்கள் இருப்பின், அவை சாதாரணக் கட்டிடங்களாகத்தான் இருக்க வேண்டும். வேறு வகையான / பிரிவைச் சேர்ந்தவையாக இருக்க கூடாது. மேலும் எஞ்சியுள்ள மனைகளில் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களில் விதி மீறல் இருப்பின், அவற்றின் மீது விதிமுறைப்படி தனியே நடவடிக்கை எடுக்கப்படும் என்ற நிபந்தனைக் குறிப்பு சேர்க்கப்பட வேண்டும். இவ்வதிகாரப் பகிர்வு 19.01.2010 முதல் நடைமுறைக்கு வருகிறது.

இவ்வதிகாரப் பகிர்வு சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த ஆணையாளர் அவர்களின் 19.02.2010 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது. ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டம் முடிந்த நிலையில் பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தன்மையை கருத்தில் கொண்டு சுற்றுக்கு விட்டு அனுமதி பெற்று இத்தகவல் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“ஏற்கனவே நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டம் 18.02.2010 அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு 25.02.2009 அன்று தீர்மான எண்.4/2010ன்படி நிலைக்குழு (நகரமைப்பு)வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதனை மன்றம் பதிவு செய்கின்றது’’

*******

**சு.து.ந.க.எண்.சி1/5157/2009**

**ஆணையாளர் அவர்களின் 25.02.2010 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண் :128/2010 பொருள் எண்.71

**மருத்துவ அலுவலர் பணிநியமனம்**

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறையில் 8 மருத்துவ அலுவலர் காலிப்பணியிடங்களை நிரப்ப பட்டியல் கோரப்பட்டு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து 09.10.2009 நாளிட்ட பட்டியலில் இருந்து 4 மருத்துவ அலுவலர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (செயல்முறை ஆணை சு.து.ந.க.எண்.சி1/2588/2009 நாள்.08.12.2009) இதனால் மீண்டும் 4 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் பின்னடைவு காலிப்பணியிடங்களாக ஏற்பட்டது. இதைத் தவிர 01.01.2009—க்கு பிறகு ஓய்வு மற்றும். இறப்பு காரணங்களினால் மேலும் 8 மருத்துவ அலுவலர் காலிப்பணியிடங்கள் ஏற்பட்டது. இதனால் தற்போது 12 மருத்துவ அலுவலர் பணியிடங்கள் காலியாக உள்ளன.

சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் பணி விதிகள் 1998—ன்படி மருத்துவ அலுவலர் அலோபதி பதவியினை நேரடி நியமனம் மூலம் நிரப்பப்பட வேண்டும்.

கல்வித் தகுதி அங்கீகரிக்கப்பட்ட பல்கலை கழகத்தினால் MBBS பட்டம் மற்றும் தமிழ்நாடு மருத்துவ அவையில் பதிவு செய்திருக்க வேண்டும். இப்பதவிக்கான காலமுறை ஊதிய விகிதம் ரூ.15600—39100+நிலை ஊதியம் 5400/—.

காலியாக உள்ள 12 மருத்துவ அலுவலர் காலிப்பணியிடங்களை நிரப்ப அரசாணை எண்.65 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள்.27.05.2009 தேதியிட்டு வெளியிடப்பட்டுள்ள புதிய இன சுழற்சி முறையினை பின்பற்றி நிரப்ப நபர் பட்டியல் கோரப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அரசாணை எண்.18 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (N) துறை நாள்.25.02.2008—ன்படி 1 காலிப்பணியிடத்திற்கு 5 நபர்கள் என்ற விகித அடிப்படையில் 58 நபர்கள் அடங்கிய பட்டியல் பெறப்பட்டது.

மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட பட்டியலில் கண்ட 58 நபர்களுக்கு 18.02.2010 அன்று சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜராகும்படி பதிவு அஞ்சல் தபால் மூலம் அழைப்பு கடிதங்கள் அனுப்பப்பட்டது. மொத்தம் 7 நபர்கள் மட்டுமே சான்றிதழ் சரிபார்ப்பிற்கு கலந்து கொண்டனர்.

பின்வரும் பட்டியலின்படி இனசுழற்சி அடிப்படையில் மருத்துவ அலுவலருக்கான பணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும்.

| | |
|---|---|
| O.C (P) | 01 |
| S.C (A.P) (P) | 01 |
| M.B.C (P) | 01 |
| B.C (P) | 01 |
| O.C (N.P) | 02 |
| S.C (N.P) | 02 |
| B.C (N.P) | 02 |
| O.C (N.P) (W) | 01 |
| M.B.C (N.P) | 01 |

18.02.2010 அன்று சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரான 7 நபர்கள் அடங்கிய விவரப்பட்டியல் பின்வருமாறு

| வ. எண். | பதிவு எண். | பெயர் மற்றும் விலாசம் | பிறந்த தேதி | வயது | இனம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2009 M 26339 S.F 12.11.2009 | Dr. D. Prabhu<br>157 Hospital St,<br>Themmompatty PO Gangavalli,<br>Salem Dist - 636 113. | 29.08.1984 | 26 Years | S.C (P) |
| 2 | Ex-Service Men 2008 M 05149 S.F 18.07.2007 | Dr. S. Chowdhry<br>1/54 Kuppathumaltur Ammudi PO<br>VCSM<br>Katpadi<br>Vellore – 632 518 | 27.06.1975 | 35 Years | M.B.C (P) |
| 3 | 2008 M 26881 S.F 06.11.2008 | Dr. M. Prasad,<br>38/4 Phase 11 Second St,<br>Vellore Dist – 632 009 | 10.06.1975 | 35 Years | M.B.C (P) |
| 4 | Legal Heirs of GG / TS 2002 MO 7694 S.F 21.05.2002 | Dr. Venkatesan<br>Madurai Veeran Illam,<br>Dr. Karunanithi St,<br>Moorthy Ngr,<br>Redhills, Chennai – 600 052 | 16.09.1978 | 31 Years | M.B.C (P) |
| 5 | 2000 FO 5356 S.F 07.06.2000 | Dr. U. Sudha<br>64 "B" Block<br>Dhashi Garden, Arcot Rd,<br>Vadapalani,<br>Chennai – 600 026 | 26.08.1976 | 33 Years | O.C (N.P) (W) Forward Class |
| 6 | 2001 FO 4802 S.F 19.04.2001 | Dr. M. Swarna,<br>10/1 East Main Rd,<br>Lakshman Nagar,<br>Jawahar Ngr Post,<br>Chennai – 600 082. | 13.09.1976 | 33 Years | O.C (N.P) B.C |
| 7 | 1999 F 14135 S.F 29.11.1999 | Dr. R. Getzy Swarna,<br>Plot No.G 49<br>Anna Nagar East,<br>Chennai – 600 102 | 09.06.1972 | 37 Years | B.C |

தற்போது மருத்துவ அலுவலர் காலிப்பணியிடங்களை பின்வரும் இன சுழற்சி முறையில் நிரப்ப படவேண்டும்.

| வ. எண் | நியமனம் செய்யப்பட வேண்டிய இனசுழற்சி | எண்ணிக்கை | கலந்து கொண்ட இனசுழற்சி விவரம் | தேர்ந்தெடுக்க வேண்டிய இனசுழற்சி |
|---|---|---|---|---|
| 1 | O.C (P) | 01 | நபர்கள் எவரும் நேர்காணலுக்கு கலந்து கொள்ளவில்லை | இல்லை |
| 2 | S.C (A.P) (P) | 01 | 01 நபர் மட்டும் கலந்து கொண்டார் | இவர் அரசுத் துறையில் பணிபுரிவதால் தேர்வு செய்யப்படவில்லை |
| 3 | M.B.C (P) | 01 | 03 நபர் மட்டும் கலந்து கொண்டார் | 01 நபர் தேர்வு செய்யப்பட்டார். மே 2010–ல் பணியில் சேருவதாக தெரிவித்துள்ளார் |
| 4 | B.C (P) | 01 | இவ்வின சுழற்சியில் எவரும் கலந்து கொள்ளவில்லை | இல்லை |
| 5 | O.C (N.P) | 02 | 01 நபர் மட்டும் கலந்து கொண்டார் | 01 நபர் |
| 6 | S.C (N.P) | 02 | இவ்வின சுழற்சியில் எவரும் கலந்து கொள்ளவில்லை | இல்லை |
| 7 | B.C (N.P) | 02 | 01 நபர் மட்டும் கலந்து கொண்டார் | 01 நபர் |
| 8 | O.C (N.P) (W) | 01 | 01 நபர் மட்டும் கலந்து கொண்டார் | 01 நபர் |
| 9 | M.B.C (N.P) | 01 | இவ்வின சுழற்சியில் எவரும் கலந்து கொள்ளவில்லை | இல்லை |

மேற்கண்ட பட்டியலில் O.C (P), B.C (P), S.C (N.P), மற்றும் M.B.C (N.P) ஆகிய இனசுழற்சிகளில் எவரும் நேர்காணலுக்கு வரவில்லை. S.C (P) இனசுழற்ச்சியில் டாக்டர். D. பிரபு என்ற ஒரு நபர் மட்டுமே கலந்து கொண்டார். இவர் அரசுத் துறையில் பணிபுரிவதால் பணி நியமனம் செய்ய இயலாது. M.B.C (P) இனசுழற்சியில் 3 நபர்கள் கலந்து கொண்டனர். இவர்களின் டாக்டர். எஸ். சௌத்திரி மற்றும் டாக்டர். M. பிரசாத் என்ற இரு நபர்கள் அரசுத் துறையில் பணிபுரிவதால் இவர்களை பணி நியமனம் செய்ய இயலாது. இதே இனசுழற்சியில் கலந்து கொண்ட மற்றொரு நபரான டாக்டர். வெங்கடேசன் என்பவர் வருகின்ற 2010 மே மாதம் பணியில் சேருவதாக தெரிவித்துள்ளதன் அடிப்படையில் இவருக்கு கால அவகாசம் அளித்து பணி நியமனம் செய்து பணி நியமன உத்திரவு வழங்கலாம். O.C (N.P) (W) இன சுழற்சியில் நிரப்பப்பட வேண்டி ஒரு பணியிடத்திற்கு டாக்டர். ப. சுதா மற்றும். M. சுவர்ணா ஆகிய இருவர் கலந்து கொண்டனர். இவ்விரண்டு நபர்களில் டாக்டர். U. சுதா என்பவரை O.C (N.P) (W) பிரிவில் பணியமர்த்தலாம் மற்றொரு நபரான டாக்டர். M. சுவர்ணா B.C வகுப்பை சார்ந்த இவரை நிரப்பப்பட வேண்டிய 2 O.C (N.P) பிரிவு இடத்தில் பணியமர்த்தலாம்.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மருத்துவ அலுவலர் பதவி வகுப்பு II–ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவியினை சென்னை மாநகராட்சி சட்ட விதி 1919 துணை விதி 85 (3) (பி)–ன்படி அரசின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மன்றம் நியமனம் செய்ய அதிகாரம் பெற்றுள்ளது. அரசாணை எண்.181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந 3) துறை நாள்.06.10.2009–ல் வகுப்பு II–ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள பதவிகளை உறுதியாக்கம் வழங்க மன்றத்திற்கு அரசு அதிகார பங்களிப்பு அளித்துள்ளது.

எனவே மேற்கண்ட விவரங்களின்படி 18.02.2010 அன்று சான்றிதழ் சரிபார்ப்பிற்கு ஆஜரான நபர்களில் பதிவு முப்பினை அடிப்படையாக கொண்டு தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய நபர்களின் பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

| வ. எண். | போட்டி இனம் | பெயர் மற்றும் விலாசம் | இனம் / இனசுழற்சி எண் | பிறந்த தேதி | வயது | மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக பதிவு எண். |
|---|---|---|---|---|---|---|
| 1 | M.B.C (P) | Dr. Venkatesan Madurai Veeran Illam, Dr. Karunanithi St, Moorthy Ngr, Redhills, Chennai – 600 052 | M.B.C (P) | 16.09.1978 | 31 Years | Legal Heirs of GG / TS 2002 MO 7694 S.F 21.05.2002 |
| 2 | O.C (N.P) | Dr. M. Swarna, 10/1 East Main Rd, Lakshman Nagar, Jawahar Ngr Post, Chennai – 600 082. | O.C (N.P) B.C | 13.09.1976 | 33 Years | 2001 FO 4802 S.F 19.04.2001 |
| 3 | B.C (N.P) | Dr. R. Getzy Swarna, Plot No.G 49 Anna Nagar East, Chennai – 600 102 | B.C | 09.06.1972 | 37 Years | 1999 F 14135 S.F 29.11.1999 |
| 4 | O.C (N.P) (W) | Dr. U. Sudha 64 "B" Block Doshi Garden, Arcot Rd, Vadapalani, Chennai – 600 026 | O.C (N.P) (W) Forward Class | 26.08.1976 | 33 Years | 2000 FO 5356 S.F 07.06.2000 |

எனவே மேற்படி பட்டியலில் உள்ள 4 நபர்களை மன்றத்தின் உறுதியாக்கத்திற்குட்பட்டு மற்றும் பணியில் சேரும் நாள் முதல் பணிவரன்முறைக்கு உட்பட்டு தற்காலிகமாக ரூ.15600–39100+நிலை ஊதியம் 5400/– என்ற ஊதிய விகிதத்தில் மருத்துவ அலுவலர்களாக பணி நியமனம் செய்து தற்காலிக பணி நியமன உத்திரவு வழங்க, அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்றத்தின் அனுமதி பெற சுற்றின் மூலம் நியமனக் குழுவின் அனுமதி வேண்டப்படுகிறது.

> "இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு இதனை நியமனக்குழு சுற்றில் பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******